T-UN-267

# நற்றிணை

மூலமும் உரையும்

எடுத்துக்காட்டுப் படிவம்

[illegible]லைக் கழகம், தஞ்சாவூர்

# நற்றிணை

மூலமும் உரையும்

எடுத்துக்காட்டுப் படிவம்

முனைவர் த. கோ. பரமசிவம்
இணைப் பேராசிரியர்
ஓலைச் சுவடித் துறை
சுவடிப்புலம்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

அச்சிட்டோர்:
**ஸ்ரீ வேலன் பிரஸ்**
132, செ. பி. கோயில் தெரு
சிதம்பரம் - 608 001

# நற்றிணை மூலமும் உரையும்

## உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | நற்றிணை மூலமும் உரையும் | 12 |
| 3. | பாடவேறுபாடு — ஒப்புநோக்கு அட்டவணை | 58 |
| 4. | பாட்டு முதற்குறிப்பு அகராதி | 64 |
| 5. | சில குறிப்புகள் | ,, |
| 6. | தொடரடைவு | 65 |
| 7. | சொல்லடைவு | 69 |

## சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம். | ... | அகநானூறு |
| இ. கள. | ... | இறையனார் களவியல் உரை |
| ஐங். | ... | ஐங்குறுநூறு |
| ஐங். த. | ... | ஐங்குறுநூறு தனிப்பாடல் |
| (ஒ) | ... | ஒப்பு |
| க. கா. | ... | களவியற் காரிகை |
| க-ரை | ... | கருத்துரை |
| க. வா. | ... | கடவுள் வாழ்த்து |
| கம். | ... | கம்பராமாயணம் |
| கல். | ... | கல்லாடர் உரை |
| கலி. | ... | கலித்தொகை |
| குறள் | ... | திருக்குறள் |
| குறி. | ... | குறிஞ்சிப்பாட்டு |
| குறு. | ... | குறுந்தொகை |
| சிந். | ... | சீவகசிந்தாமணி |
| சிலப். | ... | சிலப்பதிகாரம் |
| சி-பு | ... | சிறப்புக்குறிப்பு |
| சிறு. | ... | சிறுபாணாற்றுப்படை |
| சுந். | ... | சுந்தரர் |
| சூளா. | ... | சூளாமணி |
| சே. | ... | சேனாவரையர் |
| சொல். | ... | சொல்லதிகாரம் |
| சொ-ள் | ... | சொற்பொருள் |
| ஞான. | ... | ஞானசம்பந்தர் |
| திருக். | ... | திருக்கோவையார் |
| தி. மா. | ... | திணைமாலை |
| திருமு. | ... | திருமுருகாற்றுப்படை |
| தி. மொ. | ... | திணைமொழி ஐம்பது |
| திருவாய். | ... | திருவாய்மொழி |
| திவ். | ... | திவ்வியபிரபந்தம் |

| | | |
|---|---|---|
| து. ப. | ... | ஔவை சு. துரைசாமிப்பிள்ளை பதிப்பு |
| தெய். | ... | தெய்வச்சிலையார் |
| தேவா. | ... | தேவாரம் |
| தொல். | ... | தொல்காப்பியம் |
| நச். | ... | நச்சினார்க்கினியர் |
| நம். | ... | நம்பியகப்பொருள் உரை |
| நற். | ... | நற்றிணை |
| நெடு. | ... | நெடுநல்வாடை |
| ப. கு. | ... | பழைய குறிப்பு |
| பட். | ... | பட்டினப்பாலை |
| பதிற். | ... | பதிற்றுப்பத்து |
| பரி. | ... | பரிபாடல் |
| பாண்டிக். | ... | பாண்டிக்கோவை |
| பி. ப. | ... | பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் பதிப்பு |
| பு. வெ. | ... | புறப்பொருள் வெண்பாமாலை |
| புறம். | ... | புறநானூறு |
| பெருங். | ... | பெருங்கதை |
| பெரும். | ... | பெரும்பாணாற்றுப்படை |
| பொ. | ... | பொருளதிகாரம் |
| பொரு. | ... | பொருநராற்றுப்படை |
| பொ-ரை | ... | பொழிப்புரை |
| பொ-ள் | ... | பொருள்கோள் |
| மணி. | ... | மணிமேகலை |
| மது. | ... | மதுரைக்காஞ்சி |
| மலை. | ... | மலைபடுகடாம் |
| முல். | ... | முல்லைப்பாட்டு |
| (மு) | ... | முழுவதும் |
| (மே) | ... | மேற்கோள் |
| வி. பா. | ... | வில்லிபாரதம் |

குறிப்புகளில் வரும் எண்களில் முதல்எண் பாட்டு எண்ணையும், அடுத்தது பாடலின் அடியையும் குறிப்பதாகும்.

# முன்னுரை

'பழைய நூல்களைப் பாதுகாத்து, அவற்றை உரிய முறையில் பதிப்பித்து வெளியிடவேண்டும், அதன்வழித் தமிழர் அறிவு நலம், நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் புலப்படுத்த வேண்டும்'· தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இவ் உயரிய நோக்குடன் அமைக்கப் பெற்றதே சுவடிப்புலம். இப் புலத்தின் முதன்மை வாய்ந்த துறையாக ஓலைச்சுவடித்துறை அமைக்கப்பெற்றது. இத் துறையின் நோக்கம் சுவடிகளைத் தேடித்தொகுத்துப் பாதுகாத்தலும் பதிப்பித்தலும் ஆகும். நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் திட்டம் இரண்டு நோக்கங்களில் செயலாற்றப் பெறுகிறது. ஒன்று இதுவரை வெளிவராத நூல்களைப் பதிப்பித்து வெளியிடல். மற்றொன்று இதுவரை வெளிவந்து உலாவிக்கொண்டிருக்கும் பழைய நூல்களை, மீண்டும் சுவடிகளுடன் ஒப்பிட்டு, பாடங்களைச் சீர்தூக்கி, வேண்டிய ஆய்வுக்குறிப்புகளுடனும் அகராதிகளுடனும் பதிப்பித்து வெளியிடல். இந்த வகையில் குறுந்தொகை என்னும் சங்க இலக்கியம் இத் துறையின் தலைவர் பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை அவர்களால் ஆய்வு செய்யப்பெற்று, 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவிலே வெளியிடப் பெற்றது.

## நற்றிணை - சுவடிகள்

குறுந்தொகைப் பதிப்புமுறையை அடியொற்றிய நிலையில் தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்பெறும் நற்றிணை நூல் இப்போது ஆய்வு செய்யப்பெற்று வருகிறது. இந் நூலின் ஆய்வுக்கு, காகிதப் படிகளாகிய இரண்டு சுவடிகளும் அச்சுப்படி நூல்கள் ஆறும், ஆக எட்டு நூல்கள் பயன்படுத்தப் பெறுகின்றன. அவை கால அடைவில் பின்வருமாறு அமைகின்றன:

1. கீழ்த்திசைச் சுவடி நூலக நற்றிணைச் சுவடி — காகிதப்படி, 1893 / 94-ல் வாங்கப் பெற்றது.

2. மகாவித்துவான் ரா. இராகவையங்கார் சுவடி — காகிதப்படி, 1899-ல் எழுதப்பெற்ற குறிப்புக்கொண்டது.

3. பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் பதிப்பு — 1915-ல் வெளியிடப்பெற்றது. (நற்றிணை மூலமும் உரையும் — இதுவே இந் நூலின் முதல் அச்சுப்படி)

4. பாட்டும் தொகையும் - சங்க இலக்கியப்பதிப்பு (மூலம் மட்டும்) — 1940-ல் வெளியிடப்பெற்றது.

5. நற்றிணை மூலம், மர்ரே ராஜம் பதிப்பு — 1957-ல் வெளியிடப்பெற்றது.

6. கழகப்பதிப்பு — பெருமழைப்புலவரின் குறிப்புரைகளுடன் — (நற்றிணை மூலம் உரையும்) — 1962-ல் வெளியிடப் பெற்றது.

7. உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை பதிப்பு (நற்றிணை மூலமும் உரையும் 2 பகுதிகள்) — 1966 & 1968-ல் வெளியிடப்பெற்றன.

8. புலியூர்க்கேசிகன் பதிப்பு (நற்றிணை மூலமும் தெளிவுரையும் 2 பகுதிகள்) — 1967 & 1980-ல் வெளியிடப்பெற்றன.

இந் நூல்களில் கண்ட பாடவேறுபாடுகளுடன் உரையாசிரியர் பலரும் அவர்தம் மேற்கோளாட்சிகளில் எடுத்தாளும்போது கொண்ட பாடங்களும் தொகுத்துப் பயன்படுத்தப்பெற்றன.

இந் நூல்களில் பின்னத்தூரார் பதிப்பு ஒரு முறையே வெளி வந்தது. ஆயின், இதே நூல் பெருமழைப்புலவரின் குறிப்புரையுடன் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் பல பதிப்புகளைக் கண்டுள்ளது. உரைவேந்தர் ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்களின் நற்றிணை மூலமும்உரையும் ஒரு பதிப்பையே கண்டு, அரிதாகக் காணக்கிடக்கிறது. சங்க இலக்கியப் பதிப்பு பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை அவர்களால் 1967-ல் இரண்டாவது

முறையாகக் கொண்டுவரப்பட்டது. மர்ரே ராஜம் பதிப்பினரின் நற்றிணை மூலம் நியூசெஞ்சுரி பதிப்பினரால், படப்பதிப்பாக, இரண்டாவது முறை 1981-ல் வெளியிடப் பெற்றுள்ளது. மக்கள் பதிப்பாக வெளியிடப்பெற்ற புலியூர்க்கேசிகன் அவர்களின் தெளிவுரைப் பதிப்பும் ஒருமுறைக்குமேல் வெளிவந்துள்ளது. ஒவ்வொரு பதிப்பும் ஒவ்வொரு வகையில் சிறப்புடையன. (விரிவான ஆய்வு இப் பதிப்பில் இடம் பெறும்).

சுவடிகளில், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகச் சுவடியைப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்கள் பார்வையிட்டதாகக் குறித்துள்ளார். ஆயின் அதில் காணப்பெறும் பாடவேறுபாடுகள் அனைத்தையும் அவர்தம் நூலுள் காட்டவில்லை. மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்களின் சுவடியை இதுவரை யாரும் பார்வையிட்டதாகத் தெரியவில்லை. அச் சுவடியிலிருந்தும் சில நல்ல பாடங்கள் கிடைக்கின்றன (சுற்றுப — 5:4).

ஒளவை துரைசாமிப்பிள்ளையவர்கள் தம் பதிப்பில் பாடவேறு பாடுகளை அடிக்குறிப்பில் காட்டியுள்ளார். அதிகப்படியான பாட வேறுபாடுகளைக் காட்டும் பதிப்பாகவும், புதிய பாடங்களை மேற்கொண்ட பதிப்பாகவும் விளங்குவது அவர்தம் பதிப்பே. எனினும் அவர் கண்களுக்கும் தப்பிய பாடவேறுபாடுகள் பல இப்போது கிட்டியுள்ளமை குறிக்கத் தக்கதாகும்.

வெளிவந்த நூல்களில், மூலத்தையும், தாம் கொண்ட பாடங்களுக்குப் பொருளையும் தெளிவாக்கிய பதிப்புகள் இரண்டேயாகும். அவை பின்னத்தூரார் பதிப்பும், ஒளவை துரைசாமிப்பிள்ளையவர்களின் பதிப்புமே ஆகும். இப் பதிப்புகளே ஓலைச்சுவடிகளுடன் சீர்தூக்கிப் பதிப்பிக்கப் பெற்றன. (சங்க இலக்கியப் பதிப்பும் ஓலைச்சுவடிகளை ஒப்பிட்டுப் பதிப்பிக்கப் பெற்றதேயாயினும் — உரையின்மையால் அவர்கொண்ட பாடங்களின் வன்மை மென்மையை முழுமையாய் உணர முடியவில்லை) எனவே, இப் பதிப்பின் பாடத்தேர்வுக்கும் மறுப்புக்கும் இவ்விரு பதிப்புகளையே பெரிதும் ஏதுவாகக் காட்டமுடியும் என்பதை இங்கே நினைவிருத்த வேண்டும்.

## தமிழ்ப் பல்கலைக் கழக நற்றிணைப் பதிப்பு

தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆய்ந்து வெளியிடஇருக்கும் இந் நற்றிணைப் பதிப்பு அச்சு முயற்சியில் ஏழாவது நூலாக அமையும். இப் பதிப்பின் அமைப்பு முறையை அறிமுகப்படுத்துவதே இப் படிவத்தின் நோக்கமாகும். நற்றிணைப் பதிப்புமுறை வருமாறு:

**நூலின் தலைப்பு:** நற்றிணை மூலமும் உரையும் (இரண்டு பகுதிகளாக வெளிவரும்)

**நூலின் உள்ளுறை:**

1. முன்னுரை
2. நற்றிணை மூலமும் உரையும்
3. பாட்டு முதற்குறிப்பு அகராதி
4. பாடவேறுபாடு — ஒப்புநோக்கு அட்டவணை
5. பாடினோரும் பாடற்குறிப்பும்
6. பாடலில் சுட்டப்பெற்ற தலைவர், புலவர், ஊர் முதலியன
7. திணைமுறை
8. கூற்றுவகை
9. தொடரடைவு
10. சொல்லடைவு.

இவற்றுள் மூலமும்உரையும் பகுதியில் பிற சங்கஇலக்கிய ஒப்புமை காட்டும் பகுதி, பாடத்தேர்வுக்குறிப்புப் பகுதி, பாடவேறு பாடு — ஒப்புநோக்கு அட்டவணை, தொடரடைவு, சொல்லடைவு ஆகியன சிறப்பு ஆய்வுப்பகுதிகளாக அமையும்.

## முன்னுரை

இப் பகுதி, நற்றிணை பற்றிய விரிவான செய்திகள் பல வற்றையும் கொண்ட ஆய்வு முன்னுரையாக அமையும். தொகை நூல் வரலாறு—நற்றிணையின் சிறப்பு—நற்றிணையின் காலம் — தொகுப்பு வரலாறு — பதிப்பு வரலாறு — பின்னத்தூரார்

பதிப்பு — சங்க இலக்கியப் பதிப்பு — மர்ரே ராஜம் பதிப்பு — பெருமழைப்புலவரின் கழகப்பதிப்பு — ஔவை துரைசாமிப்பிள்ளை பதிப்பு — புலியூர்க்கேசிகன் பதிப்பு — அவற்றின் தனித்தன்மைகள் — பாடல் அமைப்பு — பாடல் வகை — கூன்பெற்ற பாடல் — பழைய குறிப்பு — உரை அமைப்பு — பாடவேறுபாடுகள் — புதிய பாடங்கள்—பதிப்புகளிடையே காணும் வேறுபாடு—புத்துரை அமைப்பு — பின் இணைப்புகள் — தொடரடைவின் அமைப்பும் பயனும் — நன்றியுரை ஆகியன இடம் பெறும் ஆய்வுரையாக இஃது அமையும்.

இம் முன்னுரையின் இணைப்புகளாகக் கீழ்வரும் அடைவுகளும் தரப்பெறும்.

1. பின்னத்தூரார் பதிப்பு — சங்க இலக்கியப் பதிப்பு — பாட வேறுபாடுகள்
2. பின்னத்தூரார் பதிப்பு — ஔவை துரைசாமிப்பிள்ளை பதிப்பு — பாடவேறுபாடுகள்
3. சங்க இலக்கியப் பதிப்பு — ஔவை துரைசாமிப்பிள்ளை பதிப்பு — பாடவேறுபாடுகள்
4. சங்க இலக்கியப் பதிப்பு — தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு — பாடவேறுபாடுகள்
5. ஔவை துரைசாமிப்பிள்ளை பதிப்பு — தமிழ்ப் பல்கலைக் கழகப்பதிப்பு — பாடவேறுபாடுகள்
6. தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு — புதிய பாடங்கள்
7. நற்றிணை — சில புள்ளி விவரங்கள்

(நற்றிணை பற்றிய புள்ளி விவரங்கள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும். பாடல்களின் எண்ணிக்கை — மொத்த அடிகள் — மொத்த சீர்கள் — பாடவேறுபாடு கொண்ட சீர்கள் — பாடவேறுபாடு விழுக்காடு% — மாறுபாடற்ற பாடல்கள் — பாடிய புலவர்கள் — ஆசிரியர் பெயர் இல்லாதன — ஆண்பாற் பெண்பாற் புலவர் — அவர் தம் பாடல் எண்ணிக்கை — தொடரால்

பெயர்பெற்ற புலவர் — பாடலின் அடி எல்லை — விதிவிலக்கான பாடல்கள் — தனிச்சொல் பெற்றன—நேரிசை ஆசிரியப்பாவின — நிலை மண்டில ஆசிரியப்பாவின — திணை வகையில் பாடல்கள்— கூற்று வகையில் பாடல்கள் — தொகுப்பு விவரம் போன்ற புள்ளி விவரங்கள்)

## நற்றிணை மூலமும் உரையும்

இப் பகுதி கீழ்க்கண்ட 11 பகுதிகளைக் கொண்ட முறையில் அமைவதாகும்.

1. **தலைப்பு: பாட்டு எண். திணை — கூற்று**
2. **மூலம் :**
3. **ஆசிரியர் பெயர்:**

— ஆசிரியர் பெயர்

4. **பழங்குறிப்பு:** * ... ... ... ... ... ... *
5. **பொருள்கோள் முறை**
6. **மரபு தழுவிய பொழிப்புரை**
7. **கருத்துரை**
8. **அருஞ்சொற்பொருள்**
9. **சிறப்புக்குறிப்பு:** இறைச்சி, உள்ளுறை, பாடத் தேர்வுக் குறிப்புகள்
10. **மேற்கோளாட்சி**
11. **ஒப்புமை**

1. **தலைப்பு:** ஒவ்வொரு பாடலுக்கும் பாட்டு எண் - அப் பாட்டுக்குரிய திணை, யாருடைய கூற்றாக அமைவது என்னும் இரு செய்திகளும் தலைப்பாக அமைக்கப்பெறும். (இம்முறை ஏடுகளில் காணப்பெறவில்லை) காட்டு: **1. குறிஞ்சி—தலைவி கூற்று**

2. **மூலம்:** நற்றிணைப் பாட்டின் மூலம் அடிவரையறையுடன் சந்தி பிரிக்கப்பெற்று, சீர்கெடாமல் அமைக்கப்பெறும். சந்தி பிரிப்பிலும் தொகைச் சொற்களைப் பிரிக்காமை, உருபுகளைப் பிரிக்காமை போன்ற விதிமுறைகளில் மர்ரே பதிப்பினர் கையாண்ட

முறை பின்பற்றப்பெறும். ஆயின், குறியீடுகள் பயன்படுத்தப் பெறா. பாட்டின் தொடக்கத்தும், இடையிலும் வரும் தனிச்சொற் கள் தனித்துக் காட்டப்பெறும். 5 அடிகளுக்கு ஒருமுறை பாட்டின் அடியைக் குறிக்கும் எண் இடப்பெறும். பாட்டின் முடிவில் அப் பாட்டு எத்தனை அடிகளைக் கொண்டு முடிந்தது என்பதைக் குறிக் கும் எண் பிறை வளைவுக்குள் அமைத்துக் காட்டப்பெறும் (12).

3. **ஆசிரியர் பெயர்:** மூலத்தைத் தொடர்ந்து, அதன் கீழே வலப்புறத்தில் ஆசிரியர் பெயர் காட்டப்பெறும். உடுக் குறி* இட்டுக் காட்டப்பெற்ற ஆசிரியர் பெயர்கள் பிற பதிப்பு களிலும் கிட்டிய ஏடுகளிலும் காணப்பெறாதன – ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்களின் பதிப்பில் மட்டுமே காணப்பட்டன என்ற குறிப்பைக் காட்டுவனவாம்.

4. **பழைய குறிப்பு:** சுவடிகளில் பாடலை ஒட்டிக் காணப் பெற்ற பழையகுறிப்பு இப் பகுதியில் சந்தி பிரிக்கப்பெற்ற நிலை யில் அமைக்கப்பெறும்.

5. **பொருள்கோள்:** பாட்டின் பொருள்செல்லும் நெறியை — இப் பதிப்பு எவ்வாறு வினைமுடிபுகளைக் கண்டு பொருள் செய் கிறதோ, அச் சொற்களை அவை இடம்பெறும் அடி எண்களுடன் பொருத்திக் காட்டுவதாக இஃது அமையும்,

(காட்டு: பாட்டு 2-ல் சுரனே (6), நீங்கும் இளையோன் உள்ளம் (8) கொடிதே (10) இம் முறை பாட்டின் பொருளைத் தெளிய அறியும் திறவுகோலாக அமையும்).

6. **பொழிப்புரை:** பொருள்கோளில் காட்டப்பெற்ற நெறியில், பாட்டின் பொருள் பொழிப்புரையாக இப் பகுதியில் இடம்பெறும். பொழிப்புரையில் குறியீடுகள் பயன்படுத்தப்பெறும். தோன்றா எழுவாய், இசை எச்சம் போன்றன வேண்டியவிடத்துத் தெளிவு கருதிப் பயன்படுத்தப்பெறும்.

7. **கருத்துரை:** பாடலின் மையக்கருத்தை ஒட்டிய, பாடலில் சுட்டப்பெற்ற செய்தி இப் பகுதியில் சுருக்கமாக இடம்பெறும்.

8. **அருஞ்சொற்பொருள்:** இப் பகுதியில் எளிதில் பொருள் உணரமாட்டாத அரிய சொற்களுக்குப் பொருள் காட்டப்பெறும். சில இடங்களில் தெளிவு கருதிச் சொல்லின் வடிவு தொழிற்பெயர்

நிலையில் மாற்றிப்பொருள் காட்டப்பெறும் (கிளர்க்கும்: கிளர்த்தல் — எழுப்புதல் 4: 9).

9. **சிறப்புக்குறிப்பு:** இப் பகுதியில் பதிப்பாசிரியரின் தனிப்பட்ட ஆய்வுக்குறிப்புகள் இடம் பெறும். பாட்டில் அமைந்த இறைச்சிப்பொருள், உள்ளுறைக்குறிப்பு, பின்புலக்குறிப்பு — சொற்களின் சிறப்பு நயங்கள், பாடங்களின் முரண்பாடுகள் — பாடத்தேர்வுக்கான ஏது போன்றவற்றை விளக்கும் ஆய்வுப் பகுதியாக இஃது அமையும்.

## பாடத்தேர்வு பற்றிய ஒரு குறிப்பு

இந் நற்றிணை நூலுக்கு நம்பிக்கைக்குரிய பழைய ஏடு என்ற நிலையில் எந்த ஏடும் கிடைக்கவில்லை. கிட்டிய இரு காகிதப்படிகளிலும் தவறுகளும் காணப்படுகின்றன. சிறந்த பாடங்களும் காணப்படுகின்றன. பதிப்புகளும் இந் நிலையிலேயே உள்ளன. இந்த ஏட்டில் காணப்பட்ட பாடம், அந்தப் பதிப்பில் காணப்பட்ட பாடம் — எனவே, அது நம்பிக்கைக்குரிய பாடம் என்று துணிந்து விடுவதற்கில்லை. பாடங்கள் எங்குக் காணப்பட்டாலும் ஒருபடித்தாக வைத்துச் சீர்தூக்கப்பட்ட பின்பே துணியப்பெற்றன.

இந் நூலின் பாடல்களில் காணப்படாத பொருத்தமான நல்ல பாடங்கள் சில உரையாசிரியர் காட்டும் மேற்கோள்களிலிருந்து தேர்ந்து கொள்ளப்பெற்றன. அவ்வாறு தேர்ந்தபோது மேற்கண்ட 2 சுவடிகளும் 6 பதிப்பு நூல்களும் காட்டாத பாடமாயினும், ஏற்புடைமை கருதித் துணியப்பெற்றன (வளைஞரல் — க. வா. 2, உறுப — 1: 9).

இவ்வாறே ஏடுகளிலும் பதிப்புகளிலும் மிக அருகிக் காணப்பெறும் — ஒரே ஆதரவுகொண்ட பாடமாயினும், சங்க இலக்கியக் வழக்குப் பெற்றதாயின், பொருட்செறிவு கொண்டதாயின் அது துணிந்து மேற்கொள்ளப்பெற்றது (சுற்றுபு-5:4, தெறிமட மாற்கு-6:8). பொருள் மாறுபடாத, யாப்பு கெடாத, ஓசையில் மாற்றம் காட்டாத, சங்க இலக்கிய வழக்குப் பெற்ற பாடங்கள் மாறுபட்டுக் காணப்படும்போது, ஏடுகளில் மிகுதியாகப் பயிலப்படும் பாடத்தைத் தேர்ந்து கொள்ளும் முறை கையாளப்பெற்றது (கொடிதே-2:10).

யாப்போசையும் பொருளமைதியும் ஒருபடித்தாகப் பெற்ற பாடங்களுள் மாறுபாடு காணுமிடத்து - இலக்கண அமைதியில் மட்டும் மாறுபட்டு நிற்குமிடத்து - தொல்காப்பிய மரபைப் பின் பற்றும் பாடம் அருகிக் காணப்பெற்றாலும், அதுவே சிறந்த பாட மாகத் தேர்ந்து கொள்ளப்பெற்றது (உள்ளினென் - 3:7). இவ் வாறே, பொருள் கொள்ளுமிடத்தும் உருபுகள் புணர்ந்த நிலையி லும் கண்ணழிக்குமிடங்களிலும் பாட்டின் மையக் கருத்தை விளக் கும் மரபுநிலை கொண்ட முறையே பின்பற்றப்பட்டது (மதனின் மாமை – 6:2).

பாடலின் மையக்கருத்தில் பொருள் மாற்றம் காட்டாத பாடங் கள் மாறுபட்டுக் காணுமிடத்து, எதுகை மோனை போன்ற செய்யு ளினிமை கொண்ட பாடங்கள் தேர்வு செய்யப் பெற்றன (கறிவளர் சிலம்பு - 7:9). பொருள் பொருத்தமில்லாத பாடங்கள் செய்யு ளினிமை கொண்ட பாடங்களாயினும் தள்ளப்பெற்றன.

தொல்காப்பிய மரபைப் பிழைத்த பாடமாக இருப்பினும், எல்லா ஏடுகளிலும், பதிப்புகளிலும் ஒருபடித்தாகக் காணும் பாட மாக அது அமையுமானால், அவ்வாறே துணிந்து மேற்கொள்ளப் பெற்றது. மரபு பிழைத்து விட்டதே என்பதற்காகப் பாடத்தைத் திருத்தி ஏற்றும் முறை யாண்டும் கையாளப் பெறவில்லை (ஏறொடு - 7:5).

சங்க இலக்கியப் பாடல்கள் யாவும் பாடலின் பொருளுக்கு முதலிடம் வழங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. யாப்பு, செய்யுளின்பம் போன்றன பின்னாளிலேயே பெரிதுபடுத்தப் பெற்றன. பொருளின் உயிர்நாடித் தன்மையைத் துறந்த பிற் காலப் பாடல்கள் பல, செய்யுளழகில் தலைநின்றும் காணப்படு கின்றன. பாடங்களைத் தேர்வு செய்யும்போது இப் பொதுக் கருத்தை மனத்தில் இருத்தி - பொருட்சிறப்புக்கும், பொருட் செறிவுக்கும், பொருட்பொருத்தத்துக்கும் பாடலின் மையக் கருத் துக்கு அரண் செய்யும் பாடங்களே இப் பதிப்பில் தேர்வு செய்யப் பெற்றன. தேர்வு செய்யப்பெற்ற பாடங்களுக்கான காரணத்தை அந்தந்தப் பாடல்களின் சிறப்புக்குறிப்புப் பகுதியில் இப் பதிப்பு கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். எந் நிலையிலும் ஏடுகளிலோ, பதிப்புகளிலோ மேற்கோள்களிலோ

காணப்படாத – ஊகமான பாடங்கள் துணியப் பெறவில்லை என்ப தும் குறிக்கத் தக்கதாம்.

10. **மேற்கோளாட்சி:** இப் பகுதி தொல்காப்பிய உரைகளில் உரையாசிரியர், இந் நூலின் பாடல்களை எடுத்தாண்ட இடங் களைச் சுட்டுவதாக அமையும். தொல்காப்பிய உரைகளேயன்றி நம்பியகப்பொருளுரை, களவியல் உரை, களவியற்காரிகை உரை திருக்குறள் உரைகள் போன்ற நூல்களிலிருந்தும் மேற்கோள் ஆண்ட இடங்கள் சுட்டப்பெறும். மேற்கோளிடத்து இப் பாட்டை முழுமையாக எடுத்துக்காட்டியிருந்தால் (மு) என்னும் குறிப்புடன் அது அமைக்கப்பெறும். மேற்கோள்களை எடுத்தாளும்போது, இளம்பூரணர், நச்சினார்க்கினியர் எனத் தொடரும் கால அடிப் படையைக் கொண்ட முறைவைப்பை இப் பதிப்பு பயன்படுத் துகிறது.

நற்றிணைப் பாடல்களுக்குச் சில இடங்களில் அவர்கள் கொண்ட பொருள், அவர்கள் கண்ட திணைமுறை கூற்றுமுறை ஆகியன புலப்பட இப் பகுதி ஒரு வாய்ப்பை உண்டாக்கு வதாகும்.

11. **ஒப்புமை:** இப் பகுதியில் நற்றிணைப் பாடல்களில் காணப்பெறும் தொடர்கள், அரிய சொல்லாட்சிகள், வழக்குகள், கருத்துகள் ஆகியவற்றுக்குப் பிற சங்க இலக்கியங்களில் காணப் பெறும் இணையான தொடர்கள், சொற்கள், கருத்துகள், வழக்கு கள் ஆகியன எடுத்துக் காட்டப்பெறும். பாடலின் அடியோ, சொல்லோ அவ்வாறே ஒத்திருக்குமானால் அது முதற்கண் எடுத்துக் காட்டப்பெறும். ஒருவாறு ஒத்துக் காணப்பெறுவன வற்றை அடுத்தும், ஒத்த கருத்துகளை இறுதியாகவும் அமைக்கப் பெறும். எடுத்துக் காட்டப்பெறும் நூல்கள் பாட்டும் தொகையும் என்ற முறையில் 'முருகு பொருநாறு', 'நற்றிணை நல்ல குறுந் தொகை' என்னும் வெண்பாக்களில் காணப்பெறும் முறை வைப் பிலேயே அடைவு செய்யப்பெற்றிருக்கும். ஆங்காங்கே சிலப் பதிகாரம், மணிமேகலை, தேவாரம், திவ்விய பிரபந்தம், சிந்தா மணி, திருக்கோவையார், பெரியபுராணம், கம்பராமாயணம் போன்ற நூல்களிலிருந்தும் ஓரளவு ஒப்புமைப் பகுதிகள் காட்டப் பெற்றுள்ளன.

இவ் ஒப்புமைப் பகுதி சங்க இலக்கிய மொழியமைப்பின் மரபை எடுத்துக்காட்டுவதுடன், பாடங்களைத் தேர்வு செய்வதற்கும் பெரிதும் பயன்தருவதாகும். காட்டு: தெறி – எறி (6:8), உலவை (2:2).

**பாடவேறுபாடு - ஒப்புநோக்கு அட்டவணை:** இதுவரை கிட்டிய பாடவேறுபாடுகள் அனைத்தும் (சுவடிகளிலிருந்தும், அச்சுப் படிகளிலிருந்தும் காணப்பெற்ற) சுவடிகளின் கால அடிப்படையில் அட்டவணைப் படுத்தப் பெற்று தொகுத்துக் காட்டப் பெறும் பகுதியாக இஃது அமையும். இவ்வாறு ஒரே இடத்து அனைத்துப் பாடங்களையும் வரிசை முறையில் தொகுத்துக் காட்டுவது ஆய்வாளர்க்குப் பெரிதும் பயன்தரவல்லதாகும்.

**தொடரடைவு:** சங்க இலக்கிய மொழியமைப்பும், தொடரமைப்பும் உவமை மரபுகளும், அடைச்சிறப்புகளும் தனித்தன்மை கொண்டன, தனிப்பண்புகளைக் காட்டுவன. இவற்றை ஆய்வு செய்வார்க்கும் சங்க இலக்கிய மொழியமைப்பில் ஒப்புமை காண் பார்க்கும் பெரிதும் பயன்தரத் தக்க வகையில் இப் பகுதி அமைக்கப்பெறுகிறது. பத்துப் பாடல்களுக்கான தொடரடைவு (இப் படிவத்தில்) எடுத்துக்காட்டாக அமைக்கப்பெற்றுள்ளது.

**சொல்லடைவு:** நற்றிணைப் பாடல்களில் காணப்பெறும் சொற்கள் அனைத்தும் அடைவு செய்யப்பெற்றுப் பொருளுடன் காட்டப்பெறும் பகுதியாக இஃது அமையும். பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், இடைச்சொற்கள், உரிச்சொற்கள் ஆகிய அனைத்தும் தனித்தனியே அடைவு செய்யப்பெற்று பொருள் காட்டப்பெறும். தொகைச் சொற்கள், சிறப்பு வழக்குகள், மரபுத் தொடர்கள் ஆகியவற்றை அவ்வாறே எடுத்தாண்டும் தனித் தனியே பிரித்து எடுத்துக்காட்டியும் அடைவு செய்யப்பெற்றுள்ளன. இப் படிவத்தில் சொல்லடைவு எவ்வாறு அமையும் என்பதும் காட்டப்பெற்றுள்ளது.

இந்தச் சிறிய அறிமுகத்துடன் இம் மாதிரிப் படிவத்தை அணுகுவோமாக.

# நற்றிணை மூலமும் உரையும்

**திணை : பாடாண் - துறை : கடவுள் வாழ்த்து**

மாநிலம் சேவடி ஆகத் தூநீர்
வளைஞரல் பௌவம் உடுக்கை ஆக
விசும்புமெய் ஆகத் திசைகை ஆகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ஆக
இயன்ற எல்லாம் பயின்றுஅகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதுஅற விளங்கிய திகிரி யோனே. (7)

— *பாரதம் பாடிய பெருந்தேவனார்*

**பொருள்கோள்:** மாநிலம் சேவடி ஆக (1), உடுக்கை ஆக (2), கை ஆக (3), கண் ஆக (4), பயின்று அடக்கிய (5), திகிரி யோனே (7), வேத முதல்வன் என்ப (6).

**பொழிப்புரை:** 'பெரிய நிலவுலகமே தன் செந்நிறத் திருவடி களாகவும், வெள்ளிய சங்குகள் ஒலிக்கின்ற பரந்த கடலே தன் ஆடையாகவும், வானமே தன் உடம்பாகவும், திசைகளே தன் கைகளாகவும், குளிர்ந்த கதிர்களையுடைய திங்களும் ஞாயிறுமே தன் கண்களாகவும் கொண்டு, உலகில் அமைந்த பொருள்கள் அனைத்திலும் தங்கி, அவற்றைத் தன்னுள் அடக்கிய, குற்றம் தீர விளங்கிய சக்கரப்படையையுடையவனே வேதங்களுக்கு முதல்வன் ஆவான்' என்று சொல்லுவர் சான்றோர்.

**கருத்துரை:** இயன்றவெல்லாம் பயின்று அகத்து அடக்கிய மாயோனே வேத முதல்வன் என்பதாம்.

**சொற்பொருள்:** தூநீர் - வெண்மை நிறம், தூய நீரும் ஆகும், மாநிலம் - பெரிய நிலவுலகம், வளை - சங்கு, ஞரலுதல்-ஒலித்தல், பௌவம் – கடல், விசும்பு – வானம், சுடர்-ஞாயிறு, வேதம் – ஞானநூல்கள், அவற்றால் முதற்பொருள் என்று துணிந்து கூறப்படுதலால் இறைவனை வேதமுதல்வன் என்றார். இதனை, 'சாஸ்திர யோனித்வாத்' என்று பிரம சூத்திரம் கூறுவதாக, வாலறிவன் என்பதோடு ஒப்பிட்டுக் காட்டுவார் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் (நற்றிணை நாடகங்கள் பக். 116–117). சிலப்பதிகாரம், வேதமுதல்வன் என்ற சொல்லால் அருகனையும் (சிலப். 10:189), நான்முகனையும் (சிலப். 14:48, 22:35) குறிப்பிடுகிறது. ஞானசம்பந்தர், 'வெந்த பொடிப் பூசிய வேதமுதல்வன்' (திருவிடைமருதூர் பதிகம்: 4) என்று சிவபெருமானைக் குறிப்பிடுகின்றார். 'வேத முதல்வன் விளங்குபுரி நூலன்'என்று திருமாலைக் குறிக்கிறது ஆழ்வார்பாசுரம் (பெரியதிரு. 4:2), வேதமுதல்வன் என்று அருகனைக் குறிப்பிடுகிறது திருப்பாமாலை (1). எனவே, வேதமுதல்வன் என்பதற்கு இறைவன் எனப் பொதுவாகப் பொருள் கொள்ளல் தகும். திகிரி– சக்கரப்படை, சுதரிசன சக்கரம் என்பர். ஏ - தேற்றப்பொருளில் வந்தது.

**சிறப்புக்குறிப்பு:** நற்றிணை முதலிய தொகை நூல்களுக் கெல்லாம் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பார் கடவுள் வாழ்த்துப் பாடல்களைப் பாடிச் சேர்த்தனர் என்ப. ஒவ்வொரு தொகை நூலின் வடிவு, வண்ணங்களுக்கு ஏற்ப, அவர் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடல்களும் அமைந்திருக்கின்றன. (நற்றிணை - மாயோன் வாழ்த்து - 7 அடிகள், குறுந்தொகை - சேயோன் வாழ்த்து–6 அடிகள், ஐங்குறுநூறு - சிவபெருமான் வாழ்த்து - 3 அடிகள், அகநானூறு - சிவபெருமான் வாழ்த்து - 16 அடிகள், புறநானூறு - சிவபெருமான் வாழ்ந்து - 13 அடிகள்) இதனை உட்கொண்டே, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்கள் இப் பாட்டு 7 அடியின் மிக்கிருக்க வேண்டும் எனக் கருதி, (நற்றிணையின் பாடல்கள் சிற்றெல்லை 9 அடியாகவும் பேரெல்லை 12 அடியாகவும் கொண்டவையாதலின்) 'ஏனைப் பூதமும் பிறவுங் கூறிய அடிகள் சிதைவுற்றன' என்று கூறுவாரா யினர். ஆயின், பேராசிரியர் தம் தொல்காப்பிய உரையுள், இப் பாடலை மேற்கோள் காட்டுமிடத்து, இதனை 7 அடிப்பாடலாகவே

காட்டுகிறார். எனவே, உரையாசிரியர் காலமுதல் இப் பாட்டு 7 அடிப் பாட்டாகவே காணக்கிடக்கின்றது என்பது துணிபு.

'மாயோன் மேய காடுறை உலகமும்,சேயோன் மேய மைவரை உலகமும்', என்னும் தொல்காப்பியமுறை பற்றி, தொகை நூல்களுள் முதல் நூலாம் நற்றிணைக்கு மாயோனையும் இரண் டாம் நூலான குறுந்தொகைக்குச் சேயோனாகிய முருகனையும் வாழ்த்திய பெருந்தேவனார், பிற தொகை நூல்களுக்குச் சிவபெரு மானை வாழ்த்தியிருப்பது சிந்தித்தற்குரியது.

நூலின் தொடக்கத்து மங்கலமொழிகளுள் ஒன்றை வைத்துத் தொடங்குதல் மரபு. உலகம் என்பது மங்கல மொழியாகும். இதனைத் தனித்தேனும் அடைமொழியுடன் சேர்த்தேனும் அமைத் தல் நூல்களுள் காணப்படும். உலகம் உவப்ப-திருமு., வையகம் பனிப்ப - நெடு., நனந்தலை உலகம் - முல்., ஓங்குதிரை வியன் பரப்பு - மது. இவ் வழக்கு காப்பிய காலத்தும் தொடர்வதாயிற்று. உலகம் திரியா - மணி., மூவாமுதலா உலகம் - சிந்., உலக மூன்றும் - வளை., உலகுஎலாம் - பெரிய., உலகம் யாவையும் - கம்., நீடாழிஉலகத்து - வி.பா., எனவே, இந் நற்றிணையின் கடவுள் வாழ்த்தையும் மங்கல மொழியாம் மாநிலம் என்னும் சொல்லால் தொடங்கினார் என்க.

விசும்பு, காற்று, நீர், நெருப்பு, மண் என்னும் ஐந்து மூலங் களுடன் ஞாயிறு, திங்கள், இயன்றவெல்லாம் ஆம் உயிர்வகை (இயமானன்) என்ற மூன்றுடன் கூடிய எண்வடிவினன் இறைவன் என்பதால் இப் பாட்டு அவ் எண்வடிவைப் புனைந்ததாயிற்று.

இயன்றவெல்லாம் பயின்று அகத்தடக்கிய நிலையையே நாராயணன் என்னும் பெயர் சுட்டுவதாகக் கூறுவர்.

பல்வேறு வகைப்பட்ட மாசுற்ற நீர்கள் வந்து கலந்த வழியும் வெண்சங்கு தன் நீர்மையாம் தூய்மையில் குன்றுவதில்லை. இறைவனும் தீதுற்ற உயர்களின் உடல்கள் தோறும் தங்கியிருப் பினும் அவன் வேதமுதல்வனாம் தூயோனாகவே இருக்கிறான் என்பது இங்குச் சுட்டப்பெறும் குறிப்பு ஆகும். வெள்ளிய சங்கு ஒலிக்கும் என்றது, திருமாலின் ஆழியைச் சுட்டியது போல பாஞ்ச சன்னியத்தையும் குறிப்பித்தவாறாம்.

தூநீர் என்பதை முற்பதிப்பாசிரியர் (பி. ப., து. ப.) கடலுக்கே அடையாக்கிப் பொருள் கண்டனர். ஆயின் கடலுக்கு அதை அடையாக்குவதினும் வளைக்கு அடையாக்கிக் காண்பதே சிறப்பாகும். திருமாலின் ஆழியைத் 'தீதற விளங்கிய' என்னும் அடையால் சிறப்பித்தமை போல, சங்கையும் வெண்சங்கு எனச் சிறப்பித்தார் என்க.

கிட்டிய ஏடுகளிலும் முற்பதிப்புகளிலும் வளைநரல் என்னும் பாடமே காணப்படினும், பேராசிரியர், தம் மேற்கோளில் எடுத்துக்காட்டுமிடத்து (காண்க: மே.) 'வளைஞரல்' என்னும் பாடத்தையே பயன்படுத்துகிறார். சங்க காலத்தும் பிற் காலத்தும் ஒலித்தல் என்னும் பொருளில் நரலுதல் என்னும் சொல் ஆளப் பட்டிருப்பினும் வளை எனும் சொல்லுடன் இணைந்து வருமிடங் களில் (வளை ஞெகிழ்ந்த) ஞ-ந பாடமாறுபாடுகள் காணப்பெறு கின்றன. மொழியியல் வரலாற்றில், நவினும் ஞ பழமையுடைய தாகக் காணப்பெறுகிறது. எனவே வளைஞரல் என்னும் பாடமே சிறந்ததாகக் கருதப்பெற்றது.

பசுங்கதிர் என்பதற்குப் படர்கதிர் என்னும் மாற்றுப் பாடத் தைக் கொள்வர் உரைவேந்தர் (து. ப.). ஆயின் கிட்டிய ஏடு களிலும் பதிப்புகளிலும் உரையாசிரியர் மேற்கோளிலும் பசுங் கதிர் என்னும் பாடமே காணப்படுகின்றது. படர்கதிர் என்பது அந்த அடியில் வரும் சுடர் என்பதற்கு எதுகையாகக் காணப்படும் சிறப்புடையதே ஆயினும், முந்திய அடியில் காணப்பெறும் விசும்பு என்பதற்கேற்ற அடிஎதுகை உடைய பாடமாகும் சிறப் புடையது பசுங்கதிர் என்பதே ஆகும். மேலும், மதியமொடு என ஒடு உருபு கொடுத்துப் பிரித்திருப்பதால்-பசுங்கதிர் என்னும் அடை திங்களுக்கே பொருந்துவதாகும். திங்களைப் பசுங்கதிர் என்னும் அடையால் சிறப்பிப்பது சங்க வழக்கு (காண்க: ஒப்பு). எனவே, பசுங்கதிர் என்னும் பாடமே ஈண்டுக் கொள்ளப்பெற்றது.

**மேற்கோள்:** (மு) 1. பேராசிரியர், 'வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே' என்னும் நூற்பாவுக்கு இப் பாடலை எடுத்துக்காட்டி, 'என்பது தெய்வ வாழ்த்து' என்று சுட்டி, 'இது தனக்குப் பயன்பட வாழ்த்தியது' என்றும் விளக்கம் தருகிறார் (தொல். பொ. 421).

2. 'ஆசிரியப் பாட்டின் அளவிற்கு எல்லை' என்னும் நூற்பாவுரையுள் இப் பாடலை எடுத்துக்காட்டிய அவர், 'என்பது ஏழடியான் வந்தது' என்றும் சுட்டுகின்றார், (தொல். பொ. 469).

ஒப்பு: (மு) இப் பாடலில் திருமாலின் அடி, உடுக்கை, மெய், படை கூறியமை போலக் குறுந்தொகைக் கடவுள் வாழ்த்துப் பாடலிலும் முருகனது சேவடி, குன்றி ஏய்க்கும் உடுக்கை, பவழத்தன்ன மேனி, செஞ்சுடர் நெடுவேல் கூறிய ஒப்புமை நினைத்தற்பாலது.

'திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதுமாய் அவையவை தோறும்
உடன்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்'

— திருவாய். 17:7;

'பாதம் புவனி சுடர்நய னம்புவனம் உயிர்ப்புஓங்கு
ஓதம் உடுக்கை உயர்வான் முடிவிசும் பேஉடம்பு
வேதம் முகம்திசை தோள்மிகு பன்மொழி கீதம்'

— பொன்வண்ணத்து அந்தாதி. 19

சேரமான் பெருமாள் நாயனாரின் இப் பாட்டை எடுத்து ஒப்புக் காட்டிய உரைவேந்தர் ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள், இந் நற்றிணைப் பாட்டையும் சிவபெருமான் வாழ்த்தாகவே காண்கிறார்.

1. **மாநிலம் சேவடி:** கீழேழ் உற்ற அடியினை - பரி. 3:20; நின்றகால் மண்எலாம் நிரப்பி - கம்.வேள். 35;1; சேவடி: குறு. க.வா.1, பரி.3:2.

**தூநீர் வளை:** வால்வளை - திருமு. 120; குறு. 198;6; ஐங். 193:4; கலி.14:6; அகம். 390:16; புறம்.158:1; தூநிற வலம்புரி-கலி. 135:1; தூநிற வெள்ளை -சிலப்.17:12.1; வெள்ளைப் புரிவளை - சிலப்.7:5-3; வெள்வளை - சிலப். 26: 72; வால்வெண் சங்கு - சிலப்.14:13. பால்வளை பரந்து மேயும் - சிந்.2906:1; வால்வளை மறலி மேயும் - சூளா. 243:1.

2. **வளைஞரல்:** வால்வளை ஞரல - திருமு. 120; வளை நரல வயிரார்ப்ப - மது.185.

**வளைஞரல் பௌவம்:** வலம்புரி வான்கோடு நரலும் இலங்கு நீர் - நற்.172:8; வலம்புரி உழுத வார்மணல் அடைகரை...அறை புனல் வால்வளை - ஐங் 193:1-4; புணரி வளைஞரல - பதிற். 30.6; வளைஞரலும் பனிப் பௌவத்து - பதிற்.51:14; கோடுநரல் பௌவம்-பதிற்.46:11.

3. **விசும்புமெய்:** வலனுயர் எழிலியும் மாக விசும்பும், நிலனு நீடிய இமயமும் நீ - பரி.1:48; விசும்பின் ஓங்கினான் - கம்.வேள். 34:3.

4. **பசுங்கதிர் மதியம்:** பசுவெண் நிலவு - நற்.196:3;குறுந். 359:2; பசுங்கதிர் மதியத்து அகல்நிலா - நற்.377:7; பசுவெண் திங்கள் - குறுந்.129:2; பசுநிலா - அகம்.57:11; தண்கதிர் மதியம்-புறம்.56:24; பசுங்கதிர்த் திங்கள் - புறம்.231:4-5; பசுங்கதிர்க் கடவுள்-சிந்.621:1; பசுங்கதிர் வெள்ளைச் சிறுபிறை - திருக்.67.

**திங்களும் சுடரும்:** திங்களும் தெறுகதிர்க் கனலியும் நீ - பரி.4:5; நின்வெம் மையும் விளக்கமும் ஞாயிற்றுள, நின்தண் மையும் சாயலும் திங்களுள - பரி.4:25-26. இரு சுடரொடு இயமானன் ஐம்பூத மென்று - மணி.27:89.

**ஞாயிற்றைக் கண் எனல்:** வான்கண் விரிந்த விடியல் - மலை.257; வான்கண் விழியா - சிலப்.10:1; யாவினுக்கும் கண் ணாவான் இவனே - வி.பா.அருச். தவநிலை.43.

5. **இயன்றஎல்லாம்:** விசும்பும் நீயே ..... நிலனும் நீயே — பரி. 13: 17-22; அனைத்தும் நீ அனைத்தின் உட்பொருளும் நீ — பரி. 3: 68; மூவேழ் உலகமும் உலகினுள் மன்பதும், மாயோய் நின்வயிற் பரந்தவை — பரி. 3: 9-10; அவ்வும் பிறவும் ஒத்தனை உவ்வும், எவ்வயி னோயும் நீயே — பரி. 2:58-59. அதனால், இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும், ஏமமார்ந்த நிற்பிரிந்து மேவல் சான்றன, எல்லாம் — பரி: 4: 33-35.

6. **வேதமுதல்வன்:** முன்னை மரபின் முதுமொழி முதல்வ — பரி. 3: 47; நாவல் அந்தணர் அருமறைப் பொருளே — பரி. 2: 57; சிலப். 10: 189, 14:48, 22: 35.

7. **திகிரியோன்:** செருமிகு திகிரிச் செல்வ — பரி. 13: 58; பொன்னந் திகிரிப் பொருபடை யான் — சிலப். 17: 30-4.

## 1. குறிஞ்சி - தலைவி கூற்று

நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்
என்றும் என்தோள் பிரிபுஅறி யலரே
தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீம்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீர்இன்று அமையா உலகம் போலத்
தம்இன்று அமையா நம்நயந்து அருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுப செய்புஅறி யலரே. (9)

— *கபிலர்*

பழைய குறிப்பு: பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது.

**பொ-ள்** — நின்ற சொல்லர் (1), இனியர் (1), பிரிபு அறியலர் (2), புரையோர் கேண்மை புரைய (5), அருளி (7), அஞ்சி (8), செய்புஅறி யலரே (9).

**பொ-ரை**—என்றும் நிலைத்த வாய்மையையுடைய நம் தலைவர் நெடிதாகத் தோன்றுகின்ற இனிமைப் பண்புடையவர், எந்நாளும் என் தோள்களைப் பிரிந்து அறியார்; தாமரைப் பூவின் குளிர்ந்த தாதை ஊதிக்கொண்டு மிக உயர்ந்த சந்தனமரத்தில் சேர்த்த இனிய தேன்போல, உயர்ந்தோராகிய அவர்தம் நட்பும், உறுதியாக உயர்ந்ததேயாம்; நீரையின்றி அமையாத உலகியலைப் போலத் தம்மையின்றி அமையாத நம்மை விரும்பி முன்பு அருள் செய்து, இப்பொழுது மணம் பொருந்திய நம் நெற்றி பசந்து ஒளி குன்றுவதற்கு அஞ்சி, நோய் தரும் சிறுமையைச் செய்ய மாட்டார்.

**க-ரை**— தலைவன் உயர்ந்த அன்பினன், பிரிதலாகிய சிறுமையைச் செய்து நம்மைத் துன்புறுத்தான் என்பதாம்.

**சொ-ள்**— நின்றசொல்–என்றும் பொய்யாத சொல், நீடுதல்-பெருகுதல், பிரிபு – பிரிதல், (தொழிற்பெயர்), சாந்து-சந்தனம், புரை - உயர்வு, கேண்மை - நட்பு, நயந்து - விரும்பி, சிறுமை-நோய்.

**சி-பு** — உயர்ந்த தலைமக்களின் அன்பின் திறத்தை இப் பாடல் அழகாகப் புனைந்து காட்டுகின்றது. பூக்களில் சிறந்தது பொறிவாழ் பூவாகிய தாமரையே. மரங்களில் சிறந்தது மணம் கமழும் சந்தனமே. தாமரையில் பிறந்த தேன் துளிகள் உயர்ந்த சந்தனமரத்தில் சேர்க்கப்பெறுகின்றன. இவ்வாறே தலைமக்களும் தாம் பிறந்த குடியாலும், அழகாலும் பண்பாலும் தலை நிற்பவராவர். ஆதலின் அவரிடையே தோன்றும் கேண்மை மிக உயர்ந்ததாக - ஒருவரை ஒருவர் நோய் செய்யாத நட்பாக விளங்குதல் உறுதி. சொல்லுக்கு நிலைபேறும், இனிமைக்கு நீடுதலும் சிறப்பாகும். தலைவன்பால் கண்ட இச் சிறப்புகளின் அடிப்படையில் அவன் சிறுமையைச் செய்யான் என்பது உறுதி யாயிற்று.

ஏடுகளில் மிகுந்து காணப்படும் ஏதுவால் முற்பதிப்பாசிரியர் அனைவரும் 'உறுபவோ' (9) என்னும் பாடமே கொண்டனர். அதனால் அவர்தாம் கொண்ட பொருளும் நேர்ப்பொருளாக அமையவில்லை. ஆயின், உரையாசிரியர்கள் (இ., நச்., சேனா - காண்க: மேற்கோள்) தம் மேற்கோள்களில் இப் பாட்டை எடுத்துக்காட்டும் போது 'உறுப' என்னும் பாடத்தையே காட்டி யுள்ளனர். இளம்பூரணர் இத் தொடருக்கு விளக்கம் தருவார்போல, 'நோயுறுப செய்யார் என்பதாம்,' என்றும் எழுதியுள்ளார். (தொல். சொ. இ. 335). எனவே, பொருள் தெளிவு கருதியே இப் பாடம் ஈண்டுத் தேர்வு செய்யப்பெற்றதாம்.

(மே) (மு) தலைவனது நினைவைத் தலைவி மிக அறியுமாகலின் அவனை உயர்த்துக் கூறுதற் கண்ணும் தலைவி கூற்று நிகழும் என்பதற்கு இப் பாடலை எடுத்துக் காட்டுவர் இளம் பூரணர் (தொல். பொ. 145).

(மு) தலைவி கூற்று நிகழுமிடத்து (கற்பில்), 'உரிமை கொடுத்த கிழவோன் பாங்கில் பெருமையில் திரியா அன்பின் கண்ணும்' என்பதற்கு இப் பாடலை எடுத்துக்காட்டுவர் நச்சினார்க் கினியர் (தொல். பொ. 147), மேலும் அவர், 'தாமரைத் தாதை யும் ஊதிச் சந்தனத்தாதையும் ஊதி வைத்த தேன்போலப் புரைய என்றதனான் ஏற்றற்கண் தலைவி கூறினாள். பிரிவறியலரென்ற தும் அன்னதொரு குணக்குறை யிலரென்பதாம். பிரிவுணர்ந்து புலந்துரைப்பின் நாணழிவாம்' என்று விளக்கம் கூறுதல் நோக்கத்

தக்கதாம். (ஆயின், சந்தனத்தாதையும் ஊதி வைத்த தேன் என்னும் பொருள் ஏற்புடைத்தாய் அமையவில்லை).

அவர், பிறிதோரிடத்து (தொல். பொ. 228) 'நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற், 'புகழ்தகை வரையார் கற்பின் உள்ளே' என்பதற்கு இப் பாடலைக் காட்டி, 'குற்றேவல் நிலை யளாகிய தலைவியைத் தலைவன் புகழ்தலாலும் பெருநாணின ளாகிய தலைவி கணவனைப் பிறரெதிர் புகழ்தலானும் வழு வாயிற்று' என்றும் விளக்கம் தருகின்றார்.

(மு) தலைவன் சொல்லைத் தலைமகள் தெளிதற்குச் செய்யு ளாக நம்பியகப் பொருளுரை இப் பாடலைக் காட்டுகிறது (நம். 130).

அழிவில் கூட்டம் நிகழ்ந்தபின் வரும் மெய்ப்பாடு விளக்கு மிடத்து, பேராசிரியர், 'அருள்மிக உடைமை என்பது களவுக் காலத்துப் போலத் துன்பமிகுதலின்றி அருள்மிகத் தோன்றிய நெஞ்சினளாதல், அது, 'நின்ற சொல்லர் நீடுதோன் றினியர், என்றும் என்தோள் பிரிபறி யலரே எனவரும்' என்று இப் பாட லின் இரண்டு அடிகளை எடுத்துக் காட்டுகிறார் (தொ. பொ. பேரா. மெய். 272).

'புரை உயர்பாகும்' என்ற தொல்காப்பிய நூற்பாவுக்கு இப் பாடலின் 'புரைய மன்ற புரையோர் கேண்மை' என்னும் அடியை உரையாசியர் பலரும் எடுத்துக் காட்டுகின்றனர் (தொல்.சொ.இ. 294, நச். 302, சே. 300. தெய். 297).

வினைமுதல் கொண்டுமுடியும் வினையெச்சங்களை விளக்கு மிடத்து, கல்லாடர், 'செய்தென் எச்சத்தின் குறிப்பாகிய இன்றி, அன்றி என்பனவும் 'தம்மின் றமையா நந்நயந் தருளி' என வினைமுதல் வினையாய் முடிந்தவாறு கண்டு கொள்க' (தொல். சொ. கல். 232) என இப் பாடலின் ஓரடியை எடுத்துக் காட்டு கிறார்.

'பையுளும் சிறுமையும் நோயின் பொருள' என்னும் தொல் காப்பிய நூற்பாவுக்கு உரையாசிரியர்கள் இப் பாடலின்'சிறுமை யுறுப செய்பறி யலரே' என்னும் அடியை மேற்கோளாக எடுத்துக் காட்டுகின்றனர். (தொல். சொ. இ. 294, நச். 341, சே. 341, தெய். 337).

(ஒ) 1. நின்ற சொல்லர்: அறவர் வாழி - நற். 86;1; பொய்யலர் வருவர் - நற்.246:6; நிலம்புடை பெயர்வ தாயினும் கூறிய, சொல்புடை பெயர்தலோ இலரே - நற். 289:2-3; பொய்யா வாய்மை - பதிற்.70:12; அவர்பொய் வழங்கலர் - குறு.21:5; மிக்கோன் கூறிய மெய்ம்மொழி ஓம்பி - சிலப்.15:174.

2. **தோள் பிரிபு அறியலர்:** முருந்தேர் முறுவல் இளை யோள், பெருந்தோள் இன்துயில் கைவிடு கலனே-அகம்.193:13-14.

3-4. **தாமரை... சாந்து... தீந்தேன்:**

*சீரியல் ஆவியும் யாக்கையும் என்னச் சிறந்தமையால்*
*காரியல் வாட்கண்ணி யென்னக லார்கம லங்கலந்த*
*வேரியும் சந்தும் வியல்தந் தெனக்கற்பின் நிற்பரன்னே*
*காரியல் கண்டர்வண் தில்லை வணங்குமெங் காவலரே*

- திருக். 301.

இப் பாடலுக்குப் பேராசிரியர், 'தாமரைத் தேனும் சந்தனமரமும் சுவையும் மணமும் அவற்றைத் தாங்கிய பொருளுமாய் தம்முள் ளியைந்து தம் இடப்பெருமையை விளக்கினாற் போல' என்று விளக்கம் தருவர் 'தாமரைத் தேன் முதலாயின பிறந்த இடத் திற்கேற்ற மணத்தையும் பொருளுக்கேற்ற சுவையையும் பொருந்திக் குலப்பெருமையும் குணமும் தோன்ற நின்றது போல இருவரும் தாம் பிறந்த குடிப்பெருமையும் குண நலமும் தோன்ற வாழ்கின்றனர் என்பதாம்' என்னும் விளக்கம் ஈண்டு ஒப்பு நோக்கத் தகும்.

4. **தொடுத்த தீந்தேன்;** சாந்தின் மேற்தொடுத்த தீந்தேன் - சிந்.1820:1; கரும்பின் தொடுத்த பெருந்தேன் - சிலப். 10:82; தொடுத்த நிறையுறு தீந்தேன் - பெருங்.1.48;146.

5. **புரையோர்:** மது. 737; குறி. 205; பதிற். 15:31; 16:18; பரி.21:12; கலி. 6-3; 15:14; அகம்.136:2;142:2:385:5; மன்றாடு இளமழை மறைக்கு நாடன், புரையோன் வாழி – ஐங். 252: 2-3; புரையோள் காண - ஐங். 486: 3; நீயளந் தறிவை நின் புரைமை-குறு. 259: 6.

**தலைவன் கேண்மை உயர்ந்தது:** பெரியார் நாடி நட்பினல்லது நட்டு நாடார் - நற். 32: 7—9; உயிரோர் அன்ன செயிர்தீர் நட்பு - நற். 72: 3; குன்றநாடன் கேண்மை - குறு. 38: 3.

90: 6; மலைகெழு நாடன் கேண்மை, தலைபோ காமைநற் கறிந்தனென் யானே - குறு. 170: 4; நயந்தனன் கொண்ட கேண்மை, பயந்தக் காலும் பயப்பு ஒல்லாதே - குறு. 264: 45; நிலத்தினும் பெரிதே ...நட்பே - குறு. 3; கடலினும் பெரி தெமக்கு அவருடை நட்பே - ஐங். 184: 4; உயிர்கலந்து ஒன்றிய செயிர்தீர் கேண்மை - ஐங். 419: 1 நிலத்தினும் பெரிதே நேர்ந்தவர் நட்பே-தொல். கள. 20, நச். மேற்.,யாம், பிரிவின் றியைந்த துவரா நட்பின் இருதலைப்புள்ளின் ஒருயிரம்மே - அகம். 12: 4—5.

6. **நீரின்றமையா உலகு:** நீரின்றமையா யாக்கை - புறம். 18: 18; நீரின்றமையா உலகெனின் - குறள். 20.

7. **தம் இன்று அமையா:** தம்அலது இல்லா நம்நயந்து அருளி - நற்.189: 1; இன்னாது அன்றே அவர் இல் ஊரே - நற் 216: 5; அவர்காண், நாம்இலம் ஆகுதல் அறிந்தும் மன்னோ - நற். 299: 6; நின்இன்று அமைகுவென் ஆயின் - நற். 400: 5; நின்னலது இலளே - குறு. 115:6, உயிர்க்குயி ரன்னர் ஆகலின் தம்மின்று, இமைப்புவரை அமையா நம்வயின் - குறு. 218: 5-6; நின்னின் றமைதல் வல்லா மாறே - குறு 309: 8; நின்வரைப் பினள்என் தோழி - குறு. 397: 7; நின்னல தில்லா இவள் - ஐங். 179: 4; நின்இன்று, இமைப்புவரை வாழாள் மடவோள் - கலி. 21: 12; தம்மின்றி, யாம் உயிர் வாழும் மதுகையிலே மாயின் - கலி. 24: 13-14, தம்மலது இல்லா நம்மிவண் ஒழிய - அகம். 313:8.

8. **நுதல் மணத்தல்:** தேங்கமழ் திருநுதல்– திருமு. 24. நற். 62: 6; நறுநுதல் அரிவை — நற். 50: 10; குறு. 22: 5; 59: 3; 205: 7; 259: 2; 273: 3; **நறுநுதல்**: கலி. 14: 4; 21: 6; 53: 14; 59: 22; நாறுமிவள் நுதலே — அகம். 78: 24; நாறு நறுநுதல் – அகம். 43: 10; 238: 18.

**பிரிவால் நுதல்பசத்தல்**: சுடர்புரை திருநுதல் பசப்ப,தொடர்பு யாங்கு விட்டனை – நற்.108: 8-9; பசைஇப் பசந்தன்று நுதலே – குறு 87: 4; நல்லணி நயந்துநீ துறத்தலின், பல்லோர் அறியப் பசந்தன்று நுதலே – ஐங். 55: 6-4; நன்மலை நாடன் பிரிந்தென ஒண்ணுதல் பசப்பது எவன்கொல் அன்னாய் – ஐங். 219: 3–4;

ஏர்திகழ் ஒள்நுதல் பசத்தல், ஓரார் கொல் - ஐங். 225:5; நல்நுதல் பசப்பவும்... நம்பிரிந்து உறைந்தோர் - ஐங். 227:1-4; (பிரிவால் நுதல் பசத்தல் என்பது சங்க இலக்கியத்துப் பரவலாகக் காணப்பெறும்).

9. **சிறுமை-நோய்:** சிறுமை நோனாது - குறி. 157; சிறுமை உற்ற களையாப் பூசல் - மலை. 314; பெருங்கை யற்றஎன் சிறுமை - நற். 272: 8; மெலிவுடை நெஞ்சினர் சிறுமை கூர - பதிற். 26: 9; காதலற் கெடுத்த சிறுமையொடு - அகம். 45: 13; சேயர் என்றலின் சிறுமை உற்றஎன், கையறு நெஞ்சத்து எவ்வம் - அகம். 113: 21; அகம். 200: 3; 262: 6; 353: 13; 371: 6; புறம், 180: 2; 387: 20.

## 2. பாலை - கண்டோர் கூற்று

**அழுந்துபட வீழ்ந்த பெருந்தண் குன்றத்து**
**ஒலிவல் ஈந்தின் உலவை அம்காட்டு**
**ஆறுசெல் மாக்கள் சென்னி எறிந்த**
**செம்மறுத் தலைய நெய்த்தோர் வாய**
**வல்லியப் பெருத்தலைக் குருளை மாலை**
**மான்நோக்கு இண்டுஇவர் ஈங்கைய சுரனே**
**வைஎயிற்று ஐயள் மடந்தை முன்உற்று**
**எல்லிடை நீங்கும் இளையோன் உள்ளம்**
**காலொடு பட்ட மாரி**
**மால்வரை மிளிர்க்கும் உருமினும் கொடிதே.**

— *பெரும்பதுமனார்*

ப-கு — உடன்போகாநின்றாரை இடைச்சுரத்துக் கண்டார் சொல்லியது.

பொ-ள் — சுரனே(6), மடந்தை முன்உற்று(7), நீங்கும் இளையோன் உள்ளம் (8), உருமினும் கொடிதே (10).

பொ-ரை — ஆழமாக வேர்வீழ்த்த பெரிய தண்ணிய குன்றத்தில் ஒலிக்கின்ற வலிய ஈந்தின் காய்ந்த மடல்களையுடைய காட்டின்கண், வழிச்செல்லும் மாக்களைக் கொன்று தலையைப் பிளந்து உண்டதால் குருதி படிந்து சிவந்த மறுப்பட்ட தலை

யையும், குருதிக்கறை படிந்த வாயையும் உடைய பெரிய தலைகளையுடைய புலிக்குட்டிகள், மாலைக்காலத்தே மானைத் தம் இரைக்காக எதிர்நோக்கும் இண்டங்கொடி படர்ந்த ஈங்கை மரங்களையுடைய சுரத்தின்கண், கூரிய பற்களையுடைய மெல்லியல் மடந்தைப் பருவத்தளாகிய தன் காதலியை முற்படச் செலுத்தி, இந்த இரவுப்போதிலே அவள் பின்னே செல்லும் இவ் இளைஞனது உள்ளம், காற்றொடு கலந்து இயங்கும் மழை முகிலிடையே தோன்றி, பெரிய மலைகளைக் கீழ்மேலாக்கும் இடியைக் காட்டிலும் கொடிதாகும்.

**க-ரை**— இராப்போதில் கொடுமையான சுரத்திடையே மெல்லியலாளைக் கொண்டு செல்லுதல் தகாது. அவர்கள் இரவு தங்கிச் செல்லுதல் நன்று என்பதாம்.

**சொ-ள்** — அழுந்து - ஆழ்ந்து என்பது அழுந்தென வந்தது, ஈந்து - ஒருவகை ஈச்ச மரம், உலவை - காய்ந்த கிளை, அம் - சாரியை (கள்ளியங்காடு போல), ஆறுசெல்மாக்கள் - வழிச்செல்லும் விலங்குகள், மக்களுமாம், நெய்த்தோர் - குருதி, வல்லியம் - புலி, இண்டு - ஒருவகைப் படர்கொடி, வை - கூர்மை, ஐயள் - மெல்லியலாள், எல் - இரவு, மால் - பெரிய, மிளிர்க்கும் - புரட்டும், உருமு - இடி.

**சி-பு**— உலவை என்னும் சொல்லுக்கு முற்பதிப்பாசிரியர் (பி. ப., து. ப.) உலவும் காற்று என்றே பொருள் கொண்டனர். ஆயின், இது காற்று என்னும் பொருளில் சங்கப்பாடல்களில் காணப் பெறவில்லை. காய்ந்தகொம்பு,. கிளை, ஒருவகைமரம் என்னும் பொருள்களிலேயே இச் சொல் ஆளப்பெற்றிருக்கிறது. (காண்க: ஒப்பு), இச் சொல்லுக்குக் காற்று என்னும் பொருளையும் திவாகர நிகண்டுதான் முதலில் தருகிறது. இங்கே பாலை வருணனை பற்றிக்குறிப்பிடுவதால் ஈந்தின் காய்ந்த கொம்பு என்னும் பொருள் கொள்வதில் பொருத்தம் இருப்பதைக் காணலாம். மேலும் காட்டில் காற்று உலவும்செய்தி சிறப்பு வருணனை ஆகாது என்பதையும் ஈண்டு நினைத்தல் தகும்.

**உள்ளுறை:** வழிச்செல்வோரைத் தாக்கிக் கொல்லும் புலிகள் இரவிலும் இரைக்காகப் பதுங்கி இருக்கும் காடு என்பது, தலைவியைத் தேடிவரும் தலைவியின்தமர் அவர்தம் உடன்போக்குக்கு

இடையூறு செய்து தலைவியை மீட்டுச் செல்வர் என்னும் உள்ளுறையைக் காட்டுவதாகும்.

**இறைச்சி:** அவ்வாறு வரும் இடையூற்றையும் கடந்து, தலைவியைக் கொண்டு செல்வதில் காதல் வன்மையும், ஆண்மை மிடுக்கும் கொண்ட தலைவன் வல்லவன் என்னும் இறைச்சிப்பொருளை, காலொடுபட்ட மாரியின் இடி,மால்வரையையும் மிளிர்க்கும் என்பது தருதல் காணலாம்.

மான்நோக்கும் என்பது (சந்திப்புணர்ச்சியால்) ஏடு எழுதுவோரால் மாநோக்கும், மரனோக்கும், மரநோக்கும் எனப் பலபட எழுதப் பெற்றதாதல் வேண்டுமெனத் தோன்றுகிறது. முற்பதிபாசிரியர் (பி.ப.) மரல்நோக்கும் என்னும் பாடத்தைத் தேர்ந்து மரலின் தூறுகளைப் புலிகள் நோக்கும் என்று பொருளுரைக்கின்றனர். உரைவேந்தரோ, (து. ப.) மரன் ஒக்கும் எனக் கண்ணழித்து மரங்களில் ஓங்கிப் படரும் என்று இண்டங்கொடிகளுக்குப் பொருளேற்றுகிறார். காட்டின் கொடுமையைக் கூற வந்த இப் பாட்டில் இத் தகைய சொற்பிரிப்பும் வினைமுடிகளும் பொருத்தமாகத் தோன்றவில்லை. பகலில் வேட்டையாடிய புலி இரவிலும் செவ்வி நோக்கிப் பதுங்கி இருக்கும் என்பது (மான் முதலியவற்றைப் புலி இரவுப்போதிலே வேட்டையாடுதல் பெருவழக்காகும்) சுரத்தின் கொடுமையையும் வழியின் ஏதப்பாட்டையும் மிகுத்துக் காட்டுவதாகும். நெய்த்தோர் வாய குருளை மான் நோக்கும் மாலை என்பது இயல்பாகப் பொருள் செல்லும் நெறியாகத் தோன்றுகிறது. எனவே, மான் நோக்கும் என்னும் பாடமே சிறப்பாகக் கொள்ளப்பெற்றது.

(மே) (மு) கண்டோர் கூற்று நிகழும் இடத்து, 'புணர்ந்து செல்கின்றோர் பக்கத்து விரும்பின நெஞ்சத்தொடு மனன் அழிந்து எதிர்மொழி கூறிவிடுத்தற்கண்ணும் கூற்று நிகழும்' என்பதற்கு இப் பாடலை எடுத்துக் காட்டுகிறார் இளம்பூரணர் (தொல்.பொ. 43).

(மு) இடைச்சுரத்துக் கண்டோர் கூற்று நிகழ்வதற்கு இப் பாடலை எடுத்துக்காட்டி, 'இஃது இடைச் சுரத்துக் குறும்பினுள்ளோர் இவரைக்கண்டு கோள் இழைப்புற்றார்க்கு அவர் பெண்டிர் கூறியது' என்று விளக்கம் தருகிறார் நச்சினார்க்கினியர் (தொல். பொ.40).

(ஒ) 1. **அழுந்துபட:** அழுந்துபட விடரகத்து – நற்.228:8; அழுந்துபடப் பூட்டி - அகம். 83:6; அழுந்துபடு விழுப்புண் - நற். 97:1; அழுந்துபட்டு - மது.342, மலை.219.

2. **பாலையில் ஈந்து:** கொடுவில் எயினக் குறும்பிற் சேப்பிர், களர்வளர் ஈந்து - பெரும். 129-30; கருங்களி ஈந்தின் வெண் புறக் களரி - நற்.126:2; கற்றை ஈந்தின் முற்றுக்குலை - நற். 174:1; அலங்குகுலை ஈந்தின் ... காடு - ஐங்.த.2; செங்காய் உதிர்ந்த பைங்குலை ஈந்து - அகம்.21:20.

**உலவை அம்காடு:** உரறுகுரல் வெவ்வளி யெடுப்ப நிழற்ற, உலவை யாகிய மரத்த - நற். 62:9; வருமழை கரந்த வால்நிற விசும்பின், நுண்துளி மாறிய உலவை அம்காட்டு – நற். 76:1–2; சேவல், வாய்நூற் சிலம்பி அஞ்சினை வெரூஉ, மலங்கல் உலவை அம்காடு – நற். 189:10; உலவை ஓமை ஒல்குநிலை ஒடுங்கி - நற். 252:1; உலையா உலவை ஓச்சி - நற். 341:4; பொரிதாள் ஓமை வளிபொரு நெடுஞ்சினை, அலங்கல் உலவை ஏறி - குறு. 79;2–3; அலந்தலை வேலத்து உலவை யஞ்சினை - பதிற். 39:12; இலைதீந்த உலவையால், துன்புறூஉம் தகையவே காடு - கலி. 11:10; புகல்ஏக் கற்ற புல்லென் உலவைக், குறுங்கால் இற்றி - அகம். 57:6; சிலம்பி வலந்த வறுஞ்சினை வற்றல், அலங்கல் உலவை - அகம். 199:6; பெயல்நீர் தலைஇ உலவை இலைநீத்துக், குறுமுறி ஈன்றன - அகம். 259:4; இலைஒழித்து உலறிய புன்தலை உலவை - அகம். 293:1; ஓமை நீடிய உலவை நீள்இடை - அகம். 369:17; ஓமையும் உழிஞ்சிலும் உலவையும் உகாயும் - பெருங். 1.52:57.

3. **ஆறுசெல் மாக்கள் துன்பம்:** குறு. 140:2-3; 253:7; பதிற். 59:7; ஆறுசெல் வம்பலர் தொலைய, மாறுநின்று மறவர் குறு. 331:2-5 வரைஓங்கு அருஞ்சுரத்து ஆரிடைச் செல்வோர், ...தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரம் - கலி. 6:2-5.

4. **நெய்த்தோர்:** நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர் – பதிற். 49:10; நெய்த்தோர் நிறவரக்கின் – பரி. 10:12; நெய்த் தோர் அன்ன செவிய எருவை - ஐங். 335:2; நெய்த்தோர்ப் பட்டிகையாக - பெருங். 4:1.12.

6. **ஈங்கை:** குறி. 86; நற். 79:1; 86:7; 124:4; 193:1; 205:9; 312:2; குறு. 110:5; ஐங். 456:3; கலி. 31:3; அகம்.75:17; 125:3; 206:7; 252:9; 294:6; 306:3; 357:1.

7. **வைஎயிற்று — ஐயள்:** ஐயள்- நற். 146:10; ஐங். 255:3; வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி அரிவை - குறு. 14:2; முளைவாள் எயிற்றள் - குறு. 119:3; ஐங். 256:3.

**முன்னுற்றுப் பின்செல்லல்:** அன்பணைத்து அஞ்சொல்லிப் பின்செல்லும் ஆடவன் - திருக். 219.

8. **எல்லிடை:** எல்லிடைக் கழியுநர்-பெரும். 66; எல்லிடைப் படர்தந் தோனே – புறம். 301:14.

9. **காலொடு பட்ட மாரி:** நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும், கடுவிசை உருமின் கழறுகுரல் அளைஇக், காலொடு வந்த கமஞ்சூல் மாமழை - குறு. 158:1-3; பட்டமாரி - குறு. 289:6; புறம். 82:2.

10. **மால்வரை மிளிர்க்கும் :** பெருமலை மிளிர்ப்பன்ன காற்றுடைக் கனைபெயல் - கலித். 45:4.

## 3. பாலை - தலைவன் கூற்று

**ஈன்பருந்து உயவும் வான்பொரு நெடுஞ்சினைப்**
**பொரிஅரை வேம்பின் புள்ளி நீழல்**
**கட்டளை அன்ன வட்டரங்கு இழைத்துக்**
**கல்லாச் சிறாஅர் நெல்லிவட்டு ஆடும்**
**வில்ஏர் உழவர் வெம்முனைச் சீறூர்ச்**
**சுரன்முதல் வந்த உரன்மாய் மாலை**
**உள்ளினென் அல்லெனோ யானே உள்ளிய**
**வினைமுடித் தன்ன இனியோள்**
**மனைமாண் சுடரொடு படர்பொழுது எனவே.** (9)

— *இளங்கீரனார்*

ப-கு — முன்னொரு காலத்துப் பொருள்வயின் பிரிந்த தலைமகன் பின்னும் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.

பொ-ள் — சுரன்முதல் வந்த மாலை (6), படர்பொழுது எனவே (9) உள்ளினென் அல்லெனோ (7).

பொ-ரை — முட்டை ஈன்ற பருந்து அடைகாத்து வருந்தியிருக்கும் வானத்தைத் தீண்டும்படியான நெடிய கிளைகளையும், பொரிந்த அடியினையுமுடைய வேப்ப மரத்தினது புள்ளியிட்டாற்

போன்ற நிழலின்கண், கட்டளைக்கல் போன்ற வடிவுடைய வட்டாடும் அரங்கை அமைத்துக்கொண்டு, பிறதொழில் ஒன்றும் கல்லாத சிறுவர் நெல்லிக்காயைக் கொண்டு வட்டாடும், வில்லைக் கருவியாகக் கொண்டு பிழைக்கும் வேட்டுவர் வாழும் வெவ்விய இடத்தினையுடைய சீறூர் பொருந்திய சுரத்தின்கண், முற்பட்டு வந்த வலிமையை மாய்க்கும் மாலைப் பொழுதில், செய்யக்கருதிய வினையைச் செய்துமுடித்தாற் போன்ற இனிமையையுடைய நம் தலைவி, மனையகத்தே மாட்சிமை கொண்ட விளக்கொடு நம்மை நினைந்து வருந்தும் மாலைக்காலம் இதுவாகும் என்று யானும் நினைந்து வருந்தினேனன்றோ.

**க-ரை** — தலைவி வருந்தும் மாலைக்காலத்து நானும் வருந்துவேன். எனவே, பிரியக்கருதும் நெஞ்சமே உன்னோடு வாரேன் என்பதாம்.

**சொ-ள்** — உயவும் வருந்தும், வான்பொருதல் - வானளாவ உயர்தல், அரை - அடிப்பகுதி, கட்டளை - பொன் முதலிய உரைக்கும் கட்டளைக்கல், வில்லேர் உழவர் - வில்லைக் கொண்டு பிழைக்கும் வேடுவர், உரன் - வலிமை, உள்ளுதல் - நினைத்தல், வினை - செயல். மாண் - மாட்சிமை, படர்தல் - நினைந்து வருந்துதல்.

**சி-பு—உள்ளுறை:** ஈன்பருந்து உயவும் வான்பொரு நெடுஞ் சினைப் பெரியரை வேம்பின் கீழ், அதன் வருத்தம் கருதாத சிறார் கட்டளையன்ன வட்டரங்கு இழைத்துக்கொண்டு நெல்லி வட்டாடி மகிழ்வர் என்பது, தலைமகள்பால் கொண்ட அன்பினால் இல்லிருந்து பிரியமாட்டாது தலைவன் வருந்தவும், அதனை எண்ணாது பொருள்நசை கொண்ட அவனது நெஞ்சம் அவனைப் பொருட் பிரிவின்கண் செலுத்தாநிற்கும் என்னும் உள்ளுறையைக் காட்டுவதாகும்.

உள்ளினென் அல்லெனோ என்னும் தொடர் தன்மை வினையைச் சுட்டுவதாகும். தன்மை வினைக்கு என் ஈறு (கு, டு, று, து, என், ஏன், அல் - தொல். சொல். வினை. 6) வழங்குதலே தொல்காப்பியர் கண்ட நெறி. தொல்காப்பிய நெறியை ஒட்டிஎழுந்த சங்கப் பாடல்களில் என் விகுதியைக் காண்பதே பொருத்தமாகும். மேலும், ஏடுகளிலும் இதனை அரண் செய்யும் பாடம் கிடைத்தமையால் உள்ளினன் அல்லனோ, உள்ளினேன் அல்லனோ, என்னும்

பாடங்களை விடுத்து உள்ளினென் அல்லெனோ என்னும் பாடமே தேர்ந்து கொள்ளப்பெற்றது.

(மே) (மு) 'நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே' என்னும் நூற்பாவுக்கு, 'முன்பு நிகழ்ந்ததனைக் கூறிப் போகாதொழிதலும் பாலைத்திணையாம்' என்னும் விளக்கம் எழுதி, இப் பாடலை எடுத்துக் காட்டுவர் இளம்பூரணர் (தொல். பொ. 47).

(மு) 'நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவுமாகும்' என்னும் நூற்பா உரையுள், தலைவன்கண் நிகழ்ந்தது தலைவி நினைந்து தோழிக்குக் கூறியது என்பதற்கு இப் பாடலை எடுத்துக் காட்டுவர் நச்சினார்க் கினியர் (தொல். பொ. 43).

இன்புறல் என்பதற்கு விளக்கம் கூறவந்த இளம்பூரணர், 'இன்புறலாவது நட்டாராகிப் பிரிந்து வந்தோரைக் கண்டவழி வருவதோர் மனநிகழ்ச்சி போல்வது, 'உள்ளிய வினைமுடித் தன்ன இனியோள்' எனக் காமநுகர்ச்சியின்றி வரும் இன்புறுதல்' என்று இப் பாடலின் ஓரடியை எடுத்தாளுதல் நோக்கத் தகும் (தொல். பொ. 256).

'பிறப்பே குடிமை' என்னும் நூற்பாஉரையுள், 'உள்ளினென் அல்லெனோ எனவரும் இப் பாடலின் இறுதி 3 அடிகளை எடுத்துக்காட்டி, என்பது தலைமகன் தனது இல்லறத்தைத் தலை மகள்மேல் வைத்துச் சொல்லினமையிற் குடிமையாயிற்று என்பர் பேராசிரியர் (தொல். பொ. பே. 273).

'அரங்கின்றி வட்டாடி யற்றே' என்னும் குறளுக்கு விளக்கம் கூறும் பரிமேலழகர், 'அரங்கு - வகுத்ததானம், வட்டாடல் - உருண்டை உருட்டல், இவை, 'கட்டளை யன்ன வட்டரங்கு இழைத்துக், கல்லாச் சிறாஅர் நெல்லி வட்டாடும்' என்பதனான் அறிக' என்று இப் பாடலின் 2 அடிகளை எடுத்தாள்கின்றார் (குறள். பரி. 401).

(ஒ) பாலையில் - பருந்து — உலறுதலைப் பருந்தின் உளி வாய்ப் பேடை, அலறுதலை ஓமை அம்கவட்டு ஏறிப், புலம்பு கொள விளிக்கும் நிலம்காய் கானம்–ஐங். 321:1–3; பருந்திருந்து உயாவிளி பயிற்றும் யாவுயர், நனந்தலை – அகம். 19:3.

உயவும்: யானை கைம்மடித்து உயவும் கானம்-குறு. 388:7.

**வான்பொரு:** வான்பொரு நெடுவரை - சிறு. 128.

2. **பொரியரை :** பொரியரைக் கோங்கு - ஐங். 367:1; பொரியரை வேங்கை - அகம். 365:13; பெரியரை ஓமை - அகம். 397:11.

3. **கட்டளை அன்ன:** பொன்காண் கட்டளை கடுப்ப-பெரும் 220; பொன்னின் உரைதிகழ் கட்டளை கடுப்ப - குறு. 192:4; கட்டளை அன்ன மணிநிறத் தும்பி - ஐங். 215:1; பொன்னுரை கட்டளை கடுப்ப - அகம். 178:11.

**வட்டரங்கு:** அரங்கின்றி வட்டாடி யற்றே - குறள். 401.

4. **பாலையில் நெல்லி - வட்டாடுதல்** — சிறியிலை நெல்லி நீடிய கல்காய், கடம் - ஐங். 334:2; பளிங்கத்து அன்ன பல்காய் நெல்லி, மோட்டுஇரும் பாறை ஈட்டுவட்டு ஏய்ப்ப, உதிர்வன படூஉம் - அகம். 5:9-11; அத்த நெல்லித் தீஞ்சுவைத் திரள்காய், வட்டக் கழங்கின் தாஅய்த்துய்த்தலைச், செம்முக மந்தி ஆடும் - அகம். 241:13-15.

5. **பாலையில் வில்லேர் உழவர்:** கான்உயர் மருங்கில் கவலை அல்லது, வானம் வேண்டா வில்லேர் உழவர் - அகம். 193:1–2; வில்லேர் உழவர் பகைகொளினும் - குறள். 872; ஆரிடை அத்தத்து இயங்குநர் அல்லது, மாரிவளம் பெறா வில் லேர் உழவர், கூற்றுறழ் முன்பொடு கொடுவில் ஏந்தி, வேற்றுப் புலம் போகி - சிலப்.11:209–11.

6-9. **மாலை - படர்பொழுது:** படர்சுமந் தெழுதரு பையுள் மாலை - குறு.195;2; மாலை வந்தன்று என்மாண் நலம் குறித்தே - குறு. 188:4; நள்ளென வந்த நாரில் மாலை - குறு.118:2; புன் கண் மாலை - குறு.46:6, 338:4; காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலரும்இந் நோய் – குறள்.1227.

7. **உள்ளினென் அல்லெனோ:** நற்.62:5; உள்ளினென் அல் லெனோ யானே, உள்ளி நினைந்தனென் அல்லெனோ பெரிதே – குறு.99:1-2.

8. **உள்ளிய வினைமுடித் தன்ன:** செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு, இவளின் மேவினம் - குறு. 270:5-6; செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு - குறு. 275:5; அருந்தொழில் முடித்த செம்மல் உள்ளமொடு – அகம்.184:5; இன்னகை முறுவ லொடு எண்ணியது முடிந்ததென்று, எதிரெழுந்து விரும்பி - பெருங். 2.17:102-103; விட்டகன் றுறைந்த நட்டோர்க் கண்ட, நாளினும் இனியள் - தொல்.பொ.மெய்.இ. 12 மேற்.

9. **மனைமாண் சுடர்-மாலை:** மங்கையர், நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக், கையமை விள்க்க நந்துதொறு மாட்ட - முல். 48-49; கயலேர் உண்கண் கனங்குழை மகளிர், கைபுனைா யாக நெய்பெய்து மாட்டிய, சுடர்துயில் எடுப்பும் - குறு. 398:3-4; எல்வளை மகளிர் மணிவிளக் கெடுப்ப, மல்லல் மூதூர் மாலைவந் திறுத்தென - சிலப்.4:19-20; மாலை மணி விளக்கம் - சிலப். 9:3; பைந்தொடி மகளிர் பலர்விளக் கெடுப்ப - மணி.5:134; உள்ளிழு துறீஇய ஒள்ளடர்ப் பாண்டிற் திரிதலைக் கொளீஇய யெரிதரு மாலை - பெருங்.1.33:93-94.

## 4. நெய்தல் - தோழி கூற்று

**கானல்அம் சிறுகுடிக் கடல்மேம் பரதவர்**
**நீலநிறப் புன்னைக் கொழுநிழல் அசைஇத்**
**தண்பெரும் பரப்பின் ஒண்பதம் நோக்கி**
**அங்கண் அரில்வலை உணக்கும் துறைவனொடு**
**அலரே,**
**அன்னை அறியின் இவண்உறை வாழ்க்கை**
**அரிய ஆகும் நமக்குஎனக் கூறின்**
**கொண்டும் செல்வர்கொல் தோழி உமணர்**
**வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றிக்**
**கணநிரை கிளர்க்கும் நெடுநெறிச் சகடம்**
**மணல்மடுத்து உரறும் ஓசை கழனிக்**
**கருங்கால் வெண்குருகு வெரூஉம்**
**இருங்கழிச் சேர்ப்பின்தம் உறைவுஇன் ஊர்க்கே.** (12)

— *அம்மூவனார்*

ப.கு. — **தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழி அலரச்சம் தோன்றச் சொல்லி வரைவு கடாயது.**

**பொ-ள்** — தோழி (8), துறைவனொடு (4), அலரே (5), கூறின் (6), தம் உறைவுஇன் ஊர்க்கே (12), கொண்டும் செல்வர்கொல் (7).

**பொ-ரை** — கடற்கரைச் சோலையிடத்துள்ள சிறுகுடியிலிருந்து மீன்வேட்டம் கருதி கடல்மேற் செல்லும் பரதவர், நீல நிறத்தை யுடைய புன்னை மரத்தின் செறிந்த நிழலில் தங்கி, தண்ணிய பெரிய நீர்ப்பரப்பாகிய கடலில் செல்லுதற்குரிய செவ்வியை

நோக்கிக் கொண்டு, அவ்விடத்தே முறுக்குண்டு சிக்கிக்கிடக்கும் வலையை உலர்த்தும் துறைவன்பாற் சென்று, ‘நமக்கு உண்டாகிய அலர் மொழியை அன்னை அறிந்தால் இங்குக் களவில் கூடிப் பெறும் இன்பவாழ்வு அரிதாகும்’ என்று நாமே கூறினோமானால், உப்பு வாணிகர் வெண்மையான கல்போலும் உப்பை விலைகூறிக் கொண்டு, உடன் கொண்டு செல்லும் கூட்டமாகிய எருதுகளை ஊக்கிச் செலுத்தும் நெடுவழிக்குரிய வண்டிகள் மணலின்கண் புதைந்து செய்யும் ஓசையைக் கேட்டு, வயலிலுள்ள கரிய கால்களையுடைய வெண்குருகுகள் அஞ்சி நீங்கும் கரிய கழிசூழ்ந்த நெய்தல் நிலத்தின்கண் உள்ள, தம்முடைய உறைதற்கு இனிதாகிய ஊர்க்கு நம்மை உடன்கொண்டும் போவரன்றே!

**க-ரை** — அலர் வெளிப்படுவதை அன்னை அறியின் களவு வாழ்க்கை அரிதாகும். எனவே, விரைந்து மணந்து வாழவேண்டும் என்பதாகும்.

**சொ-ள்** — மேம்-மேவும் என்பது ஈற்றுமிசை உகரம் மெய்யொடும் கெட்டு வந்தது, மேவல் - விரும்புதல், செல்லுதல், கொழுநிழல் - கதிரவன் கதிர் புகா வண்ணம் செறிந்த நிழல், அசைஇ-தங்கி, ஒண்பதம் - ஏற்ற பருவம், மீன்மிக்குத் தோன்றும் செவ்வி (து-ப), அரில் - பிணக்கம், உமணர் - உப்பு வாணிகர், கொள்ளைசாற்றல் – விலை கூறல், இவண் உறை வாழ்க்கை – புலால் உணக்கல், புள் ஓப்பல் முதலியன செய்தல் பற்றி ஆண்டுத் தங்கியவழி நிகழ்ந்த களவு வாழ்வு, கிளர்த்தல் – எழுப்பி ஊக்குதல், உரறும் - முழங்கும், வெரூஉம் - அஞ்சும்.

**சி-பு** — சங்கப் பாடல்களின் ஆசிரியப்பாட்டில் மூவசை கொண்ட சீர்கள் அருகியே வருதல் காணத்தகும். இப் பாட்டின் ‘செல்வர்கொல்’ ‘சேர்ப்பின்தம்’ என்னுஞ் சீர்கள் பாடவேறுபாடு இன்றி ஒருபடித்தாகக் காணப்படுகின்றமை நோக்க, மூவசை கொண்ட சீர் பயின்றமை புலப்படும்.

‘உறைவுஇன் ஊர்’ என்றது தலைவனுடன் மணந்து வாழும் இன்ப வேட்கையை வெளிப்படுத்தியவாறாம்.

**உள்ளுறை:** பரதவர் கடல்மேல் செல்லும் ஒண்பதம் நோக்கி அரில்வலை உணக்குவர் என்பது, தலைவியைக் களவில் கூடும்

செவ்வி நோக்கி, குறிவழித் தங்கி, தலைவன் காத்திருக்கிறான் என்னும் உள்ளுறையைப் புலப்படுத்துவதாம்.

உமணரது சகடம் மணலின்கண் எழுப்பும் ஓசை கேட்டு, கழனியில் உள்ள வெண்குருகு வெரூஉம் என்றது, களவு வாழ்க்கைக்குறித்து ஊரில் எழுந்த பழிமொழிகளைக் கேட்டு, களவு வாழ்வின்கண் ஈடுபட்ட தலைவி அஞ்சுகின்றாள் என்ற உள்ளுறையைக் குறிப்பித்ததாம்.

**இறைச்சி**: தலைவனது ஊர் உறைவதற்கு இனிமையுடையது. அவன் துறையிடத்தே உப்பு வண்டிகள் எழுப்பும் ஓசைக்கும் வெண்குருகுகள் அஞ்சும். இது தலைவன் வரைந்து கொண்டால் பழி மொழிகளைக் கூறித்திரியும் அலர்வாய்ப் பெண்டிரின் வாயும் அடங்காதோ என்ற இறைச்சியை வெளிப்படுத்துவது. தலைவன் விரைய வரையவந்து இந்த ஊரின் அலர்வாய்ப் பெண்டிரின் வாயை அடைக்கவில்லையே என்பதாம்.

**(மே) (மு)**— தலைவி கூற்றிற்குச் சிறப்பில்லாதன கூறுமிடத்து, 'நாணினும் கற்பு சிறந்தது, எனவே தலைவன் இருந்த இடத்தே தலைவி தானே செல்லினும், மனவலியின்றிச் செல்வாமெனக் கூறும் நன்மொழியினைத் தலைவி தானே கூறினும், அவை அகப்பொருளாய்த் தோன்றும். பிறவும் அகப்பொருளின் கூறுபாட்டிலே தோன்றும்' என விளக்கி, இப் பாடலை எடுத்துக் காட்டுகிறார் நச்சினார்க்கினியர் (தொல். பொ. 113).

(ஒ) 1. **கானல் அம் சிறுகுடி**: கானல் நண்ணிய காமர் சிறுகுடி – நற்.45:1; சிறுகுடி கானல்அம் சேர்ப்பன் - குறு. 145:2; கானல் நண்ணிய சிறுகுடி – குறு. 2‹8: 3.

2. **நீல்நிறப் புன்னை-நிழல்**: நீல்நிறப் புன்னை - நற்.163: 8; புன்னையங் கொழுநிழல் – நற். 101: 4; புன்னையம் புகர்நிழல் - குறு. 303: 6; எக்கர்ப் புன்னை இன்னிழல் அசைஇ – யாப். வி. 37 மேற்.; புன்னையம் கானல் - அகம். 30: 13.

3. **தண்பெரும் பரப்பு**: தண்பெரும் பௌவம் - குறு. 164: 4; தண்பல வரூஉம் புணரி - பதிற் 42: 23; தண்கடல் – பெரும். 18; மது. 524; நற். 331: 8; குறு. 306:6; பதிற். 30: 8; 51: 6; 55: 6; 88: 42.

**2-4 புன்னைநிழல் - வலை உணக்கல்:** நிலவடைந்த இருள் போல, வலைஉணங்கு மணல் முன்றில் - பட். 82-83; உரவுக் கடல் உழந்த பெருவலைப் பரதவர், மிகுமீன் உணக்கிய புது மணல் ஆங்கண், கல்லென் சேரிப் புலவற் புன்னை - நற். 63: 1-3; கணங்கொள் குப்பை உணங்குதிறன் நோக்கிப், புன்னையங் கொழுநிழல் முன்னுய்த்துப் பரப்பும் - நற். 101: 3-4.

8. **உப்பு - கொள்ளை சாற்றல்:** சில்பத உணவின் கொள்ளை சாற்றிப், பல்லெருத்து உமணர் பதிபோகு நெடுநெறி - பெரும். 64-65; வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி - பட். 29; உப்பின் கொள்ளை சாற்றி, நெடுநெறி ஒழுகை, நிலவுமணல் நீந்தி - நற். 183:2-3; வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி - அகம். 140:3; தெண்கழி விளைந்த வெண்கல் உப்பின், கொள்ளை சாற்றிய - அகம்.159:1-2.

9. **உமணர் வண்டி:** நோன்பகட்டுஉமணர் ஒழுகை - சிறுபா. 55; பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்...... பல்லெருத் துமணர் - பெரும். 62-65; உப்புஒய் சகடம் - குறு. 165:4; உமண் எருத்து ஒழுகைத் தோடுநிரைத் தன்ன - குறு. 388:4; நல்லெருது முயலும் அளறுபோகு விழுமத்துச், சாகாட்டாளர் கம்பலை - பதிற். 27:12-14; உப்புஒய் உமணர் அருந்துறை போக்கும், ஒழுகை - அகம். 30:6-7; கொடுநுக ஒழுகை, உரனுடைச் சுவல பகடுபல பரப்பிய உமண் - அகம். 159:3-4; படுமணி இயம்பப் பகலியைந்து உமணர், கொடுநுகம் பிணித்த செங்கயிற்று ஒழுகை - அகம். 329: 5-6; கழியுப்பு முகந்து கல்நாடு மடுக்கும், ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும் - புறம். 60:7-8; பண்டச் சாகாட்டு தாழ்ச்சி சொல்லிய, வரிமணன் ஞெமரக் கல்பக நடக்கும்-புறம். 90:7-8.

11. **உமணர் - ஓசை வெரூஉம்:** வார்கயிற்று ஒழுகை நோன் சுவற் கொளீஇப், பகடுதுறை யேற்றத்து உமண்விளி வெரீஇ, உழைமான் அம்பிணை இனனிரிந்து ஓட - அகம். 173:9-11; உப்புஒய் உமணர் ஒழுகையொடு வந்த, இளைப்படு பேடை இரிய- அகம். 310:14-15.

**கருங்கால் வெண்குருகு:** குறு. 303:1; 325:5; கருங்கால் குருகு - நற். 211:4.

12. **உறைவுஇன் ஊர்க்கே:** தெண்கடற் பரப்பின்எம் உறைவு இன் ஊர்க்கே - அகம். 340:24.

## 5. குறிஞ்சி - தோழி கூற்று

**நிலம்நீர் ஆரக் குன்றம் குழைப்ப**
**அகல்வாய்ப் பைஞ்சுனைப் பயிர்கால் யாப்பக்**
**குறவர் கொன்ற குறைக்கொடி நறைப்பவர்**
**நறுங்காழ் ஆரம் சுற்றுபு அகைப்பப்**
**பெரும்பெயல் பொழிந்த தொழில எழிலி**
**தெற்குஏர்பு இரங்கும் அற்சிரக் காலையும்**
**அரிதே காதலர்ப் பிரிதல் இன்றுசெல்**
**இகுபெயல் தரூஉம் வாடையொடு**
**மயங்குஇதழ் மழைக்கண் பயந்த தூதே. (9)**

— *பெருங்குன்றூர் கிழார்*

ப. கு. — **தலைவன் செலவுக்குறிப்பு அறிந்து வேறு பட்ட தலைவிக்குத் தோழி சொல்லியது.**

**பொ-ள்** — ஆர, குழைப்ப ( ), யாப்ப (2), அகைப்ப (4) பொழிந்த (5) இரங்கும் அற்சிரக்காலை (6), காதலர்ப்பிரிதல், அரிதே (7), மழைக்கண் தூது பயந்த (9).

**பொ-ரை** — நிலமானது நீரை நிரம்பப் பெற்றுக் குளிரவும் குன்றிடத்து மரம் முதலாயின தழைத்துப் பசுமை கொள்ளவும், அகன்ற இடத்தையுடைய பசிய சுனைகள் நீர்வழிந்து கால் வழியாக ஓடிப் பயிர்களிற் பாய்ந்து வளம் செய்யவும், குறவர்களால் வெட்டி எறியப்பட்ட நறைக்கொடிகள் கிடந்தாங்கே வேர்வீழ்த்து வளர்ந்து, முற்றிக் காழ்ப்பேறிய நறிய சந்தன மரங்களைச் சுற்றிப் படரவும் பெருமழையைப் பெய்வதாகிய தொழிலைச் செய்த மேகம் தென்திசை நோக்கி எழுந்து சென்று முழங்கும் முன்பனிக் காலத்துக் காதலர்ப்பிரிதல் அரிதாகும்; இன்று, வீழ்ந்து சொரிந்து செல்கின்ற மழை தந்த வாடைக்காற்றுடன் மயங்கி வருந்தும் பூவிதழ் போன்ற இமைகளையுடைய குளிர்ந்த நின் கண்களும் பிரிவைக் கைவிடும் தூதினை உரைத்தன.

**க-ரை** — அற்சிரக் காலத்துக் காதலரைப் பிரிதல் அரிதாகும். பிரிவு கருதிய காதலர்க்கு நின் மழைக்கண்கள் பிரிவைக் கை விடற்கமைந்த தூது உரைத்தன, ஆதலான் அவர் பிரியார் என்பதாம்.

**சொ-ள்** — ஆர்தல் - நிறைதல், குழைப்ப - தழைப்ப, கால் யாத்தல் - நீர் கால்வாய் வழி ஓடிப்பாய்தல், நறைப்பவர் - ஒருவகை மணக்கொடி, நறவங்கொடி எனப்படும்,ஆரம் - சந்தனம்; அகைப்ப-தளிர்ப்ப, எழிலி - மேகம், அற்சிரம் – முன்பனிக்காலம்; இகுபெயல் - வீழ்ந்துகும்மழை.

**சி-பு** — **உள்ளுறை:** நிலம் நீர் ஆரவும், குன்றம் குழைப்ப வும் பயிர்கால் யாப்பவும் வந்த மழை, குறையுண்டுக்கிடக்கும் நறைக்கொடி வேரூன்றி அருகே உள்ள சந்தனமரத்தைச் சுற்றிப் படருமாறு தழைக்கச் செய்யும். இது, தலைவன் பிரிவு கருதி மெலிந்து வருந்தும் தலைவி, தலைவனைத் தழுவி மகிழவேண்டும் என்னும் உள்ளுறையை வெளிப்படுத்துவதாம்.

**இறைச்சி:** இச் செய்தியில் இறைச்சிப்பொருள் பொதிந்திருப் பதையும் காணலாம். வேரினின்று வெட்டி நீக்கப்பெற்ற நறைக் கொடியானது மிகுமழையால் மீண்டும் வேரூன்றித் தளிர்த்து அருகிருக்கும் சந்தனமரத்தைச் சுற்றிப் படர்கிறது.இது, பெற்றோ ரின் நீங்கி வந்த தலைவியோ, நின் தண்ணளி இல்லாமல் எப்படித் தழைப்பாள்? குறைக்கொடி தளிர்த்துப் படர்வதுபோல அவன் அருகிருந்து தழுவி, அவளை இல்லற மகிழ்ச்சி காணச் செய்ய வேண்டும் என்னும் இறைச்சிப் பொருளைத் தருவதாகும்.

முதற்பாட்டில், தலைமக்கள் கேண்மை தாமரைத்தாது, சந்தன மரத்தில் தொடுக்கப்பெற்ற தேனடைக்கு உவமையாகக் காட்டப்பெற்றது. அதுபோலவே இப் பாட்டிலும் உயர்ந்த மணம் தரும் நறைக்கொடியையும் (தலைவியைக் குறித்தது) முதிர்ந்த சந்தன மரத்தையும் (தலைவனைக் குறித்தது) இணைத்துக் காட்டியிருப்பது நினைந்து மகிழ்தற்குரியதாகும்.

அற்சிரக் காலையும் என்பதில் உள்ள 'உம்' எதிரது தழுவிய தாக நின்று, வரைந்து இல்லறம் நடாத்தும் இளவேனில் பருவத் தையும் சுட்டியதாகும்.

முற்பதிப்பாசிரியர் (பி. ப., துப்.), 'சுற்றுவன' (4) என்னும் பாடத்தைக் கொண்டு மேற்கண்ட பொருளையே கொள்வாரா யினர். ஆயின், இப் பாடம் பன்மை வினைமுற்றாக நின்று ஓசை பயவாமல் காணப்படுகிறது. சுற்றுபு என்னும் பாடமோ செய்பு என்னும் வாய்பாடு செய என்னும் வாய்பாட்டு எச்சத்தைத் தழுவுவதாக அமைகின்றது. இது ஏனைய எச்சங்களுடன் பொருள்

பொருத்தமுறவும் காணப்படுகின்றது. சங்க இலக்கியத்துப் பல இடங்களில் இவ் வகை வழக்குக் காணப்படுகின்றது. (காண்க: ஒப்பு). எனவே சுற்றுபு என்னும் பாடம் சிறந்ததாகத் தேர்ந் தெடுக்கப்பெற்றது.

இகுடெயல் (8) என்னும் பாடம் ஏடுகளில் இகுளையர், இளையர், எனப் பலபடியாகக் காணப்பட்டமையின் முற்பதிப் பாசிரியர் (பி.ப.) பொருள் பொருத்தம் காண்பதில் இடர்ப் பட்டனர். தரூஉம் வாடை, அற்சிரக்காலை என்னும் சூழல்களை யும் பாடலின் மையக்கருத்தையும் நோக்கும்போது இகுபெயல் என்னும் பாடமே பொருட்சிறப்புக் கொண்டதாகத் தோன்று கிறது. எனவே, இகுபெயல் என்னும் பாடம் தேர்ந்து கொள்ளப் பெற்றது.

(ஒ) **நிலம்நீர்ஆர:** நீரார் செறுவின் நெய்தல் - கலி: 75:1; மண்பயம் பூப்பப் பாஅய்த், தண்பெயல் எழிலி தாழ்ந்த போழ்தே– அகம். 175: 17–18; மண்கண் குளிர்ப்ப வீசித் தண்பெயல், பாடுலந் தன்றே பறைக்குரல் எழிலி – அகம். 23:1–2.

2. **குன்றம் குழைப்ப:** நேர்கால் முதுகொடி குழைப்ப நீர் சொரிந்து - அகம். 174:3; நிலம் தண்ணென்று கானம் குழைப்ப அகம். 314:3; பழையன் காக்கும் குழைபயில் நெடுங்கோட்டு - சிலப், 27:124; முளிபுற் கானம் குழைப்ப, கல்லென அதிர்குரல் ஏறொடு துளி சொரிந் தாஅங்கு - புறம். 160:2-3.

1–2 **குன்றம்-பைஞ்சுனை:** நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை – திருமு. 253; அங்கண் அறைய அகல்வாய்ப் - பைஞ்சுனை-நற். 357;7; அகல்வாய்க் குண்டுசுனை - குறு. 59:2; சாரல், குண்டுநீர்ப் பைஞ்சுனை - குறு. 291:6; ஓங்குமலைப் பைஞ்சுனை - குறு. 317:4; குன்றத்துக் கவாஅன் பைஞ்சுனை- ஐங். 299:1; நிவந்தோங்கு இமயத்து நீலப் பைஞ்சுனை – பரி. 5:48; குன்றத்து... பைஞ்சுனை - அகம். 59:11-13.

**கால்யாப்ப:** நீர்கால் யாத்த - குறு. 388:1: காடுகால் யாத்த நீடுமரச்சோலை - அகம். 109:5.

3. **நறைக்கொடி:** நறைவளர்கொடி - மலை. 51 ; தண்கமழ் நறைக்கொடி - ஐங் 276:2.

4. **நறுங்காழ்ஆரம்:** நாகம் திலகம் நறுங்காழ் ஆரம்-மலை. 520; சிலப்.25:18; நறுங்காழ் ஆரமொடு மிடைந்த-நற். 314:4.

3-4 **நறைக்கொடியும் சந்தனமும்:** நறைகால் யாத்த நளிர் முகைச் சிலம்பிற், பெருமலை விடரகம் நீடிய சிறியிலைச் சாந்தம்- அகம். 242:9-10; சாந்தம் பொறைமர மாக நறைநார், வேங்கைக் கண்ணியன் - அகம். 282:9-10; நறைபடர் சாந்தம் - தி.மா. 1; நறையு நாகமும் உறையிரு வேரியும் - பெருங். 1.50:22.

**சுற்றுபு:** சொல்லுபு பரியல் - நற். 121:6; சுட்டுபு நக்கி-குறு. 60:4; சுற்றுபு சுரிந்த - அகம். 101:4; சொல்லுபு குறுகி - புறம். 152:19; வாளொடு பற்றுபு - சிந். 633:3.

**அகைப்ப:** காழ்முளை அகைய - நற். 172:2; எரிஅகைந் தன்ன வீததை இணர- நற். 379:3; மாமுறி ஈன்று மரக்கொம்பு அகைப்ப - அகம். 345:13.

5. **பெரும்பெயல் - எழிலி:** எழிலி, பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை - முல். 5-6; பெரும்பெயல் பொழிந்த வழிநாள்- நற். 157:2; தாவில் பெரும்பெயல் தலைஇ - நற். 261:5; பெரும் பெயல் உண்மையின் - குறு. 133:3; பெரும்பெயல் உழந்த - குறு. 13:2; பெரும்பெயல் விடியல் - குறு. 168:3; பெரும்பெயல் பொழிந்த ஏம வைகறை - அகம். 42:10.

6. **எழிலி தெற்கு ஏர்பு இரங்கும்:** தன்தொழில் வாய்த்த இன்குரல் எழிலி, தென்புல மருங்கிற் சென்றற் றாங்கு - நற். 159:4-5; வடபுல வாடைக்கு அழிமழை தென்புலம், படரும் தண் பனி நாளே - குறு. 317:6-7; தெற்கு ஏர்பு அழிமழை பொழிந்த பொழுது - அகம். 13: 12; விசும்பு உரிவதுபோல் வியல்இடத்து ஒழுகி, மங்குல் மாமழை தென்புலம் படரும் - அகம். 24;7-8.

6-7. **அற்சிரக்காலை - காதலர்ப் பிரிதல் அரிது:** காதலர்ப் பிரிந்தோர் கையற நலியும், தண்பனி வடந்தை அற்சிரம் - ஐங். 223:3-4; தண்பனி யற்சிரம் தமியோர்க்கு அரிதென - அகம். 178:19; அற்சிரத் தூதை தூற்றப் பனியலைக் கலங்கிய நெஞ்ச மொடு, வருந்துவ மல்லமோ பிரிந்திசினோர் திறத்தே - அகம். 183:13-15; அகன்றுறை மகளிர் அணிதுறந்து நடுங்க அற்சிரம் வந்தன்று - அகம்.217:12-13.

8. **இருபெயல்:** மாரியின் இருதருவில் - மலை. 226; நீர் இருவன்ன நிமிர்பரி - ஐங். 465:1; இருவிசும் பதிர முழங்கி யர நலிந்து இருபெயல் அழிதுளி தலைஇ வானம்-அகம். 274:1-2.

**பெயல் தருஉம் வாடை:** அழிதுளி கழிப்பிய அழிபெயற் கடை நாள், ...அல்கலும் அலைக்கும் நல்கா வாடை - நற். 89:4-6;

தண்ணென, வாடிய இளமழைப் பின்றை, வாடையுங் கண்டிரோ - நற். 229:10-11; நுண்ணுறை யழிதுளி தலைஇய, தண்வரல் வாடை - குறு. 35:4-5; அச்சிரக் காலார்த்து அணிமழை கோலின்றே - பரி.18:38; பெய்துபுலந் திறந்த பொங்கல் வெண் மழை, ... ... .. வாடையொடு துயல்வர - அகம். 217:1-5.

9. மயங்குஇதழ் மழைக்கண்: ஐங். 220:5

## 6. குறிஞ்சி - தலைவன் கூற்று

**நீர்வளர் ஆம்பற் தூம்புடைத் திரள்கால்**
**நார்உரித் தன்ன மதன்இல் மாமைக்**
**குவளை அன்ன ஏந்துஎழில் மழைக்கண்**
**திதலை அல்குல் பெருந்தோள் குறுமகட்கு**
**எய்தச் சென்று செப்புநர்ப் பெறினே**
**இவர்யார் என்குவள் அல்லள் முனாஅது**
**அத்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி**
**தெறிமட மாற்கு வல்சி ஆகும்**
**வல்வில் ஓரி கானம் நாறி**
**இரும்பல் ஒலிவரும் கூந்தல்**
**பெரும்பே துறுவள்யாம் அலந்தனம் எனவே.**

— *பரணர்*

**ப. கு — இரவுக்குறிப்பாற்பட்டு ஆற்றானாய தலைவன், தோழி கேட்ப, தன் நெஞ்சிற்குச் சொல்லியது.**

பொ-ள் — குறுமகட்கு (4), யாம் அலந்தனம் எனவே (11), செப்புநர்ப் பெறினே (5), பெரும்பேதுறுவள் (11).

பொ-ரை — நீரிலே வளர்கின்ற ஆம்பலின், உள்ளே துளையுடைய திரண்ட தண்டினது நாரை உரித்து நீக்கினாற் போன்ற தோற்றமுடைய அழகுக்கு இருப்பிடமான மாமை நிறத்தையும், குவளைமலர் போன்ற மிக்க அழகு பொருந்திய குளிர்ந்த கண்களையும், திதலை வரி பரந்த அல்குலையும், பெரிய தோள்களையும் கொண்ட இளமகளாகிய தலைமகளிடத்து நெருங்கச் சென்று,'யான் இரவிடைப் போந்தும் அவளைச் சந்திக்க இயலாது வருந்தினேன்' என்று சொல்லுவார் உளரானால், 'வந்துள்ள

இவர்தாம் யாரோ, என்று வினவாள், சுரத்தின்கண் நிற்கும் குமிழ மரத்தினது வளைந்த மூக்கினையுடைய முதிர்ந்து உதிரும் கனிகள் வெறுப்பை விளைவியாது ஆங்குத் துள்ளியோடும் இள மான்களுக்கு உணவாகும் வலிய வில்லையுடைய ஓரி என்பானது கானம் போல நறுமணம் கமழும் கரிய பலவாய்த் தழைத்து அடர்ந்திருக்கும் கூந்தலையுடைய அவள் பெருங்கலக்கமுற்று வருந்துவாள்.

**க-ரை** — இரவுக்குறிக்கண் நிகழ்ந்த இடையூற்றால் தலைவன் வருந்தினான் என்பதைத் தலைவி அறிந்து கொண்டால் பெரிதும் வருந்துவாள், தலைவனைத் தவறாக நினையாள் என்பதாம்.

**சொ-ள்**— தூம்பு-உட்துளை, கால்-தண்டு, மதன்-அழகு, இல்-இருப்பிடம், ஏந்துஎழில்-மிக்க அழகு, திதலை - அடிவயிற்றில் காணும் தேமல் போன்ற வரிகள், முணைவு – வெறுப்பு, கொடு மூக்கு - வளைந்த மூக்கு, தெறித்தல் - துள்ளி ஓடுதல், மாற்கு-மானுக்கு, சாரியை பெறாத நிலை, வல்சி - உணவு, கானம்-காடு, ஈண்டு ஓரியினது கொல்லிமலைக் கானத்தைக் குறித்தது, ஒலிதல் - தழைத்தல், பேதுறுதல் - துன்புறுதல், அலந்தனம்-வருந்தினம்.

**சி-பு** — **இறைச்சி**: அத்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி ஆங்குத் துள்ளி ஓடும் இளமான்களுக்கு வெறுக்காத உணவாக அமைந்து இன்பம் செய்வதாகும். இக் காட்சியை நினைவூட்டும் இப் பாட்டு, தலைவியைத் தலைவன் நாடி வந்துள்ள செய்தியும் தலைவிக்கு மகிழ்வையே ஊட்டும், அவனை வெறுத்து ஒதுக்காது கூடி மகிழ்வாள் என்னும் இறைச்சிப் பொருளை நல்க வல்லதாம்.

தலைவியின் - ஓரி கானம் நாறும் கூந்தலழகு, குவளையன்ன ஏந்தெழில் மழைக்கண், திதலை அல்குல், பொருந்தோள், இளமை ஆகிய அழகு நலங்களை ஓவியமாக்கும் இப் பாட்டில். மாமை நிறமும் அழகு செய்வதாகக் கொள்வதே பொருத்தமாகும். முற்பதிப்பாசிரியர் (பி.ப.) மதன் இல் எனக் கண்ணழித்து 'அழகற்ற மாமை நிறத்தினையும்' எனப் பொருள் காண்கிறார். இளமகளிர்க்கு அமைந்த மாமை நிறம் அழகு செய்வதேயாம்; இதனை மாமைக்கவின் என்றே சங்க இலக்கியங்கள் பேசு

கின்றன. (காண்க:ஒப்பு) எனவே இல் என்பதற்கு இன்மைப் பொருள் கொள்வது சற்றும் பொருந்துவதாகத் தோன்றவில்லை.

இவ்வாறே 'பெரும் பேதுறுவள்' என்பதற்கும் பாட்டின் மையக் கருத்தைப் பிறழ்ந்த பொருளைக் காண்கிறார் அவர். பேதுறுதல் என்பது வருத்தத்தையும் அதனால் ஏற்படும் மயக்கத் தையும் குறிப்பதாகவே சங்க இலக்கியங்களில் பயிலக் காண்கிறது (காண்க;ஒப்பு). அவ்வாறிருக்க, அவர் கொண்ட 'களிப்பால் மயக்கமுறுவாள்' என்னும் பொருள் ஏற்புடைத்தாக அமையாமை பெறப்படும்.

எறிமடமாற்கு, தெறிமடமாற்கு (8) என்னும் பாடங்களில் எறிமட மாற்கு என்னும் பாடம் பொருள் சிறவாத பாடமாகக் காணப்படுகிறது. தெறித்த ஓட்டம், அதாவது துள்ளிச் செல்லும் தன்மை மானுக்கே உரிய சிறப்பாகும். சங்க இலக்கியப் பாடல் களில், மானுடன் சேர்ந்த அடைமொழியாக இச்சொல் காணப்படு கிறது (காண்க: ஒப்பு). எறிமடமான் என்னும் வழக்கு காணப் பெறவில்லை. 'தெறி' என்பதைத்தான் 'யெறி' எனப் பெரும் பாலான ஏடுகள் பிழைக்கக்கொண்டன எனத் தோன்றுகிறது. எனவே, தெறிமடமான் என்னும் பாடமே சிறந்ததாகக் கொள்ளப் பெற்றது. தலைவியைக் குறுமகள் என்று காட்டியதும் இங்கு சிந் தித்தற்பாலது.

இவ்வாறே, அலந்தனம் என்னும் பாடமும் (11), ஏடுகளில் பிழைபடக் காணப்பெறுகிறது. 'யாமலந்தனம்' என்னும் பாடத்தை ல,வ ஆகப் படிக்கப்பெற்றதாலும் எழுதப்பெற்றதாலும்,கண்ணழிக் கும் போது 'வந்தனம்' என்னும் பாடமாகக் கொண்டு பொருள் கண்டனர் முற்பதிப்பாசிரியர் (பி. ப.), இரவுக் குறிக்கண் இடையீடுபட்டுத் தலைவியைக்கூடாது வருந்திய, தலைவனின் வருத்தத்தைத் தலைவி அறிய வேண்டும், அறிந்தால் அவள் தலைவனைச் சினந்து ஒதுக்காள் என்பதே பாடலின் மையக் கருத்தாம். இக் கருத்தை நோக்கும்போது, தலைவன் ~~வருந்தி~~ வருந்தினான் என்பதே வந்தனம் என்பதைக் காட்டிலும் பொருத்த மாதல் காணலாம். பேதுறுவள் என்பதற்குத் தவறான பொருள் கண்டதால் இப் பாடத்தையும் பிழைபட உணர்ந்தனர் போலும்.

(மே) (மு) குறைநேர்தலும் மடற்கூற்றொழிதலும் என்னும் பகுதியில், தலைவன் தலைவி செவ்வி எளிமை செப்பற்கு இப்

பாட்டை எடுத்துக்காட்டுகிறார் நம்பியகப் பொருள் உரையாசிரியர் (நம். 146).

(ஒ) **நீர்வளர் ஆம்பல்:** குண்டுநீர் ஆம்பல் - குறு. 122:1; நெடுநீர் ஆம்பல்-குறு. 352:1.

**ஆம்பல் தூம்புடைத் திரள்கால்:** அம்தண் பழனத்து, ஏந்து எழில் மலர தூம்புடைத் திரள்கால், ஆம்பல் - குறு. 178:1-3; பொய்கைப் பூத்த புழைக்கால் ஆம்பல் - ஐங். 34:2; தூம்புடைத் திரள்கால் – பெரும். 231, ஐங். 16:1.

1-2. **ஆம்பல் நாருரித் தன்ன மாமை;** பொய்கை ஆம்பல் நாருரி மென்கால், நிறத்தினு நிழற்றுதன் மன்னே, இனிப்பசந் தன்றென் மாமைக் கவினே - ஐங். 35:2-4.

**மதன்இல் மாமை:** மதனின்மாமை - நற். 244:11; இவள் மாமைக் கவினே - குறு. 27:3; ஐங். 103:3-4; 134:3; 470:5; துறைவற் கினிய மன்றஎன் மாமைக் கவினே - ஐங். 146:2-3; நுண்ணெழில் மாமை சுணங்கணி ஆகம் - கலி. 4:17; (மாமை, ஈங்கையின் தளிர், (நற். 205:9-11, அகம். 75:17-18) அசோகின் அந்தளிர், (நற். 244:10) பொன்னின் நிறம் (நற். 304:6)' பொன்னுரை மணி (கலி. 48:17) ஆகியவற்றை ஒத்து அழகு செய்வதாகும். 'மணிக்கேழ் மாமை', 'காசு நிழற் காட்டு மாசின் மாமை' எனவும் கூறப்படுகிறது (பெருங். 1:33:37, 1.40:227).

3. **குவளை-கண்:** குவளை உண்கண் - நற். 77:12; குறு. 167:3; அகம். 138:2; 156:8; குவளையம் கண் - குறு. 13:5: பேரமர் மழைக்கண் - ஐங். 282:2; ஏந்தெழில் மலருண்கண் - கலி.14;2; ஏந்தெழில் மழைக்கண் - புறம். 116:3; பெருமழைக் கண் - குறு.72:1, 286:4, ஐங். 282:2.

4. **திதலைஅல்குல்:** திதலைச், சில்பொறி அணிந்த பல்காழ் அல்குல் குறுமகள் - நற். 77:11; திதலை அல்குல் - நற். 84:2; 161:12; 307:4; 370:6; அகம். 54:21; 183:2; 189:9; நுண்பல், கோடேந்து அல்குல் அரும்பிய திதலை - நற். 198:6; தித்தி பரந்த பைத்துஅகல் அல்குல் - குறு.294:5.

**பெருந்தோட் குறுமகள்:** நற்.80:8; 221:8; 366:3; குறு.95:3; 280:3; அகம். 195:1; புறம். 342:2.

5. **எய்தச்சென்று செப்புநர்ப் பெறினே:** துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே - குறு. 98:2.

7. **அத்தக் குமிழ்:** கானக் குமிழின் கனிநிறம் - சிறு. 225; பாலை முனையிற் குமிழின் - பெரும். 180; அத்தக் குமிழின் ஆயிதழ் அலரி - நற். 286:2.

8. **குமிழ் - மானுக்கு வல்சி ஆதல்:** உழைமான் அம்பிணை தீண்டலின் இழைமகள், பொன்செய் காசின் ஒண்பழந் தாஅம், குமிழ்தலை மயங்கிய குறும்பல் அத்தம் - நற். 274:3-5; குமிழுண் வெள்ளைப் பகுவாய் - புறம்.324:9.

தெறிமடமான்: பருஉப் பெருந்ததரல் ... ... தெறித்து நடை மரபின், தன்மறிக்கு நிழல்ஆகி - குறு.213:`; தெறிநடை மரைக் கணம் இரிய – அகம். 224:11; ததர்தழை முனைஇய தெறிநடை மடப்பிணை - அகம்.234:10; தெறிமறி பார்க்கும் குறுநரி - அகம். 274:10; சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை – அகம்.304:8.

9. **வல்வில்ஓரி:** குறு. 100:5; அகம். 209:12; கொல்லி ஆண்ட வல்வில் ஓரி - புறம். 158:5; (வல்வில் விடலை - ஐங். 373:5, வல்வில் ஐவர் - கலி. 104:58, வல்வில் இராமன் - திவ். பெரி. 5:1:4).

**கானம் நாறும் கூந்தல்:** திண்தேர்க் கைவள் ஓரி கானம், தீண்டி எறிவளி கமழும் நெறிபடு கூந்தல் - குறு. 199: 2-4; முரண்கொள் துப்பின் செவ்வேள் மலையன், முள்ளூர்க் கான நாற வந்து, ... ... கூந்தல் வேய்ந்த - குறு.312: 2-5; இமயக் கானம் நாறுங் கூந்தல் - அகம். 399:2.

10. **இரும்பல்-கூந்தல்:** ஒலிமென் கூந்தல் என் தோழி–குறி.2; விரிஒலி கூந்தல் - நற். 141:12: தாழ்ந்தொலி கதுப்பு-நற். 197:6; ஒலிபல் கூந்தல் - நற்.260:8; 313:4; ஒலிவரும் தாழிருங் கூந்தல் - நற். 295;2; ஒலிமென் கூந்தல்- குறு. 225:7; இரும்பல் கூந்தல்-குறு. 165:5; ஐங். 231:2; 281:3; பல்லிருங் கூந்தல் - நெடு. 54; ஐங். 308:1; 429:1; கலி. 101:41; அகம். 43:1; நறும்பல் ஒலிவரும் கதுப்பிற் தேமொழி - புறம். 209;16.

11. **பெரும் பேதுறுவள்:** யாம்செய் தொல்வினைக்கு எவன்பே துற்றனை - நற். 88:1; காதலர் அகன்றெனக் கலங்கிப் பேதுற்று-நற்.109:2; ஊதையம் குளிரொடு பேதுற்று மயங்கிய - குறு. 197:3; வீங்குஇழை நெகிழ விம்மி ஈங்கே, எறிகண் பேதுறல்-குறு. 358:1-2; ஆதி மந்தி போலப் பேதுற்று - அகம். 45:14; ஆதி மந்தி பேதுற்று இனைய - அகம். 76:10.

## 7. பாலை - தோழி கூற்று

**சூருடை நனந்தலைச் சுனைநீர் மல்கப்**
**பெருவரை அடுக்கத்து அருவி ஆர்ப்பக்**
**கல்அலைத்து இழிதரும் கடுவரற் கான்யாற்றுக்**
**கழைமாய் நீத்தம் காடுஅலை ஆர்ப்பத்**
**தழுங்குகுரல் ஏறொடு முழங்கி வானம்**
**இன்னே பெய்ய மின்னுமால் தோழி**
**வெண்ணெல் அருந்திய அண்ணல் யானை**
**கறிவளர் சிலம்பில் துஞ்சும்**
**சிறியிலைச் சந்தின வாடுபெருங் காட்டே.** (9)

— *நல்வெள்ளியார்*

ப.கு. — பட்ட பின்றை வரையாது கிழவோன் நெட்டிடைக் கழிந்து பொருள்வயிற்பிரிய, ஆற்றாளாய தலைவிக்குத் தோழி சொல்லியது.

**பொ-ள்** — தோழி (6), வாடு பெருங் காட்டே (9), மல்க (1), ஆர்ப்ப (2) ஆர்ப்ப (4), முழங்கி (5), வானம் இன்னே பெய்ய மின்னுமால் (6).

**பொ-ரை** — தோழி, மலையில் விளைந்த வெள்ளிய நெல்லைத் தின்ற தலைமை கொண்ட யானை, மிளகுக்கொடி படர்ந்து வளரும் பக்கமலையில் கிடந்து உறங்கும் சிறிய இலைகளைக் கொண்ட சந்தன மரங்களையுடைய கோடையால் வாடிக்கிடக்கும் காட்டில், தெய்வம் உறையும் அகன்ற இடத்தின்கண் உள்ள சுனைகளில் நீர் நிறைந்து வழியவும், பெரிய மூங்கில்களையுடைய மலைப்பக்கத்தே அருவி பெருகி ஆரவாரிப்பவும், கற்களைப்புரட்டி இழிந்து வரும் மிகுவிரைவுடைய காட்டாற்றினிடத்தே கரையிலுள்ள மூங்கிலும் மாய்ந்து ஒழியுமாறு பெருகிய வெள்ளத்தின் அலை காட்டிற்சென்று மோதவும், ஒலிக்கின்ற இடி ஏற்றொடு முழக்கம் செய்து மேகம் இப்பொழுதே மழை பெய்ய வேண்டி மின்னாநிற்கும்.

**க-ரை**—கார்காலம் தொடங்கிற்று. இக் காலத்து வருவதாகக் கூறிய காதலர் வருவர், நின் துன்பமும் தீரும் என்பதாம்.

**சொ-ள்** — சூர்-தெய்வம், அச்சமுமாம், நனந்தலை-அகன்ற இடம், அடுக்கம் - பக்கமலை, வரை-கழை-மூங்கில், நீத்தம்-

வெள்ளம், கடுவரல் - மிக்க விரைவு, தழங்கும் - முழங்கும், ஏறு- இடிஏறு. ஆல்-அசை, வெண்ணெல் - மலைநெல், ஐவனமும் ஆம். கறி-மிளகு, சிலம்பு-பக்கமலை, சிறியிலை - சிறியஇலை - தொகுத்தல் விகாரம்.

சி-பு — வாடிய காட்டிடத்து மிகுமழை பெய்ய வானம் மின்னுகிறது என்பது, தலைவனைப் பிரிந்து வாடியிருக்கும் தலைவி மகிழ்ந்து மனை வாழ்வு காணுமாறு, அவன் விரைந்து வருவான் என்னும் குறிப்பைக் காட்டுவதாகும்.

**இறைச்சி:** சுனைநீர் மல்கவும், அருவி ஆர்ப்பவும்; கான்யாறு பெருகி ஓடவும் வானம் ஏறொடு முழங்கிப் பெய்தற்கு மின்னும், இக் காட்சி, தோழியர் கண்டு மகிழவும், தமர் உவந்து ஆர வாரிக்கவும், ஊரவர் கூடி இன்புறவும் மணமுரசு முழங்க அவளின் மணம் நாடறிய நிகழும் என்னும் இறைச்சிப்பொருளைத் தருதல் காணலாம்.

**உள்ளுறை:** சிலம்பிடை விளைந்த வெண்ணெல்லை ஆர உண்ட தலைமை மிக்க யானை கறிவளர் சாந்தம் கமழும் இடத்தின்கண் துயிலப்பெறும் என்பது, தலைமை அழகு வாய்ந்த தலைவியானவள் தலைவனது அன்பால் விளையும் இன்பத்தை நுகர்ந்து அவன் சந்தன மணங்கமழும் மார்பிடைத் துயிலப் பெறுவாளாக என்னும் உள்ளுறையைக் காட்டுவதாகும்.

அண்ணல் யானை, கறிவளர் என்னும், (7,8) பாடங்களுக்கு முறையே வரிநுதல் யானை, தண்ணறும் என்னும் பாடங்களை மேற்கொள்வார் பின்னத்தூரார். அவர் கொண்ட பாடங்களில் சிறப்பு இருப்பதாகத் தோன்றவில்லை. அண்ணல் யானை, கறிவளர் சிலம்பு இப் பாடங்களில் மோனை, எதுகைச் சிறப்புகள் அமைந்திருக்கின்றன. சந்தனம் வளரும் இடத்து மிளகுக் கொடி கள் வளர்வது கண்கூடு. சங்க இலக்கிய வழக்கும் இதனை உறுதி செய்கின்றது (காண்க:ஒப்பு). எனவே, பொருட் சிறப் புடைய இப் பாடங்களே ஈண்டு மேற்கொள்ளப் பெற்றன.

ஏறொடு என்னும் (5) பாடம் ஏறு ஒடு என்னும் சொற்கள் புணர்ந்து நின்ற நிலையைக் காட்டுவது. தொல்காப்பியர், நெட் டெழுத்தின் பின்னர் குற்றுகரங்களான டகாரமும் றகாரமும் தன்னொற்று மிகும் என்னும் விதியைக் கூறியுள்ளார். (நெட்

டெழுத் திம்பர் ஒற்றுமிகத் தோன்றும், அப்பால் மொழிகள் அல் வழியான - தொல். எ. 196) இவ் விதியின்படி ஏறு-ஒடு என்பது ஏற்றொடு என்று தான் இருக்க வேண்டும். ஆயின் ஏறொடு என்பது பாட வேறுபாடின்றியே ஏடுகளில் காணப்படுகிறது. சங்க இலக்கியங்களில் இச் சொல் இருவகை வடிவங்களிலும் காணப் படுகிறது.

வரைமுதல் இரங்கும் ஏறொடு வான் - மது. 243; கடுங்குரல் ஏறொடு கனைதுளி தலைஇ - நற். 51:4; இருள்தூங்கு விசும்பின் அதிரும் ஏறொடு - நற். 261:2; முரசதிர்ந் தன்ன இன்குரல் ஏற்றொடு - குறி. 49; சிலைவல் ஏற்றொடு செறிந்தஇம் மழைக்கே- நற். 112: 9; என இருவகை ஆட்சியும் சங்க நூல்களில் பயின்று வருகின்றன. இவ்வாறே, களிறொடு பட்டஞான்று - குறு. 393: 15; போன்றவும் தொல்காப்பிய விதியை மீறி வந்திருக்கின்றன. இவ் வகை விதிமீறலின் காரணம் புலப்படவில்லை. (செய்யுளில், இவ்வாறு வருவது பிற்கால இலக்கியங்களிலும் காணப்படுகிறது. 'காடிலாடிய கண்ணுதலானை' – தேவா. சுந். 7:56.6, ஈண்டும் காட்டில் என்பது காடில் என்றே வந்தது) ஏறொடு என்னும் பாடம் செய்யுள் ஓசைநயம் கருதியே அமைந்திருக்குமோ எனத் துணியப் பட்டது.

(ஒ) 1. **சூருடை - அடுக்கம்-சுனைநீர்:** சூர்புகல் அடுக்கத்துப் பிரசம் - மலை. 239; சூருடை நனந்தலைச் சுனைநீர் மல்க, மால் பெயல் தலைய மன்னெடுங் குன்றத்து – நற். 268:1–2; சூருடைச் சிலம்பில் அருவி ஆடி - நற். 373: 5; கடவுட் கற்சுனை - நற். 34:1; மன்உயிர் அறியாத் துன்அரும் பொதியில், சூருடை அடுக் கத்து ஆஅம் – குறு. 376:1–2; சூருடை குன்றிற் தடவரை - பரி. 19:23; அருவி ஆன்ற பெருவரை மருங்கிற், சூர்ச்சுனை துழைஇ – அகம். 91:3–4; கார்புகன்று எடுத்த சூர்புகல் நனந்தலை - அகம். 303:5.

2. **பெருவரை அடுக்கத்து அருவி:** பெருவரை அடுக்கம் பொற்ப - நற். 34:4; பெருவரை அடுக்கத்து அருவி - நற். 259: 5; 334:2: 399:1; பெருவரை மிசையது நெடுவெள் ளருவி – குறு. 78:1; ஓங்குவரை அடுக்கம் – குறு. 69:4.

**அருவி ஆர்த்தல்:** அருவி ஆர்க்கும் பெருவரை அடுக்கத்து - நற். 205:1; அருவி ஆர்க்கும் பெருவரை நண்ணி - நற். 213:1; தேன்தூங்கு உயர்வரை அருவி ஆர்ப்ப - நற். 396:2; கோடுயர்

நெடுவரைக் கவாஅன்,... பாடுஇன் அருவி-குறு. 353:2-3; கருவி ஆர்ப்பக் கருவி நின்றன குன்றம், அருவி ஆர்ப்ப-பரி.18: 45-46.

3. **கல்அலைத்து இழிதரும் ... கான்யாறு:** குமிழி சுழலும் குண்டுகய முடுக்கர், அகழிஇழிந் தன்ன கான்யாற்று நடவை - மலை.213-14; அவிரறல் ஒழுகும் விரைசெலற் கான்யாற்று - நற். 144:7; கரைபொருது இழிதரும் கான்யாற்று இகுகரை - நற். 381:4; கல்பொருது இரங்கும் கதழ்வீழ் அருவி - குறு. 134:5; மால்வரை இழிதரும் தூவெள் அருவி - குறு. 95:1-2; நெடுங்கரைக் கான்யாற்றுக் கடும்புனல் - அகம். 25:1.

4. **கழைமாய் நீத்தம்:** கழைமாய் நீத்தம் கல்பொருது இரங்க-அகம். 72:9; கழைமாய் காவிரிக் கடல்மண்டு பெருந்துறை - அகம். 123:1; கழையழி நீத்தஞ் சாஅய - அகம். 341:5; கரை பொருது இழிதரும் கான்யாற்று இகுகரை வேர்கிளர் மா - நற். 381:3-4; துளியின் உழந்த தோய்வரும் சிமைதொறும் வளிவாங்கு சினைய மாமரம் வேர்கீண்டு - பரி. 7:13-14.

5. **தழங்கு குரல்ஏறு:** நெடுவரை இயம்பும் இடிஉமிழ் தழங்குகுரல் - மலை. 310, கடுங்குரல் ஏறொடு கனைதுளி தலைஇ - நற். 51:4; தழங்குகுரல் உருமின் கங்குலானே - நற். 371:8-9; உருமுநிலன் அதிர்க்கும் குரலொடு - பதிற். 30:44; தழங்குகுரல் வானின் தலைப்பெயல் - அகம். 136:12; அதிர்குரல் ஏறொடு துளிசொரிந் தாங்கு- புறம். 160:2-3.

7. **வெண்ணெல்:** மது.288; மலை. 471; நற். 350:1; அகம். 40:13; 201:13; 204:10; 211:6; 236:4; 340;14; புறம். 348:1;

**யானை நெல்உண்டல்:** நெற்கொள் நெடுவெதிர்க்கு அணந்த யானை - குறி. 35.

**அண்ணல் யானை:** மது. 348; நற்.194:5; 273:6; குறு.260:5; ஐங். 466;2; பதிற். 42:8; அகம். 96:13; 115:13; புறம். 93:13; 115:5; 126:20; 130:4; 287:5; 326:14; 388:15; 390:28.

8. **கறிவளர் சிலம்பு:** ஐங். 243:1; சிலப். 28:114; கறிவளர் தண்சிலம்பு-சிலப். 24:10.2; கறிவளர் அடுக்கம் - நற். 151:67; குறு. 90:2; 288:1; புறம். 168:2; கறிஇவர் சிலம்பு-அகம். 112:14; கறிவளர் குன்றம்—ஞான. 1.39:6.

**கறிவளர் சிலம்பு-சாந்து:** கறிவளர் சாந்தம் ஏறல் சொல்லாது, நறுவீ அடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும் - அகம். 2:4-7.

9. **சிறியிலைச் சாந்து:** சிறியிலைச் சாந்தம் - நற். 64:5.

## 8. குறிஞ்சி - தலைவன் கூற்று

**அல்குபடர் உழந்த அரிமதர் மழைக்கண்**
**பல்பூம் பகைத்தழை நுடங்கும் அல்குல்**
**திருமணி புரையும் மேனி மடவோள்**
**யார்மகள் கொல்இவள் தந்தை வாழியர்**
**துயரம் உறீஇயினள் எம்மே அகல்வயல்**
**அரிவனர் அரிந்தும் தருவனர்ப் பெற்றும்**
**தண்சேறு தாஅய மதனுடை நோன்தாள்**
**கண்போல் நெய்தல் போர்வில் பூக்கும்**
**திண்தேர்ப் பொறையன் தொண்டி**
**தண்திறம் பெறுகஇவள் ஈன்ற தாயே.**

— *கண்ணகனார்**

ப.கு.— **இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் தலைமகளை ஆயத்தொடும் கண்ட தலைமகன் சொல்லியது.**

பொ-ள் — மடவோள் (3), தந்தை வாழியர் (4), இவள் ஈன்றதாய் (10), தொண்டி (9), தண்திறம் பெறுக (10).

**பொ-ரை** — கண்டார் நிலைத்த துன்பமுறுதற்கு ஏதுவாகிய அரிபரந்த மதர்த்த குளிர்ந்த கண்களையும், பலவாகிய பூக்களால் மாறுபடத் தொடுக்கப்பட்ட தழையுடை அசையும்படியான அல்குலையும், அழகிய மணிபோலும் மேனியையும் உடைய இந்த இளமகள் யாவர் மகளோ அறியேன். பிறரால் துன்புறுத்தப் படாத எம்மையே துயரம் உறச்செய்த இவளைப் பெற்ற தந்தை நெடுங்காலம் வாழ்வானாக, இவளை ஈன்ற தாயும், அகன்ற வயலின் கண்ணே மள்ளரால் அரியப்பட்டும் அரிந்த நெற்கதிர்களை கொணர்வோரால் பிறிதோரிடத்தில் சூடாக இடப்பட்டும், தண்ணிய சேறுபட்ட அழகிய வலிபொருந்திய தாளையுடைய நெய்தலானது, நெற்போரின்கண் மகளிர் கண்போல மலரும், திண்ணிய தேரையுடைய பொறையனாகிய சேரனுக்குரிய தொண்டி நகரின் குளிர்ந்த திறமெல்லாம் பெறுவாளாக.

**க-ரை**— அழகிய தலைவியைப் பயந்த பெற்றோர் பாராட்டுக்கு உரியர். அவர் நெடிது வாழ்வாராக என்பதாம்.

**சொ-ள்—** அல்குபடர் – நீங்காத துன்பம், உழத்தல் - வருந்துதல், அரி – கண்களில் காணும் செவ்வரி, நுடங்கும் - அசையும், மணி - (ஈண்டுச்)செம்மணி, தாய - படிய, மதன் - வலி, பொறையன் - சேர அரசருள் ஒருவன், தொண்டி - சேரநாட்டின் கண்ணதோர் கடற்கரைப்பட்டினம்.

**சி-பு—** உள்ளுறை: வயலில் வளர்ந்த நெய்தல், நெற்கதிர்களோடு அரியப்பட்டு, வேறோர் இடத்துக்கொண்டு வரப்பட்டு நெற் சூட்டிலே மலராநிற்கும் என்பது, எங்கோ பிறந்து வளர்ந்த தலைவி, இயற்கைப் புணர்ச்சியால் தலைவன்பால் அன்புகொண்டு மலர்ந்தாள் என்னும் உள்ளுறையினதாம்.

இவளை ஈன்ற தாய், தொண்டி நகரின் தண்திறம் பெறுக என்பது, (தொண்டி நகர் பொறையனுக்குரியது என்பதும்), தொண்டி நகரின் நலம் பலவற்றுக்கும் பொறையனது ஆட்சி ஏதுவானாற்போல, தாய் பெறுதற்குரிய நலம் பலவற்றிற்கும் தலைமகளே ஏது ஆவாள் என்பதைக் குறிப்பித்ததாம்.

தன்திறம், தண்திறம்(10) என்னும் பாடங்களுள் தண்திறம் சிறப்புடைய பாடமாகக் கருதப்பெற்றது. தொண்டி நகர் கடற்கரைப் பட்டினமாகத் திகழ்வது. ஆங்குக் கழிகளும், பொய்கைகளும், சோலைகளும் அவற்றிடையே தோன்றும் பல மலர்களும் நிறைந்து அந் நகரைக் குளிர்வித்தன. தொண்டி நகர் பற்றிய இலக்கிய வருணனைகளில் இதனைப் பரக்கக் காணலாம். மேலும், முன் அடிகளில் வரும், தண்சேறு, கண்போல், திண்தேர், என்பனவற்றுக்கு ஏற்ற எதுகை நயம் கொண்டு, சிறந்த ஓசை பயிலும் பாடமாகவும் இது காணப்படுகிறது. எனவே, இப் பாடமே சிறந்தபொருள் கொண்டதாகத் தேர்ந்து கொள்ளப் பெற்றது.

(மே) (மு) 'புணர்தல் பிரிதல்' என்ற நூற்பாஉரையுள், இப் பாடலை எடுத்துக்காட்டி, 'இந் நற்றிணை புணர்தல் நிமித்தம்' என்பர் நச்சினார்க்கினியர் (தொல். பொ. 14).

(மு) அவரே, பிறிதோரிடத்து இயற்கைப் புணர்ச்சியின் பின் தலைவன் கூற்று நிகழும் சூழல்களை விளக்குமிடத்து, இப் பாடலை எடுத்துக்காட்டி, 'இது நீங்கியவழிப் பிறந்த வருத்தம் கூறியது' என்றும் விளக்குகிறார் (தொல். பொ. 102).

(மு) பிரிவுழிக் கலங்கலின் விரியைக் கூறுமிடத்து, பயந் தோர்ப் பழிச்சற்குச் செய்யுளாக இப் பாடலை எடுத்துக்காட்டு கிறார் நம்பியகப்பொருள் உரையாசிரியர் (நம்.133).

உவமிக்கப்படும் பொருளே உவமமாகவும் அமையும் என்பதை விளக்க வந்த களவியலுரைகாரர், 'கண்போல் நெய்தல் போர் வில் பூக்கும்' என்னும் இப் பாடல் அடியைச் சான்றாக எடுத்துக் காட்டுகின்றார் (இ.கள.2).

(ஒ) 1. **அரிமதர் மழைக்கண்:** நற். 160:10; கலி. 77;4; அகம். 312:6; 381:21; புறம்.147:5; 349:5.

2. **பல்பூம் பகைத்தழை......அல்குல்:** கரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை, திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ- திருமு. 203-204; பைவிரி அல்குற் கொய்தழை தைஇ – குறி.102; அம்பகை நெறித்தழை அணிபெறத் தைஇ-நற். 96:8; பைந்தழை, மாமகளிர் - பட். 91; தழைதாழ் அல்குல் – குறு. 345:4; தழையணி அல்குல் - குறு. 125:3; 159:1; நுடங்குதழைத் திதலை அல்குல் - ஐங். 72:2; ஆய்தழை நுடங்கும் அல்குல் - ஐங். 291:3; பன்மலர் துதையத், தழையுங் கோதையும் இழையும், என்றிவை, தைஇனர் மகிழ்ந்து – கலி. 102:4-6; அரிமலர் ஆம்பலொடு ஆர்தழை தைஇ- அகம். 176:15; தீநீர்ப் பெருங்குண்டு சுனைப்பூத்த குவளைக் கூம்பவிழ் முழுநெறி புரள்வரும் அல்குல் – புறம். 116:1–2; அணித் தழை நுடங்க ஓடி - புறம். 340:1; அம்பூம் தொடலை யணித் தழை அல்குல் - புறம். 341:2; அந்தழை அல்குல் - பு. வெ.123.

**பகைத்தழை:** குறு. 293:5; ஐங். 187:3; 211:3.

3. **மணிபுரை மேனி:** மணிபுரை வயங்கிழை- ஐங். 210:4; மணிமருள் மேனி - அகம். 156:17; 278:13; மணிஏர் மாண்நலம் - அகம். 172:17; 290:15; மணிஎழில் மேனி – தி. மொ. 47:2; மணி புரை நிமிர்தோள் - கலி. 102:25; மணிபுரை செவ்வாய் - கலி. 79:8; மணிபோன்றாள் - கலி. 132: 14.

6–8 **நெல் வயலில் நெய்தல்:** நீடிய வரம்பின் வாடிய விடி னும், கொடியோர் நிலம் பெயர்ந்து உறைவேம் என்னாது,பெயர்த் தும் கடிந்த செறுவில் பூக்கும், நின்னூர் நெய்தல் - குறு. 309: 3-6; கள்நாறு நெய்தல் கதிரொடு நயக்கும் – குறு. 296:4; தண் நறு நெய்தல் தளை அவிழ் வான்பூ வெண்ணெல் அரிநர் மாற்றினர் அறுக்கும் - ஐங். 190:1-2.

**போர்வு:** போர்விற் சேக்கும் - ஐங். 9: 4; விண்டு வன்ன வெண்ணெற் போர்வில் - ஐங். 58: 1; ஈடுசால் போர்புஅழித்து எருமைப் போத்தினால், மாடுறத் தெழித்து வை களைந்து காலுநீஇச், சேடுறக் கூப்பிய செந்நெற் குப்பைகள் - சிந். 59.

7. **மதனுடை நோன்தாள்:** திருமு. 4; சிறு. 259; பட். 278; புறம். 75: 6; 213: 1.

8. **கண்போல் நெய்தல்:** கண்போற் பூத்தமை கண்டு நுண் பல, சிறுபா சடைய நெய்தல், குறுமோ - நற். 27: 10-12; கண் போல் நீலம் சுனைதொறும் மலர – நற். 161: 2; ஒண்ணுதல் மகளிர் ஓங்குகழிக் குற்ற, கண்ணேர் ஒப்பின் கமழ்நறு நெய்தல் - நற். 283: 1-2; நெய்தல்... கயமூழ்கு கண்ணின் மானும் - குறு. 9: 4-6; கண்போல் நெய்தல், கட்கமழ்ந்து - ஐங். 51: 3-4: நெய்தல் உண்கண் நேரிறை - ஐங். 181: 1; வைகறை மலரும் நெய்தல் போல, தகைபெரி துடைய காதலி கண்ணே - ஐங். 188: 3-4; நீடிதழ் தலைஇய கவின்பெறு நீலம், கண்ணென மலர்ந்த சுனையும் - அகம். 38: 10-11; இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தல்-அகம். 170: 4; நீனறு நெய்தலிற் பொலிந்த உண்கண் - புறம். 144: 4; கண்ணவிழ் நெய்தலும்-சிலப். 14: 77.

9. **பொறையன் - தொண்டி:** கானலந் தொண்டிப் பொரு நன் வென்வேல், தெறலருந் தானைப் பொறையன்- நற். 18: 4-5; திண்தேர்ப் பொறையன் தொண்டி - குறு. 128: 2; அகம். 60:7; பெருப்பூண் பொறையன் - குறு. 89: 4.

10. **தொண்டி தண்திறம்:** பனித்துறைத் தொண்டி - ஐங். 172:2; 174:1; முழவிமிழ் இன்னிசை மறுகுதொ றிசைக்கும் தொண்டி - ஐங். 171:2; தொண்டி யன்ன நின் பண்பு - ஐங். 175:4; முண்டக நறுமலர் கமழும் தொண்டி – ஐங். 177:3; துறை கெழு, தொண்டி அன்ன இவள்நலன் – ஐங். 180:4; ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும், தொண்டி யன்ன எம்நலம் - குறு.238: 4; தெண்கழி மிசைச்சுடர்ப் பூவின், தண்தொண்டி - புறம் 17:12–13. (தொண்டி வளம் சான்ற ஊர் என்பதைப் புறநானூறு 49 சிலப்பதிகாரம் 14:96-111 போன்ற பிற இடங்களிலும் காணலாம்.

19. **பயந்த தாயை வாழ்த்துதல்:** வயிறுமா சிலீயர்அவன் ஈன்ற தாயே -பதிற். 20:27.

## 9. பாலை - தலைவன் கூற்று

அழிவில முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கண்கண் டாஅங்கு
அலமரல் வருத்தம் தீர யாழநின்
நலமென் பணைத்தோள் எய்தினம் ஆகலின்
பொரிப்பூம் புன்கின் அழல்தகை ஒண்முறி
சுணங்குஅணி வனமுலை அணங்குகொளத் திமிரி
நிழல்காண் தோறும் நெடிய வைகி
மணல்காண் தோறும் வண்டல் தைஇ
வருந்தாது ஏகுமதி வால்எயிற் றோயே
மாநனை கொழுதி மகிழ்குயில் ஆலும்
நறுந்தண் பொழில கானம்
குறும்பல் ஊரநாம் செல்லும் ஆறே. (12)

— *பாலைபாடிய பெருங்கடுங்கோ*

**ப.கு.- உடன்போகாநின்ற தலைமகன் தலைமகட்கு உரைத்தது.**

பொ-ள் — வால் எயிற்றோயே (9), செல்லும் ஆறே (12), நறுந்தண் பொழில (11), ஊர (12), எய்தினம் ஆகலின் (3), திமிரி (6), வைகி (7), தைஇ (8), வருந்தாது ஏகுமதி (9).

பொ-ரை — வெள்ளிய பற்களையுடையவளே! நாம் செல்லும் நெறியின்கண் உள்ள காடுகள் எல்லாம் மாமரத்தின் அரும்புகளைக் கோதியுண்டு மகிழ்கின்ற குயில்கள் பாடும் நறிய தண்ணிய சோலைகளையும், சிறிய ஊர்கள் பலவற்றையும் கொண்டன. அழிவில்லனவாகிய செயல்களை நாடிமுயலும் பேரன்புடைய பெரியோர்கள், அவை முற்றுப்பெறுதல் குறித்து, நாளும் தாம் வழிபடும் தெய்வத்தைக் கண்முன்னே தோன்றக் கண்டாற் போல, களவின்கண் பலவகையில் அலைத்து வருத்திய நம் துயர் தீருமாறு நின்னுடைய நல்ல மென்மையான மூங்கில் போலும் தோள்களைப் பெற்றேம். ஆகவே, பொரி போன்ற பூக்களையுடைய புன்கமரத்தின் அழல் போலும் ஒள்ளிய இளந்தளிரைச் சுணங்கு பரந்த அழகிய முலையிலே, அவை மேலும் என்னை வருத்துமாறு அப்பிக்கொண்டு, நிழல்மிக்க இடங்களைக் காணும்போதெல்லாம் அங்கே நெடிது தங்கி, மணல் பரந்த இடங்களைக் காணுமிடத்தெல்லாம் இனிதிருந்து வண்டலாடி, செலவு நீடுமோ என்னும் வருத்தம் கொள்ளாது செல்லுக.

க-ரை — இனிச் செல்லும் வழி குளிர்ந்தது, பல ஊர்களைக் கொண்டது; ஆதலின், வருந்தாது செல்வாயாக என்பதாம்.

சொ-ள் — அலமரல் - சுழன்று வருந்துதல், யாழ-முன்னிலை அசை, பணை-மூங்கில், அழல்– தீ, முறி- இளந்தளிர், சுணங்கு-தேமல், அணங்கு கொள - வருத்தம் கொள்ளுமாறு, திமிரி-அப்பி, பூசி, தைஇ-புனைந்து, மதி- முன்னிலை அசை, வால்-வெண்மை, எயிறு-பல், நனை-அரும்பு, கொழுதி - கோதி, ஆலும்-கூவும்.

சி–பு — உள்ளுறை: நாம் செல்லும் நெறி, குறும்பல ஊர் களையுடையது; நிழல் தரும் மரங்களையுடையது; தூய மணல் பரந்து வண்டல் அயரும் அழகுடையது; வெள்ளிய பொரிகளைப் போலும் பூக்களையுடைய புன்க மரங்கள் நிறைந்தது. மேலும், அரும்புகள் நிறைந்த மாமரங்களையும் அவற்றைக் கோதிஉண்டு மகிழ்ந்துபாடும் குயில்களையும் உடையது. இவ் அழகிய காட்சியை ஓவியமாக்கிக் காட்டும் தலைவன் உள்ளக்குறிப்பு, மருண்டு வரும் தலைவியைத் தேற்றிக் கூறுவதாகும். இனி மணந்து வாழப் போகின்ற கற்புவாழ்வு நிழல் தரும் இனிமையைப் போலும் தூய மணலில் விளையாடும் உவகையைப் போலும் இன்பம் தருவ தாகும்; மேனிஅழகு மேலும் பொலிவுறுவதாகும்; மாங்குயில் நனை கோதி மகிழ்ந்து பாடுவது போல் இல்லறஇன்பம் துய்த்து மகிழ்ந்துவாழும் வாழ்க்கைநெறியைத் தருவதாகும் என்னும் உள்ளுறையை இவ் ஓவியம் தருதல் காணலாம்.

அழிவில என்பதற்கு அழிவிலர் என்னும் மாற்றுப்பாடம் காணப்பெறுகிறது. கிட்டிய ஏடுகளிலும் உரையாசிரியர் மேற் கோள்களிலும் 'அழிவில' என்னும் பாடமே மிகுந்துள்ளது. அழிவில முயலும் ஆர்வ மாக்கள் என்னும் தொடரில் ஆர்வ மாக் கள் எழுவாயாகவும் செயப்படுபொருளாக 'அழிவில' என்பதும் வெளிப்படையாகக் காணக்கிடக்கிறது. ஆயின் அழிவிலர் என்னும் பாடமோ ...எதை முயலும் என்பதற்கு விடை இறுக்க இயலா நிலையில் உள்ளது. முயல்வார்க்கு 'ஆர்வ' என்னும் அடை இருக்க, அழிவிலர் என்னும் அடை சிறப்புடைத்தாகத் தோன்றவும் இல்லை. மேலும், அடுத்த அடியில் காணப்பெறும் வழிபடுதெய்வம் என்பதற்கேற்ற ஓசை இனிமைஉடைய பாடமாக 'அழிவில' என்பதே அமைதல் காணத்தகும். எனவே, அழிவில என்னும் பாடமே பொருட்பொருத்தம் உள்ளதாகக் கருதப்பெற்றது.

அழல்தகை, எழில்தகை (5), என்னும் பாடங்களுள் எழில்தகை என்பதையே பாடமாகக் கொண்டு அழகுமிக்க என்று பொருளுரைப்பர் முற்பதிப்பாசிரியர் (பி.ப., து.ப). இதில் சிறப்புப் பொருள் இருப்பதாகத் தோன்றவில்லை. அழகு பொதுவான தன்மையாகத் தோன்றுகிறது. சிறப்புத் தன்மை எதையும் சுட்டவில்லை. ஆயின், அழல்தகை என்பது தளிரின் சிறப்புத் தன்மையைச் சுட்டுவதாக - அதன் நிறத்தைக் குறிப்பதாகக் காணப்படுகிறது. புன்க மரத்தின் இளந்தளிர்கள் சிவந்த நிறத்தை உடையனவாகி அழல்போலும் மிளிர்வது கண்கூடு. எனவே, இத்தன்மையைச் சுட்டிக்காட்டும் 'அழல்தகை' என்னும் பாடமே சிறந்ததாகக் கொள்ளப்பெற்றது.

தன்மை நிலையில், தன்னை மட்டும் குறித்துப் பேசும்போது (பன்மையாக) யாம் என்றும், தன்னோடு இணைந்த மற்றொருவரையும் உளப்படுத்திப் பேசுகின்ற நிலையில் நாம் என்றும் கூறுகின்ற வழக்கைச் சங்க இலக்கியப் பாடல்களில் பெரும்பாலும் காணமுடிகிறது. (யாம்- நற். 6:11; நாம் - நற். 27:5; 33:9) எனவே, யாம் என்னும் பாடத்தினும், தலைவியை உளப்படுத்திக் கூறும் நாம் என்னும் பாடமே சிறந்ததாகத் தேர்ந்து கொள்ளப் பெற்றது.

மகளிர் தம்மார்பில் தளிர்களையும் மலர்களையும் அணிந்து மகிழும் வழக்கைச் சங்க இலக்கியங்களில் காணலாம். (காண்க: ஒப்பு) மார்பு மேலும் அழகு பெறுவதற்காகவும், குளிர்ச்சியுறுவதற்காகவும் அவ்வாறு அணிந்ததாகக் கருதமுடிகிறது. அஃதாவது, முற்றிலும் உடல்நன்மை கருதியதாகவே துணியப்படும். மார்பில் தெய்வம் வீற்றிருப்பதாக, அது மகிழுமாறு தளிர்களை அப்பினர் என்னும் செய்தியைச் சங்க இலக்கியங்களில் காணமுடியவில்லை. ஆயின், நச்சினார்க்கினியர் தம் சிந்தாமணி உரையில், 'விம்முறு நுசுப்பு நைய வீற்றிருந் தணங்கு சேர்ந்த வெம்முலை' (சிந். 606) என்னும் தொடரின்கண் உள்ள அணங்கு என்பதற்கு வீற்றுத்தெய்வம் என்னும் பொருள் கொண்டு - 'வீற்றுத் தெய்வம் சேர்ந்த முலை' என்று உரை எழுதியுள்ளனர். இது பின்னாளில் தோன்றிய வழக்காகக் கொள்ளப்படும். இதைப் பின்பற்றியே முற்பதிப்பாசிரியர் (பி , து.) இருவரும் உரைவரைந்தனர் போலும்.

(மே) (மு) உடன்போக்கில் தலைமகற்குக் கூற்றுநிகழும் இடம் உணர்த்துமிடத்து, இடைச்சுரத்திற் கூறியதற்கு இப் பாட்டை எடுத்துக் காட்டுகின்றார் இளம்பூரணர் (தொல்.பொ.44).

(மு) பாலைத்திணையிற் புணர்ச்சி நிகழ்வதற்கும், உடன் போக்கினுள் தலைவியிடத்துத் தலைவன் கூற்று நிகழ்வதற்கும் இப் பாடலை ஈரிடங்களில் எடுத்துக் காட்டுகின்றார் நச்சினார்க் கினியர் (தொல். பொ. 15,41). மேலும் அவர், 'இது புணர்ச்சி மகிழ்ந்தபின் வழிவந்த நன்மை கூறி வருந்தாது ஏகென்றது' என்றும் விளக்கம் தருதல் காணத்தகும்.

(மு) 'இடைச்சுர மருங்கின்' என்னும் நூற்பா உரையில் இப் பாட்டை எடுத்துக்காட்டிய பேராசிரியர், 'என்பதனுள் 'வருந்தா தேகுமதி' யெனவே, 'வழிபடு தெய்வங் கட்கண்டால்' விடுவார் இல்லாதது போல நின்னை விடுதல் எனக்கு அறனன்றெனக் கூறி, மெல்லெனச் செல்கவென மருட்டிக் கூறியவாறு காண்க' என விளக்கம் தருகின்றார் (தொல். பொ. பே. 506).

'மனையோள் கிளவியும்' என்னும் நூற்பாவில் அவரே, இப் பாடலின் 'வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே, என்னும் அடியை எடுத்துக்காட்டி, என்பது தலைமகன் கூற்று தலைமகள் கேட்டது என்று விளக்கம் தருகின்றார் (தொல்.பொ.பே. 508).

(மு) உடன்போக்கின் விரியில், தலைமகளைத் தலைவன் சுரத்துய்த்தற்குச் செய்யுளாக இப் பாடலை எடுத்துக் காட்டு கிறார் நம்பி அகப்பொருளுரைகாரர் (நம். 182).

(மு) தலைமகளைத் தலைமகன் ஆற்றுவித்துக் கொண்டு சென்றதற்குச் செய்யுளாக இப் பாட்டைக் காட்டுகின்றது இறை யனார் களவியல் உரை (இ. கள. 23).

(மு) உடனிலைச் செலவை விளக்குமிடத்து, சுரத்துய்த்தல் என்பது (தலைமகளை) வழியில் மெல்லெனத் தலைவன் கொண்டு செல்லுதல் என விவரித்து, அதற்குச் செய்யுள் வருமாறு என்று இப் பாட்டை எடுத்துக்காட்டுகிறது களவியல் காரிகை உரை (க. கா. 51).

(ஒ) 1. **ஆர்வ மாக்கள்:** அருளிக் கூடும் ஆர்வ மாக்கள் – நற். 146: 7.

2. **வழிபடு தெய்வம்:** வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப – தொல். பொ. 415: 1; வழிபட்ட தெய்வந்தான் வலியென - கலி. 132: 21.

**தெய்வம் கண்கண் டாஅங்கு:** கட்காண் கடவுள் அல்லளோ - நற். நெருந: 7.

3. **அலமரல் வருத்தம்:** உறுதுயர் அலமரல் நோக்கி – முல். 13; அலமரல் அசைவளி, அலைப்ப, என் உயவுநோய் - குறு. 28: 4–5; அலமரல் நோயுள் உழக்கும் – கலி. 126: 20.

4. **மென்பணைத்தோள்:** நற். 137: 2; 319: 8; குறு. 185: 2; 268: 6; பரி. 8: 39; கலி.83: 26; அகம். 21: 4; 89: 22; 92:6; 110: 10.

5. **பொரிப்பூம் புன்கு:** நனைமுதிர் புன்கின்... வான்பொரி சிதறி யன்ன - குறு.53:2-4; பொரிப்பூம் புன்கொடு பொழில் - குறு. 341:2; பொரிப்பூம் புன்கின் புகர்நிழல் - ஐங். 368:2; பொரியுரு உறழப் புன்குபூ உதிர – கலி. 33:11; பொரியெனப் புன்கவிழ் அகன்துறை - அகம். 116:5-6; பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கு - சிலப். 12:33; பொரியேர் புன்கு சொரிபூஞ் சோலைப் புத்தூரே – தேவா. ஞான. 2.63:4; புன்கம் பொரியணிந் தனவே - சிந். 1649; பொரியணிந்து புன்குதிர்ந்து பூநாறும் - சூளா. 4:56.

**அழல்தகை... முறி:** எரிகால் இளந்தளிர் ஈனும்பொழுது - ஐங். 349:3; அழல்புரை குழைகொழு நிழல்தரும் பலசினை - பரி. 4:66; அழல்ஏர் செயலை அம்தழை - அகம். 188:12; அழல்அகைந் தன்ன அம்குழைப் பொதும்பில் - அகம். 351:7; சீதப் புனலுண்டு எரியைக் காலும், சூதப் பொழில்சூழ் சோற்றுத் துறையே - தேவா. சுந். 7.94:4.

**சுணங்கணி வனமுலை:** சுணங்கணி ஆகத்து ஈர்க்கிடை போகா,வேரிள வனமுலை - பொரு.35-36; சுணங்கணி வனமுலை - நற். 319:9; அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இளமுலை - குறு. 71:2; சுணங்குவளர் இளமுலை மடந்தை - ஐங். 149:2; சுணங் கணி வனமுலை - கலி. 60:1; அகம். 149:2; 319:9; பல்சுணங் கணிந்த மருப்பிள வனமுலை - புறம். 337:22.

6. **சுணங்கு... அணங்கு:** அணங்கென உருத்த சுணங் கணி .. முலை – பொரு. 35-36; சுணங்குவளர் இளமுலை மடந்

தைக்கு, அணங்கு வளர்த்து - ஐங். 149:2-3; முலையை, சுணங்கென நினைதி நீயே, அணங்கென நினையுமென் அணங்குறு நெஞ்சே - ஐங். 363:2-4; அணங்குடை வனமுலைத் தாஅயநின், சுணங்கிடை வரித்த தொய்யிலை - அகம். 177:19-20.

**மார்புக்கு முறி அப்புதல்:** குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர், வேங்கை நுண்தாது அப்பி-திருமு. 35-36; எழில்தகை இளமுலை பொலியப், பொரிப்பூம் புன்கின் முறிதிமிர் பொழுதே- ஐங். 347:2-3; பல்லிதழ் எதிர்மலர் கிள்ளி வேறுபட, நல்லிள வனமுலை அல்லியொடு அப்பியும்-அகம். 389:4-5; கொம்பஞ்சு மருங்குல் நோவக் குவிமுலை, முறிகொண்டு அப்பி-சூளா. 1633:2.

8. **வண்டல் அயர்தல்:** வண்டல் ஆயமொடு பண்டுதான் ஆடிய-நற். 127:6; நேரிழை மகளிர் வார்மணல் இழைத்த,வண்டற் பாவை-நற்.191:2; வளைவாய்க் கோதை வண்டல் தைஇ, இளையோர் செல்ப-அகம். 370:1-2; கழிப்பூக் குற்றும் கானல் அல்கியும், வண்டற் பாவை வரிமணல் அயர்ந்தும் – அகம். 330:1-2.

9. **வருந்தாது ஏகுமதி:** அஞ்சுவழி அஞ்சாது அசைவழி அசைஇ, வருந்தாது ஏகுமதி வாலிழைக் குறுமகள் - நற். 76:4-5; இன்னா அஞ்சுரம் தீர்ந்தனம் மென்மெல, ஏகுமதி வாழியோ குறுமகள்-ஐங். 395:3-4; மெல்ல மெல்ல நின் நல்லடிபோற்றி, வருந்தா தேகுமதி மடவோய் யிருந்தண், பொழில யாம்செல்லு மாறே - பொருளியல். 114; வண்டார் பொழிலும் மணியறல் யாறும் மருங்கணைந்து, கண்டார் மகிழும் தகைமையது யாஞ் செல்லும் கானகமே-பாண்டிக். 340.

**வால்எயிற்றோய்:** வாலெயிற்றோள் - அகம். 33: 16; வால் வெள் எயிறே - குறு. 169: 3; வால்எயிறு ஊறிய - குறு. 267: 4: குறள். 1121.

10. **மாநனை கொழுதும்...குயில்:** மின்னின் தூவி இருங் குயில் பொன்னின், உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை, நறுந்தாது கொழுதும் – குறு. 192: 3-5; மாநனை கொழுதிய மணிநிற இருங்குயில் – அகம். 25: 6.

11. **நறுந்தண் பொழில:** நறுந்தண் சோலை - ஐங். 244:2; நறும்பூம் தண்புறவு – ஐங். 404: 3; நறுந்தண் புறவு - ஐங். 413: 1.

12. **குறும்பல்லூர்:** செழும்பாக்கத்துக் குறும்பல்ஊர் – பட். 28.

## நற்றிணை - பாட வேறுபாடு - ஒப்புநோக்கு அட்டவணை

| பாட்டு எண். | அடி: சீர் (1) | கீழ்த்திசைச் சுவடி 1893-94 (2) | இராக வையங்கார் சுவடி 1899 (3) | பின்னத் தூரார் பதிப்பு 1915 (4) | சங்க இலக்கியப் பதிப்பு 1940 (5) | கழகப் பதிப்பு 1962 (6) | துரைசாமிப் பிள்ளை பதிப்பு 1966 & 1968 (7) | புலியூர்க் கேசிகன் பதிப்பு 1967 & 1980 (8) | உரையாசிரி யர் காட்டும் பாடம் (9) | தமிழ்ப் பல்கலைக் கழகப் பாடம் (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க.வா. | 2:1 | – | வளைநரல் | → | → | → | → | → | வளைஞரல் பே.421 | வளைஞரல் |
| | 2:2 | - | பௌவமும் | பௌவம் | → | → | → | → | → | பௌவம் |
| | 4:1 | - | பசுங்கதிர் | → | → | → | படர்கதிர் பசுங்கதிர் | பசுங்கதிர் | → | பசுங்கதிர் |
| | 5:4 | - | அடக்கிய | → | → | → | → அடக்கி | → | → | அடக்கிய |
| | 6:2 | - | முதல்வன் முதலிவன் | → | → | முதலிவன் | → | → | → | முதல்வன் |
| 1. | 1:2 | - | சொல்லொடு சொல்லான் | சொல்லர் சொல்லொடு | → | → சொல்லொடு | → சொல்லின் | → | → | சொல்லர் |
| | 1:3 | - | தொன்று நீடுதோறு | நீடுதோன்று | நீடுதோறு | நீடுதோன்று நீடுதோறு | → → நெடிதுதோன்று | | → இ. 135, நச். 147 நம். 130 | நீடுதோன்று |
| | 2:3 | - | பிரிபறி | → | → | → | → | → | பிரிவறி இ. 145 நம். 130 | பிரிபுஅறி |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 3:4 | - | மீமிசைச்சாரல் | மீமிசைச் | → | → | → | → | → | மீமிசைச் |
| | 4:1 | - | சந்தின் | சாந்தின் | → | → | → | சந்தின் | சாந்தின் | சாந்தின் |
| | 4:2 | - | தொடுத்த | → | → | → | தொடுத்த<br>கொண்ட | → | கொண்ட<br>இ. 145 | தொடுத்த |
| | 5:2 | - | மன்ற | → | → | → | மன்ற<br>மன்றா | → | → | மன்ற |
| | 9:2 | - | உறுபவோ | → | → | → | → | → | உறுப<br>இ. 145<br>சே. 341 | உறுப |
| | 9:3 | - | செய்பறி | → | → | → | →<br>செய்யறி | → | → | செய்புஅறி |
| 2. | 2:4 | - | அங்காட்டு | ⟶ | ⟶ | ⟶ | ⟶<br>யந்நாட்டு | ⟶ | யந்நாட்டு<br>இ. 43 | அம்காட்டு |
| | 4:4 | - | வாய் | வாய | ⟶ | ⟶ | ⟶ | ⟶ | வாய | வாய |
| | 5:1 | - | வல்லியம் | ⟶ | ⟶<br>வல்லியப் | ⟶ | வல்லியப் | ⟶ | வல்லியம் | வல்லியப் |
| | 5:4 | - | மலை | மாலை | ⟶ | ⟶ | ⟶ | ⇒ | ⟶ | மாலை |
| | 6:1 | - | மானோக்கும் | மரனோக்கும்<br>மானோக்கும் | ⟶<br>மான்நோக்கும் | ⇒ | மானோக்கும் | ⇒ | மானோக்கு<br>நச். 40 | மான்நோக்கும் |
| | 6:2 | - | இண்டிவர் | ⇒ | ⇒<br>⇒ | ⇒<br>⇒ | →<br>ஈண்டிவர் | → | ஈண்டிவர்,<br>நச். 40 | இண்டுஇவர் |
| | 7:3 | - | மாயணம்<br>மடந்தை | மடந்தை<br>மாயள் | ⇒ | ⇒<br>மாயள் | → | → | → | மடந்தை |
| | 7:4 | - | முன்னுற்று | ⇒ | ⇒ | ⇒ | முன்னுய்த்து<br>முன்னுற்று | முன்னுற்று | முன்னேற்று<br>நச். 40 | முன்உற்று |
| | 9:1 | - | காலொடு | ⇒ | ⇒ | ⇒ | கால்பொரப்<br>காலொடு | காலொடு | → | காலொடு |
| | 10:4 | - | கொடிதே | ⇒ | ⇒ | ⇒ | கடிதே<br>கொடிதே | கொடிதே | → | கொடிதே |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3. 3:3 | - | இட்டரங்கு | வட்டரங்கு<br>இட்டரங்கு | → | → | →<br>இட்டரங்கு | இட்டரங்கு | வட்டரங்கு<br>நச். 43 | வட்டரங்கு |
| 5:4 | - | சீறூர்ச் | → | → | சீறூர் | சீறூர்ச் | → | → | சீறூர்ச் |
| 7:1 | - | உள்ளினென் | → | → | →<br>உள்ளினம் | | உள்ளினேன் | உள்ளினென் | உள்ளினென் |
| 7:2 | – | அல்லனோ | → | → | →<br>அல்லெனோ | →<br>அல்லமோ | → | → | அல்லெனோ |
| 4. 3:3 | - | ஒண்பதம் | → | ஒண்ப | ஒண்பதம் | → | → | → | ஒண்பதம் |
| 4:1 | - | அங்கண் | → | → | → | → | அந்தண் | அங்கண் நச். 113 | அங்கண் |
| 5:4 | - | - | வாழ்க்கை | → | → | → | → | → ,, | வாழ்க்கை |
| 6:3 | – | நமக்கெனக் | → | → | → | →<br>மன்னெனக் | → | → ,, | நமக்குஎனக் |
| 9:2 | - | கிளர்க்கும் | → | → | → | → | → | கிழிக்கும் ,, | கிளர்க்கும் |
| 12:3 | - | உறைவின் | → | → | → | உறைவின்<br>இறைவன் | → | இறைவன் ,, | உறைவுஇன் |
| 5. 1:4 | - | குழைப்பல் | குழைப்ப | → | → | → | → | | குழைப்ப |
| 2:1 | - | உகல்வாய்ப் | அகல்வாய்ப் | → | → | → | → | | அகல்வாய்ப் |
| 2:4 | - | யாப்ப | யாப்பக் | → | → | → | → | | யாப்பக் |
| 3:3 | - | நறைப்பவா | நறைப்பவர் | → | → | → | → | | நறைப்பவர் |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 4:3 | - | சுற்றுபு | சுற்றுவன | ⇒ | ⇒ | ⇒ | ⇒ | சுற்றுபு |
| | 5:1 | - | பெரும்புயல் | ⇒ | ⇒ | ⇒ | பெரும்பெயல்<br>பெரும்புயல் | ⇒ | பெரும்பெயல் |
| | 7:4 | - | இன்றுசேல் | → | → | → | இன்றுசெல<br>இன்றுசெல் | இன்றுசெல் | இன்றுசெல் |
| | 8:1 | - | இகுளையாத் | இகுளையர்த் | → | →<br>இளையர்த் | இகுபெயல்<br>இகுளையர்த் | இளையர்த் | இகுபெயல் |
| 6. | 2:2 | - | அன்ன | → | ⇒ | ⇒ | என்ன<br>அன்ன | அன்ன | அன்ன |
| | 5:3 | - | செப்பினர் | செப்புநர்ப் | ⇒ | ⇒ | ⇒ | ⇒ | செப்புநர்ப் |
| | 6:4 | - | முனாது | முணாஅது | → | → | →<br>முனாது | முணாஅது | முணாஅது |
| | 8:1 | - | யேறிகுமட | எறிமட | ⇒ | ⇒ | தெறிமட<br>எறிமட | எறிமட | தெறிமட |
| | 9:2 | - | ஓரி | ⇒ | ⇒ | ⇒ | ⇒<br>ஓரிக் | ⇒ | ஓரி |
| | 11:3 | - | வந்தனம் | ⇒ | ⇒ | | அலந்தனம்<br>வந்தனம் | வந்தனம் | அலந்தனம் |
| 7. | 4:1 | - | கழைபாய் | கழைமாய் | → | ⇒ | கழைமாய்<br>கழைபாய் | ⇒ | கழைமாய் |
| | 4:4 | - | யார்ப்பத் | ⇒ | ⇒ | ⇒ | அலைப்பத்<br>யார்ப்பத் | யார்ப்பத் | ஆர்ப்பத் |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6:1 | - | பின்னே | இன்னே | → | → | → | ⇒ | | இன்னே |
| 7:2 | - | அருந்த | அருந்திய | → | → | அருந்த<br>அருந்திய<br>ஆர்ந்த | அருந்திய<br>→ | | அருந்திய |
| 7:3 | - | வரிநுதல் | → | → | ⇒ | அண்ணல்<br>வரிநுதல் | வரிநுதல் | | அண்ணல் |
| 8:1 | - | தண்ணறுஞ் | → | → | ⇒ | கறிவளர்<br>தண்ணறுஞ் | தண்ணறுஞ் | | கறிவளர் |
| 8. 1:3 | - | வரிமதர் | → | அரிமதர் | → | → | ⇒ | வரிமதர் நச்.102 | அரிமதர் |
| 5:3 | - | எம்மே | → | → | → | ⇒<br>நம்மே | → | → | எம்மே |
| 5:4 | - | அகல்வயல் | ⇒ | ⇒ | → | அகன்வயல் | அகல்வயல் | → | அகல்வயல் |
| 6:1 | – | அரிவன | அரிவனர் | ⇒ | → | →<br>அரிவன | ⇒ | → | அரிவனர் |
| 6:3 | - | தருவனர் | ⟶ | ⟶ | ⟶ | ⟶<br>தருவன | தருவனர்ப் | ⟶ | தருவனர் |
| 7:2 | – | தாய | தாஅய் | ⟶ | ⟶ | தாயஅய<br>தாஅய் | தாஅய் | தாய நச்.14 | தாஅய |
| 7:3 | - | மதனுடைய | ⟶ | மகனுடை | மதனுடை | ⇒ | ⟶ | ⟶ | மதனுடை |
| 8:3 | - | பேரரவிற் | போர்விற் | ⟶ | ⟶ | ⟶ | ⟶ | ⟶ | போர்வில் |
| 9:3 | - | தொண்டி | ⟶ | ⟶ | ⟶ | → | → | தொண்டித்<br>நம். 133 | தொண்டி |
| 10:1 | - | தன்திறம் | → | → | → | தண்டிறம்<br>தன்திறம் | தன்திறம் | → | தண்திறம் |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9. | 1:1 | அழிவிலர் | ⇒ | அழிவில | அழிவிலர் | அழிவில<br>அழிவிலர் | →<br>→ | அழிவிலர் | அழிவில இ.44<br>நம். 182 | அழிவில |
| | 2:3 | கட்கண் | → | → | → | →<br>கண்ணடா | → | → | → | கண்கண் |
| | 3:1 | அலமரல் | அலமலரல் | அலமரல் | → | → | → | → | → | அலமரல் |
| | 4:4 | மாயிற் | மாகலின் | → | → | → | →<br>மாக, மாயிற் | → | →<br>→ | ஆகலின் |
| | 5:3 | எழிற்றகை | → | — | அழற்றகை | எழில்தகை<br>அழற்றகை | → | அழற்றழை | எழிற்றகைஇ.44<br>நச். 182<br>க. 23 | அழல்தகை |
| | 7:3 | நெடிது | நெடிய | → | → | → | ⇒<br>நெடிது | ⇒ | நெடிது நச்.41 | நெடிய |
| | 10:3 | மகிழ்குயில் | மயில்குயில் | மகிழ்குயில் | ⇒ | ⇒ | ⇒<br>மாங்குயில் | ⇒ | → | மகிழ்குயில் |
| | 11:2 | பொழில | பேரெழில் | பொழில | — | ⇒ | → | ⇒ | ⇒ | பொழில |
| | 12:2 | லூரயாஞ் | லூரநாஞ் | லூரயாஞ் | ⇒ | ⇒ | ⇒ | → | ⇒ | ஊரநாம் |

**சிலகுறிப்புகள்:**

1. → என்னும் அம்புக்குறி முன்னே உள்ள பாடமே மாற்றமின்றி இச் சுவடியிலும் – பதிப்பிலும் காணப்பெறுகிறது என்பதைக் குறிப்பதாகும்.
2. → என்னும் சிறுகோடு குறிப்பிட்ட பாடமேதும் காணப்பெறாததைக் குறிப்பதாகும். பாட்டு முழுவதற்கும் இக் குறி காணப்பெறின் அச் சுவடியில் அப் பாட்டு காணப்பெறவில்லை என்பதைக் குறிக்கும்.
3. ஒரே கட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்கள் பெற்றிருப்பின், அவற்றுள் முதலில் காணப்பெறுவது அப் பதிப்பாசிரியர் கொண்ட பாடத்தையும் அடுத்து வருவன அவர் காட்டிய பாடவேறுபாட்டையும் குறிப்பதாகும்.
4. பாட்டு எண்களை அடுத்து வரும் எண்களுள், முதல் எண் பாட்டின் அடியையும், அடுத்த எண் அந்த அடியில் வரும் சீரையும் குறிப்பதாகும்.

## பாட்டு முதற்குறிப்பு அகராதி

(எண்: பாட்டுஎண்)

| | | | |
|---|---|---|---|
| அல்குபடர் உழந்த | 8 | சூருடை நனந்தலைச் | 7 |
| அழிவில முயலும் | 9 | நிலம்நீர் ஆரக் | 5 |
| அழுந்துபட வீழ்ந்த | 2 | நின்ற சொல்லர் | 1 |
| ஈன்பருந்து உயவும் | 3 | நீர்வளர் ஆம்பற் | 6 |
| கானல்அம் சிறுகுடிக் | 4 | மாநிலம் சேவடி | க.வா. |

## பாடினோரும் பாடற்குறிப்பும்

| | | | |
|---|---|---|---|
| அம்மூவனார் | 4 | பரணர் | 6 |
| இளங்கீரனார் | 3 | பாரதம் பாடிய பெருந்தேவனார் | க.வா. |
| கண்ணகனார் | 8 | பாலை பாடிய பெருங்கடுங்கோ | 9 |
| கபிலர் | 1 | பெருங்குன்றூர் கிழார் | 5 |
| நல்வெள்ளியார் | 7 | பெரும்பதுமனார் | 2 |

## பாடலில் சுட்டப்பெற்றோர்

திண்தேர்ப் பொறையன் 8:8 வல்வில் ஓரி 6:9

## பாடலில் சுட்டப்பெற்ற ஊர் முதலியன

தொண்டி 8:9

## திணைமுறை

குறிஞ்சி: 1,5,6,8
பாலை: 2,3,7,9,
நெய்தல்: 4

## கூற்றுவகை

தலைவன் கூற்று: 3,6,8,9 தலைவி கூற்று: 1
தோழி கூற்று: 4,5,7, கண்டோர் கூற்று: 2

குறிப்பு:

10. ... பாடல்களின் மொத்த அடிகள்: 98
,, ,, மொத்த சீர்கள்: 383
,, ,, வேறுபடும் சீர்கள்: 73-19%
,, ,, தொடரடைவின் தொடர்கள்: 126
,, ,, சொல்லடைவின் சொற்கள்: 470.

## நற்றிணை - தொடரடைவு

அகல்வாய்ப் பைஞ்சுனைப் பயிர்கால் யாப்ப ... பெரும் பெயல் பொழிந்த தொழில எழிலி 5:2-5.

அடி; சேவடி - க. வா. 1.

அடுக்கம்: பெருவரை அடுக்கம் 7:2.

அத்தக் குமிழின் கொடுமுக்கு விளைகனி தெறிமட மாற்கு வல்சி ஆகும் 6:7-8.

அரங்கு: கட்டளை அன்ன வட்டரங்கு 3:3.

அரிதே காதலர்ப் பிரிதல் 5:7.

அரிவனர் அரிந்தும் ...தண்சேறுதாஅய் ..... நெய்தல் போர் விற் பூக்கும் 8:6-8.

அருவி: பெருவரை அடுக்கத்து அருவி 7:2.

அல்குபடர் உழந்த அரிமதர் மழைக்கண் 8:1.

அல்குல்: திதலை அல்குல் 6:4.
பல்பூம் பகைத்தழை நுடங்கும் அல்குல் 8:2.

அலமரல் வருத்தம் தீர யாழநின் நலமென் பணைத்தோள் எய்தினம் 9:3-4,

அலரே,

அன்னை அறியின் இவண்உறை,வாழ்க்கை அரிய ஆகும் 4:5-6.

அழிவில முயலும் ஆர்வ மாக்கள், வழிபடு தெய்வம் கண்கண் டா அங்கு 9:1–2.

அழுந்துபட வீழ்ந்த பெருந்தண் குன்றம் 2:1.

ஆறு: குறும்பல் ஊரநாம் செல்லும் ஆறு 9:12.

ஆறு செல் மாக்கள் சென்னி எறிந்த, செம்மறுத் தலைய நெய்த்தோர் வாய, வல்லியப் பெருந்தலைக் குருளை 2:3-5.

இருபெயல் தருஉம் வாடை 5:8.

இயன்ற எல்லாம் பயின்றுஅகத்து அடக்கிய வேத முதல்வன் - க. வா. 5-6.

இனியோள்: உள்ளிய வினைமுடித்து அன்ன இனியோள் 3:8.

ஈந்து: ஒலிவல் ஈந்து 2:2.

ஈன்பருந்து உயவும் வான்பொரு நெடுஞ்சினை 3:1.

உப்பு: வெண்கல் உப்பு 4:8.

உமணர் சகடம் ... மணல்மடுத்து உரறும் ஓசை ... வெண் குருகு இவரூஉம் 4:7–11,

உருமு: மால்வரை மிளிர்க்கும் உருமு 2:10.

உலகம்: நீரின்று அமையா உலகம் 1:6.

உள்ளினென் அல்லெனோ யானே 3:7.

ஊர்: இருங்கழிச் சேர்ப்பின்தம் உறைவுஇன் ஊர் 4:12.

எயிறு: வால் எயிறு 9:9.

எல்லிடை நீங்கும் இளையோன் உள்ளம் 2:8.

எழிலி: பெரும்பெயல் பொழிந்த தொழில எழிலி 5:5.
என்றும் என்தோள் பிரிபுஅறி யலர் 1:2.

ஏறு: தழங்குகுரல் ஏறு (இடி) 7:5.

ஓசை: கணநிரை கிளர்க்கும் நெடுநெறிச் சகடம், மணல் மடுத்து உரறும் ஓசை 4:9-10.

ஓரி: வல்வில் ஓரி 6:9.

கண்: அரிமதர் மழைக்கண் 8:1. குவளை யன்ன ஏந்துஎழில் மழைக்கண் 6:3. மழைக்கண் 5:9.

கண்போல் நெய்தல் போர்விற் பூக்கும் 8:8.

கட்டளை அன்ன வட்டரங்கு இழைத்துக் கல்லாச் சிறாஅர் நெல்லிவட்டு ஆடும் 3:3-4.

கழைமாய் நீத்தம் காடுஅலை ஆர்ப்ப 7:4.

கனி: அத்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி 6:7.

காடு: ஒலிவல் ஈந்தின் உலவை அம்காடு 2:2
வாடு பெருங்காடு 7:9.

கால்: தூம்புடைத் திரள்கால் 6:1.

காலை; அற்சிரக்காலை 5:6.

கான்யாறு: கல்அலைத்து இழிதரும் கடுவரற் கான்யாறு 7:3.

கானம்: மாநனை கொழுதி மகிழ்குயில் ஆலும், நறுந்தண் பொழில, கானம் 9: 10-11.

குயில்: (மாநனை கொழுதி) மகிழ்குயில் 9: 10.

குருகு: கருங்கால் வெண்குருகு 4: 11.

குருளை: பெருந்தலைக் குருளை 2: 5.

குறவர் கொன்ற குறைக்கொடி நறைப்பவர், நறுங்காழ் ஆரம் சுற்றுபு அகைப்ப 5: 3-4,

குறுமகள்: மழைக்கண் திதலை அல்குல் பெருந்தோள் குறு மகள் 6: 3-4.

குன்றம் குழைப்ப-பெரும்பெயல் பொழிந்த தொழில எழிலி 5: 1-5.

குன்றம்: பெருந்தண் குன்றம் 2:1.

கூந்தல்: இரும்பல் ஒலிவரும் கூந்தல் 6:10.

கேண்மை: புரையோர் கேண்மை 1:5.

சந்தனம்: சிறியிலைச் சந்து 7: 9.

சிலம்பு: கறிவளர் சிலம்பு 7: 8.

சிறாஅர்: கல்லாச் சிறாஅர் 3: 4.

சிறியிலைச் சந்தின வாடுபெருங் காடு 7: 9.

சிறுகுடி: கானல்அம் சிறுகுடி 4: 1.
சிறுமை உறுப செய்புஅறி யலர் 1: 9.
சினை: வான்பொரு நெடுஞ்சினை 3: 1.
சீறூர்: வில்ஏர் உழவர் வெம்முனைச் சீறூர் 3: 5.
சுரன்: மான்நோக்கு இண்டுஇவர் ஈங்கைய சுரன் 2: 6.
சுனை: சூருடை நனந்தலைச் சுனை 7: 1.
தம்இன்று அமையா நம்நயந்து அருளி 1: 7.
தழங்குகுரல் ஏறொடு முழங்கி வானம், இன்னே பெய்ய
மின்னும் 7: 5-6.
தாது: தாமரைத் தண்தாது 1: 3.
திசைகை ஆக - க. வா. 3.
திருமணி புரையும் மேனி மடவோள் 8: 3.
தீதுஅற விளங்கிய திகிரியோன் - க. வா. 7.
துயரம் உறீஇயினள் எம்மே 8: 5.
துறைவன்: அரில்வலை உணக்கும் துறைவன் 4: 4,
தூது: மழைக்கண் பயந்த தூது 5: 9.
தூநீர் வளைஞரல் பௌவம் உடுக்கை ஆக - க. வா. 1-2.
தெய்வம்: வழிபடு தெய்வம் 9: 2.
தேன்: தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச், சாந்தில்
தொடுத்த தீந்தேன் 1: 2-4.
தொண்டி தண்திறம் பெறுகஇவள் ஈன்ற தாய் 8: 9-10;
தொண்டி: திண்தேர்ப் பொறையன் தொண்டி 8: 9.
தோள்: நலமென் பணைத்தேள் 9: 4.
நறுநுதல் பசத்தல் அஞ்சி, சிறுமை உறுப செய்பு அறியலர் 1:8-9.
நிலம்நீர் ஆர - பெரும்பெயல் பொழிந்த தொழில எழிலி, 5:1-1.
நிழல்: நீல்நிறப் புன்னைக் கொழுநிழல் 4: 2.
நிழல்காண் தோறும் நெடிய வைகி 9: 7.
நின்ற சொல்லர் நீடு தோன்றுஇனியர் 1: 1.
நீடுதோன்று இனியர் 1:1.
நீத்தம்: கழைமாய் நீத்தம் 7:4.
நீர்வளர் ஆம்பல் தூம்புடைத் திரள்கால், நார் உரித் தன்ன
மதன்இல் மாமை 6:1-2.
நீழல்: வேம்பின் புள்ளி நீழல் 3:2.
நெய்தல்: மதனுடை நோன்தாள் கண்போல் நெய்தல் 8:7-8.
பசத்தல்: நறுநுதல் பசத்தல் 1:8.
பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ஆக - க.வா. 4.

பரதவர்: கானல்அம் சிறுகுடிக் கடல்மேம் பரதவர் 4:1.
பரப்பு: தண்பெரும் பரப்பு 4:3.
புரைய மன்ற புரையோர் கேண்மை 1:5.
புன்கு: பொரிப்பூம் புன்கு 9:5.
புன்னை: நீல்நிறப் புன்னை 4:2.
பெரும்பெயல் பொழிந்த... அற்சிரக் காலையும் அரிதே காதலர்ப் பிரிதல் 5:5-7.
பெரும்பே துறுவள்யாம் அலந்தனம் எனவே 6:11.
பொழில்: மகிழ்குயில் ஆலும் நறுந்தண் பொழில 9:10-11.
பொழுது: மனைமாண் சுடரொடு படர்பொழுது 3:9.
பொறையன்: திண்தேர்ப் பொறையன் 8:9.
பௌவம்: தூநீர் வளைஞரல் பௌவம் - க.வா. 2.
மடந்தை: வைஎயிற்று ஐயள் மடந்தை 2:7.
மணல்காண் தோறும் வண்டல்தைஇ வருந்தாது ஏகுமதி 9: 8-9.
மதியம்: பசுங்கதிர் மதியம் - க.வா. 1.
மாநிலம் சேவடி ஆக - க.வா. 1.
மாமை: மதன்இல் மாமை 6:2.
மாரி: காலொடு பட்ட மாரி 2:9.
மால்வரை மிளிர்க்கும் உருமு 2:10.
மாலை: சுரன்முதல் வந்த உரன்மாய் மாலை 3:6.
முலை: சுணங்கணி வனமுலை 9:6.
முறி: அழல்தகை ஒண்முறி 9:5.
மேனி: திருமணி புரையும் மேனி 8:3.
யார்மகள் கொல்இவள் தந்தை வாழியர் 8:4.
யானை: அண்ணல் யானை 7:7.
வல்வில் ஓரி கானம் நாறி, இரும்பல் ஒலிவரும் கூந்தல் 6:9-10.
வளைஞரல் பௌவம் - க.வா 2.
வாடை: இருபெயல் தரூஉம் வாடை, 5:8.
வாடையொடு மயங்கு இதழ் மழைக்கண் 5:8-9.
விசும்பு மெய் ஆக - க.வா. 3.
வெண்ணெல் அருந்திய அண்ணல் யானை, கறிவளர் சிலம்பில் துஞ்சும் 7:7-8.
வேம்பு: வான்பொரு நெடுஞ்சினைப் பொரியரை வேம்பு 3:1-2.

## நற்றிணை - சொல்லடைவு

அகத்து — உள்ளிடத்து, க.வா.5

அகல்வயல் — அகன்ற வயல் 8:5

அகல்வாய்ப் பைஞ்சுனை—அகன்ற வாயையுடைய பசிய சுனை 5:2

அகைப்ப — தளிர்ப்ப 5:4

அங்கண் — அவ்விடத்தே 4:4

அசைஇ (வி) — தங்கி 4:2

அஞ்சி (வி) — நடுங்கி 1:8

அடக்கிய (வி)—ஒடுக்கிய, க.வா.5

அடி — கால் க.வா.1

அடுக்கம் — பக்கமலை 7:2

அண்ணல்யானை — தலைமை சான்ற யானை 7:7

அணங்கு — வருத்தம் 9:6

அணி (வி) — அணிந்த 9:5

அத்தக்குமிழின் — சுரத்திலுள்ள குமிழ மரத்தின் 6:7

அத்து—சாரியை,க,வா. 5, 2:1,7:2

அம் — அழகிய 2:2, 4:1

அமையா — தணியா 1:6,1:7

அரங்கு — இடம் 3:3

அரிதே — அருமையதே 5:7

அரிந்தும் - அறுத்துப்போட்டும்8:6

அரிமதர் மழைக்கண் — செவ்வரி பரந்த மதர்த்த குளிர்ந்த கண் 8:1

அரிய — அருமைய 4:6

அரில்வலை—பிணக்குண்ட வலை 4:4

அரிவனர் — அரிபவர் 8:6

அருந்திய (வி) — உண்ட 7:7

அருவி — மலைவீழ் அருவி 7:2

அரை — அடி 3:2

அல்குபடர் — மிக்க துன்பம் 8:1

அல்குல் — வயிற்றின் அடிப்பகுதி 6:4, 8:2

அல்லள் — அல்லாதவள் 6;6

அல்லெனோ—அல்லனோ 3:7

அலந்தனம் —துன்புற்றனம் 6:11

அலமரல் — சுழலுதல் 9:3

அலரே — பழிச்சொல்லே 4:5

அலை — திரை 7:4

அலைத்து (வி) — வருத்தி 7:3

அழல்தகைஒண்முறி - நெருப்புப் போலும் ஒள்ளிய தளிர் 9:5

அழிவில — அழிவில்லாத 9:1

அழுந்துபட (வி)-ஆழ்ந்துபட 2:1

அற்சிரக்காலையும் — முன்பனிக் காலத்தும் 5:6

அற (வி) — நீங்க க.வா.7

அறியலர் — அறியாதார் 1:2,1:9

அன்ன—உவமஉருபு 3:3,3:8,6:3,

அன்னை — தாய் 4:5

ஆஅங்கு — உவம உருவு 9:2

ஆக (வி) — ஆகவும் - கா.வா.1, 2,3,(2)4

ஆகலின் (வி) — ஆதலின் 9:4

ஆகும் (வி) 4:6,6:8

ஆடும் (வி) 3:4

ஆம்பல் — ஆம்பல் மலர் 6:1

ஆர்ப்ப (வி) — ஆர்க்கும் படியாக 7:2,7:4

ஆர்வ மாக்கள்-ஆர்வம் கொண்ட மாந்தர் 9:1

ஆர (வி) — நிறைய 5:1

ஆரம் — சந்தனம் 5:4

ஆல் — அசைநிலை 7:6

ஆலும் — கூவும் 9:10

ஆறுசெல் மாக்கள் — வழிச்செல் வோர் 2:3

ஆறே — வழியே 9:12

இகுபெயல்-சொரிகின்ற மழை5:8

இடை — இடம் 2:8

இண்டு — இண்டங்கொடி 2:6

இதழ் — கண்ணிமை 5:9

இயன்ற (வி) — செய்த,க.வா.5

இரங்கும் (வி) — ஒலிக்கும் 5:6

இருங்கழி — கரிய கழி 4:12

இருப்பல் — கரிய பலவாகிய 6:9

இலை — தழை 7:9

இவண் — இங்கு 4:5

இவர் (வி) - படர் (தல்) 2:6

இவர் - அண்மைச்சுட்டு 6:6

இவள் ,, 8:4, 8:10

இழிதரும் - வீழும் 7:3

இழைத்து (வி) - செய்து 3:3

இளையோன் — இளவயதுடையோன் 2:8

இன்-சாரியை 1: 4, 2:2, 2:10, 3:2, 4:12, 7:8, 9:5,

இன்று — இன்றி 1:6, 1:7
இன்று — இந்நாள் 5:7
இன்னே — இப்பொழுதே 7:6
இனியர் - இனிமையானவர் 1:1
இனியோள் — இனிமையுடை யோள் 3:8
ஈங்கைய (வி) — ஈங்கையை யுடைய 2:6
ஈந்தின் — ஈந்த மரத்தின் 2:2
ஈன்பருந்து — முட்டை ஈன்ற பருந்து 3:1
ஈன்ற — பெற்ற 8:10
உடுக்கை — உடை, க. வா. 2
உடை (இ) உடைய 6:1, 7:1,8:7
உணக்கும் — உலர்த்தும் 4:4
உப்பின் (வி) 4:8
உம் — விகுதி 2:10, 5;6
உமணர் — உப்புவாணிகர் 4:7
உயவும் (வி) — வருந்தும் 3:1
உரறும் (வி) — முழங்கும் 4:10
உரன் — வலிமை 3:6
உரித்து (வி) தோல் நீக்கி 6:2
உருமினும் - இடியைக் காட்டிலும் 2:10
உலகம் — நிலம் 1:6
உலவை — உலர்ந்த 2:2
உழந்த — (வி) வருந்திய 8:1
உழவர் — ? 3:5
உள்ளம் — நெஞ்சம் 2:8
உள்ளியவினை-கருதியசெயல் 3:7
உள்ளினென் (வி) - நினைத் தேன் 3:7
உற்று (வி)—சேர்தலினாலே 2:7
உறீஇயினள்(வி)—உறுத்தினவள் 8:5
உறுப — உறுகின்ற 1:9
உறை — உறைகின்ற 4:5
உறைவு — தங்கல் 4:12
ஊதி — ? 1;3
ஊர்க்கே ? 4:12
ஊர — விளி, ஊரினையுடை யவனே 9:12,
எம்மே — எம்மையே 8:5
எய்த(வி)—பொருந்த 6:5
எய்தினம் (வி) பொருந்தினம் 9;4
எயிற்று — பல்லினையுடைய 2:7
எயிற்றோய் — பல்லினையுடை யோய் 9:9
எல்லாம் — முழுதும், கா.வா.5
எல்லிடை — இரவிடை 2:8
எழில் — அழகு 6:3
எழிலி — மேகம் 5:5
எறிந்த (வி) வீசிய 2:3
என்குவள் — என்பாள் 6:6
என்தோள் — 1;2
என்ப—என்று சொல்லுவர் கா.வா.5
என்றும் — எந்நாளும் 6:3
என — என்று சொல்லும் படியாக 4:6
எனவே — என்பதால் 3;9
ஏ — அசைநிலை, க.வா.7, 1:2, 9, 2:6, 10, 3:7,9, 4:5,12,5:7,9, 6:510 7,9,8:5, 10, 9:9,12
ஏகுமதி (வி) — செல்வாயாக 9:9
ஏந்துஎழில் — மிக்க அழகு 6:3
ஏர் — ஒப்பு 3:5
ஏர்பு (வி) — எழுந்து 5:6
ஏறொடு — இடியொடு 7:5
ஐயள் — மெல்லியல் 2:7
ஒடு - மூன்றன் உருபு க.வா.4, 2:9,3:9,4:4,5:8,7:5.
ஒண்பதம் — நல்ல நேரம் 4:3
ஒண்முறி — ஒள்ளிய தளிர் 9:5
ஒலிவரும் கூந்தல் — தழைத்து வீழும் தலைமுடி6:9
ஒலிவல் ஈந்தின் — தழைத்துள்ள வலிய ஈந்த மரத்தின் 2:2
ஓசை — ஒலி 4:10
ஓரி — ஓரி என்னும் தலைவன்6:9
கட்டளை — பொன்னுரைக்கும் கல் — உரைகல் 3:3
கடல்மேம் பரதவர் — கடல் மேல் விரும்பிச்செல்லும் மீனவர் 4:1
கடுவரல் — விரைந்த வரவு 7:3
கண் — (கண்என்னும் உறுப்பு) க.வா. 4,5:9,6:3, 8:1,8, 9:2
கண்டாஅங்கு (வி) — எதிர்ப் பட்டவாறு 9:2
கணநிரை — மிக்க கூட்டம் 4:9
கதிர் — ஒளி க.வா.4
கருங்கால் வெண்குருகு — ஒரு வகை நாரை 4:11
கல் — பாறை 4:8,7:3
கல்லாச் சிறாஅர் — தொழில் ஒன்றும் கல்லாத சிறுவர் 3:4

கழனி — வயல் 4:10
கழி — கடலையடுத்த உப்பு நீர்ப் பரப்பு 4:12
கழைமாய்நீத்தம் - மூங்கிலையும் மூழ்கச் செய்யும் வெள்ளம் 7:4
கனி — பழம் 6:7
காட்டு — காட்டினிடத்தே 2:2
காட்டே — காட்டினிடத்தே 7:9
கறிவளர் — மிளகுக்கொடி வளர் கின்ற (வி) 7:8
காடு — காடு, பாலை நிலம் 7:4
காண்தோறும் — (வி) பார்க்கும் தோறும் 9:7,8
காதலர் — அன்புடையவர், தலைவர் 5:7
கால் — அடி 4:11, 5:2, 6:1
காலை — 5:6
காலொடு - காற்றொடு 2:9
காழ் — முற்றிய 5:4
கான்யாற்று — காட்டாற்றின் 7:3
கானம் — காடு 6:9, 9:11
கிளர்க்கும் — எழுப்பும் 4:9
கு — 4-ம் வேற்றுமை உருபு 4:12, 5:8
குடி — வீடு 4:1
குமிழின் — குமிழமரத்தின் 6:7
குயில் — இன்னொலி எழுப்பும் ஒரு பறவை 9:10
குரல் — ஒலி 7:5
குருகு — பறவை 4:11
குருளை — குட்டி 2:5
குவளை — குவளை மலர் 6:3
குழைப்ப — தழைப்ப 5:1
குறவர் — கானவர் 5:3
குறும்பல் ஊர — குறிய பல வாகிய ஊரையுடையவனே 9:12
குறுமகள் — இளமகள் 6:4
குறைக்கொடி — குறைக்கப்பட்ட கொடி 5:3
குன்றம் — குறுமலை 2:1, 5:1
கூந்தல் — மகளிர் தலைமயிர் 6:9
கூறின் (வி) — சொல்லின் 4:6
கேண்மை — நட்பு 1:5
கை — க.வா.3
கொடி — படர்கொடி 5:3
கொடிதே - கொடுமையானதே 2:10
கொடுமூக்கு-வளைந்த மூக்கு 6:7
கொண்டும் (வி) - தழுவியும் 4:7
கொல் (இ)—ஐயப்பொருளது 4:7
கொழுதி (வி) — கோதி 9:10
கொழுநிழல்—செறிந்த நிழல் 4:2
கொள்ளை — விலை 4:8
கொள (வி) — வாங்க 9:6
கொன்ற (வி) — வெட்டிய 5:3
சகடம் — வண்டி 4:9
சந்தின (வி)-சந்தனமரத்தின 7:9
சாந்தின் — சந்தனமரத்தின் 1:4
சாற்றி — விற்று 4:8
சிலம்பின் — மலையின் 7:8
சிறாஅர் — சிறுவர் 3:4
சிறியிலைச்சந்தின—சிறிய இலைகளையுடைய சந்தனமரத்தின 7:9
சிறுகுடி — சிறு குடியிருப்பு 4:1
சிறுமை — நோய் 1:9
சினை — கிளை 3:1
சீறூர் — சிறிய ஊர் 3:5
சுடர் — ஞாயிறு க.வா. 4,3:9
சுணங்கு — தேமல் 9:6
சுரன் — காட்டுவழி பாலைநிலம் 3:6
சுரனே—காட்டுவழியே, பாலை நிலத்தே 2:6
சுற்றுபு(வி) — சுற்றி 5:4
சுனை — நீர்ச்சுனை 5:2
சுனைநீர் — 7:1
சூருடைநனந்தலை — தெய்வம் பொருத்திய அகன்ற இடம் 7:1
செப்புநர் — சொல்லுபவர் 6:5
செம்மறுத்தலைய (வி) — சிவந்த கறைபடிந்த தலைய 2:4
செய்புஅறியலர் — செய்தலையறியார் 1:9
செல்-மேகம் 5:7
செல் (வி)-போ 2:3
செல்லும் (வி) போகும் 9:12
செல்வர் —செல்வம் மிக்கவர் 4:7
சென்று (வி) — போய் 6:5
சென்னி — தலை 2:3
சேர்ப்பின் — கடற்கரையின் 4:12
சேவடி — செந்நிற அடி க.வா.1
சேறு – சகதி 8:7
சொல்லர் — சொல்லினையுடையர் 1:1

ஞரல் (வி) — முழங்கு கா.வா.2
தகை— அழகு 9:5
தண் — குளிர்ச்சி 8:10,9:11
தண்குன்றம் — குளிர்ந்த மலை 2:1
தண்சேறு — குளிர்ந்த சேறு 8:7
தண்தாது–குளிர்ந்த பூந்தாது 1:3
தண்பெரும்பரப்பின் - குளிர்ந்த பெரும் கடலின் 4:3
தந்தை 8:4
தம் - தம்முடைய 4:12
தம்மின்று-தம்மை இல்லாமல் 1:7
தருவனர் - கொண்டு தருபவர் 8:6
தரூஉம் (வி) — கொடுக்கும் 5:8
தலை - தலை உறுப்பு 2:5
தலைய - தலையையுடைய 2:4
தழங்குகுரல் - ஒலிக்கும் குரல் 7:5
தழை – இலை 8:2
தாஅய் (வி) - பரவிய 8:7
தாது - பூந்தாது 1:3
தாமரை - தாமரைமலர் 1:3
தாயே – 8:10
தாழ்ந்த - நீண்ட, தொங்கிய 0:2
தாள் - அடி 8:7
திகிரியோன் - சக்கரத்தை உடையோன், மாயோன் க.வா.7
திசை – திக்கு க.வா.3
திண்தேர் - வலிய தேர் 8;9
திதலைஅல்குல் — தேமல்வரி படர்ந்த அல்குல் 6:4
திமிரி – அப்பி, பூசி 9:6
திரள் - திரட்சி 6:1
திருமணி - மாணிக்கமணி 8:3
திறம் கூறுபாடு 8:10
தீதற - குற்றம் நீங்க க.வா.7
தீந்தேன் - இனியதேன் 1:4
தீர - நீங்கும்படி 9:3
துஞ்சும் - உறங்கும் 7:8
துயரம் – துன்பம் 8:5
துறைவனொடு - கடல்நிலத்தலைவனொடு 4:4
தூது - தூது அனுப்புதல் 5:9
தூநீர் வளைஞரல் பௌவம் - தூயவளைகள் ஒலிக்கின்ற கடல் க.வா.1–2
தூம்புடைத்திரள்கால் - உட்துளை கொண்ட திரண்ட தண்டு 6:1
தெய்வம் - 9:2
தெற்குஏர்பு - தெற்குப்பக்கம் ஏறி 5:6
தெறி (வி) - துள்ளி 6:8
தேர் – 8:9
தேன் - தேன் இறால் 1:4
தைஇ(வி) – அணிந்து, கட்டி 9:8
தொடுத்த (வி) – கட்டிய 1:4
தொண்டி - ஓர் ஊர் 8:9
தொழில (வி) – தொழிலையுடைய 5:5
தோழி 4:7,7:6
தோள் 1:2, 6.4, 9:4
தோன்று (வி) - தோன்றுதல் 1:1
நம்நயந்து(வி)-நம்மைவிரும்பி 1:7
நமக்குஎன- 4:6
நயந்து - விரும்பி 1:7
நலமென் - நலஞ்சான்ற மெல்லிய 9:4
நறுங்காழ் ஆரம்-மணம் கமழும் முற்றிய சந்தனம் 5;4
நறுந்தண் பொழில - மணம் கமழும் குளிர்ந்த சோலையை யுடைய 2:11
நறுநுதல்-மணம் கமழும் நெற்றி 1:8
~~நறும்-மணம் கமழும் 7:8~~
நறைப்பவர்-நறை என்னும் ஒரு வகை படர் கொடி 5:3
நனந்தலை-அகன்ற இடம் 7:1
நனை – அரும்பு 9:10
நாம் 9:12
நார் - பட்டை 6:2
நாறி - மணந்து 6:9
நிரை - கூட்டம் 4:9
நிலம் - உலகம் க.வா. 1
நிழல் 4:2,9:7
நிறம் - வண்ணம் 4:2
நின - உன்னுடைய 9:3
நின்ற சொல்லர் - மாறாத சொல்லர் 1:1
நீங்கும் - விலகும் 2:8
நீடுதோன்றினியர் - நெடிதாகத் தோன்றும் இனிமைப் பண்பினர் 1:1
நீத்தம் - வெள்ளம் 7:4
நீர் — தண்ணீர் 5:1,7:1

நீர்வளர் ஆம்பல் — நீரில் வளரும் ஆம்பல் 6:1
நீரின்று — தண்ணீர் இல்லாமல் 1:6
நீல்நிறப் புன்னை — நீலநிறம் கொண்ட புன்னை மரம் 4:2
நீழல் — நிழல் 3:2
நுடங்கும் (வி) — அசையும் 8:2
நுதல் — நெற்றி 1:8
நெடிய (வி)—நீண்ட 9:7
நெடுஞ்சினை-நீண்டகிளை 3:1
நெடுநெறி — நீண்டவழி 4:9
நெய்த்தோர்–இரத்தம் 2:4
நெய்தல்-நெய்தல் மலர் 8:8
நெல் — 7:7
நெல்லி — நெல்லிமரம் 3:4
நெறி — வழி 4:9
நோக்கி -(வி)– பார்த்து 4:3
நோக்கும் (வி) - பார்க்கும் 2:6
நோன்தாள் — வலியதாள் 8:7
பகை — மாறுபாடு 8:2
பசத்தல் (வி) - பசலை படர்தல் 1:8
பசுங்கதிர்மதியம் - குளிர்ந்த ஒளிவீசும் திங்கள் க:வா.4
பட்ட — கூடிய 2:9
படர் — துன்பம் 8:1
படர்பொழுது - துன்பப்படும் பொழுது 3:9
பணைத்தோள் - மூங்கில் போலும் தோள் 9:4
பதம் — உரிய காலம் 4:3
பயந்த — பயன்தந்த 8:9
பயிர் — 5:2
பயின்று(வி)-தொடர்ந்து-க.வா.5
பரதவர் - மீன்பிடிப்போர் 4:1
பரப்பின் - கடலின் 4:3
பருந்து - 3:1
பல் - பல் உறுப்பு 9:12
பல்பூம் பகைத்தழை — பல பூக்களால் மாறுபடத்தோடுக்கப் பட்ட தழைஉடை 8:2
பிரிதல் (வி)-விட்டுநீங்குதல் 5:7
பிரிபு (வி) - பிரிதல் 1:2
புரைய (வி) - உயர்ந்த 1:5
புரையும் (வி) - ஒப்பாகும் 8:3
புரையோர்(வி)-உயர்ந்தோர் 1:5
புள்ளிநீழல்-புள்ளிபட்ட நிழல் 3:2
புன்கின் - புன்கமரத்தின் 9:5
புன்னை — புன்னை மரம் 4:2
பூ — 8;2,9:5
பூக்கும் (வி) — மலரும் 8:8
பெய்ய (வி) - பெய்வதற்கு 7:6
பெயல் - மழை 5:5
பெருங்காட்டே — பெரிய காட்டிடத்தே 7:9
பெருந்தண் குன்றத்து — பெரிய குளிர்ந்த மலையிடத்து 2:1
பெருந்தலை 2:5
பெருந்தோள் 6:4
பெரும் — பெரிய 4:3
பெரும்பெயல்-மிகுந்தமழை 5:5
பெரும்பேதுறுவள் — பெரிதும் வருந்துவள் 6:10
பெருவரை அடுக்கம் — பெரிய மூங்கில்களைக் கொண்ட பக்க மலை 7:2
பெற்றும் (வி) - பெற்றுக் கொண்டும் 8:6
பெறினே (வி)- பெற்றால் 6:5
பெறுக (வி)- பெறுவாயாக 8:10
பேதுறுவள்(வி)-துன்புறுவள் 6:10
பைஞ்சுனை - பசிய சுனை 5:2
பொரிப்பூம் புன்கு - பொரி போன்ற பூவினையுடைய புன்கு 9:5
பொரியரை வேம்பின் — பொரிந்த அடியையுடைய வேம்பின் 3:2
பொரு — ஒப்பு 3:1
பொழிந்த (வி) - பெய்த 5:5
பொழில(வி) – சோலையை யுடைய 9;11
பொழுது- 3:9
பொறையன்-ஒரு தலைவன் 8:9
போர்வில்-நெற்சூட்டில் 8:8
போல்- 8:8
போல- உவம உருபு 1:4, 1:6
பௌவம்-கடல் க.வா.2
மகள்-பெண் 6:4,8:4
மகிழ்குயில்-மகிழ்கின்ற குயில்9:10
மடந்தை-இளம் வயதினள்,மடந்தைப் பருவத்தினள் 2:7
மடமாற்கு-இளமானுக்கு 6:8
மடவோள்—இளையோள் 8:3
மடுத்து(வி) -செலுத்தி 4:10

மணல் 4:10,9:8
மணி—நீலமணி 8;3
மதர்(வி)-துடிப்புள்ள 8:1
மதனின்மாமை-அழகினையுடைய மாமை 6:2
மதனுடைநோன்தாள்-அழகுடைய வலிய தண்டு 8:7
மதி(இ)-முன்னிலை அசை 9:9
மதியம் - திங்கள் க.வா.4
மயங்குஇதழ்-கலங்கிய கண்ணிமை 5:9
மல்க(வி) நிறைய 7:1
மழைக்கண்-குளிர்ந்த கண் 5:9, 6:3,8:1
மறு – கறை 2:4
மன்ற—நிச்சயமாக 1:5
மனைமாண் சுடரொடு-மனையை மாட்சிமை செய்யும் விளக்கொடு 3:9
மாக்கள் - மக்கள் 2:3, 9:1
மாண் — மாட்சிமை 3:9
மாநனை - மாவின் அரும்பு 9:10
மாநிலம் - பெரிய நில உலகம் க.வா.1
மாமை- அழகு, மாமை நிறம் 6:2
மாய் (வி) — மாய்க்கின்ற3:6,7:4
மாரி — மழை 2;9
மால்வரை — பெரிய மலை 2:10
மாலை — மாலைக்காலம் 2:5
மான் 2:6,6:8.
மிசை — மேலே 1:3
மிளிர்க்கும் (வி) — புரட்டும் 2:10
மின்னுமால் (வி) — மின்னும் 7:6
மீமிசை — மிக உயரத்தில் 1:3
முடித்துஅன்ன — முடித்ததைப் போல 3:2
முணாஅது — வெறுக்காது 5:6
முதல் — காரணம் 3:5
முதல்வன் — கடவுள் க.வா.6
முயலும் (வி)-முயன்று தேடும் 9:1
முலை 9:6
முழங்கி — ஒலித்து 7:5
முறி — தளிர் 9:5
முன்னுற்று (வி) — முன்னே செலுத்தி 2:7
முனை — பகைப்புலம் 3:5
மூக்கு — முன்பகுதி 6:7
மெய் — உடம்பு க.வா.3
மென்பணைத்தோள்—மென்மையான திரண்டதோள் 9:4
மேம் (வி)-விரும்பும் (மேவும்)4:1
மேனி—வடிவு 8:3
யாப்ப —பரவ 5:2
யாம் — நாம் 6:10,9:12
யார் — வினா 6:6,8:4
யாழ — முன்னிலை அசை 9:3
யாற்று —ஆற்றினிடத்தே 7:3
யானே – நானே 3:7
யானை— 7;7
வண்டல் — வண்டல் மண் 9;8
வட்டாடும் —கழங்காடும் 3:4
வட்டரங்கு-கழங்காடும்இடம் 3:3
வந்த (வி) 3:6
வயல் 8:5
வரல் (வி) - வருதல் 7:3
வருத்தம் — துன்பம் 9:3
வருந்தாது — துன்புறாது 9:9
வரும் 6:9
வரை—மூங்கில், மலை 2:10,7:2
வல் — வலிய 2:2
வல்சி — உணவு 6:8
வல்லியம் — புலி 2:5
வல்வில் ஓரி—ஒரு தலைவன் 6:9
வலை — மீன் வலை 4:4
வழிபடு தெய்வம் - வழிபடும் கடவுள் 9:2
வளர் (வி) – வளர்கின்ற 6:1,7:8
வளைஞரல் — சங்கு ஒலிக்கும் க.வா. 2
வனமுலை-அழகிய முலை 9:6
வாடு (வி) - வாடுகின்ற 7:9
வாடையொடு — வாடைக் காற்றொடு 5:8
வாய் — இடம் 5;2
வாய — வாயினையுடைய 2;4
வால்எயிற்றோயே — வெள்ளிய பற்களையுடையோளே 9:9
வாழ்க்கை — தொழில் 4:5
வாழியர் — வாழ்வாராக 8:4
வான்பொரு நெடுஞ்சினை — வானளாவிய நீண்ட கிளை 3:1
வானம் — விசும்பு 7:5
விசும்பு — வானம் க.வா.3
வில் - படைக்கருவி 6:9
வில்லேர் உழவர்-வேடுவர் 3:5

விளங்கிய (வி)- ஒளிவீசும் க.வா.7
விளைகனி — முற்றிய கனி 6:7
வினை-தொழில் 3:8
வீழ்ந்த (வி) -இறங்கிய, பெய்த 2:1
வெண்கல் உப்பின்-வெள்ளிய கல்லுப்பின் 4:8
வெண்குருகு-வெள்ளிய நாரை 4:11
வெண்ணெல்-மலைநெல், ஐவனம் 7:7
வெம்முனை-கொடிய இடம் 3:5
வெரூஉம் (வி)-அஞ்சும் 4:11
வேதமுதல்வன்-மாயோன், திருமால் க.வா. 6
வேம்பின்-வேப்ப மரத்தின் 3:2
வைகி (வி)-தங்கி 9:7
வையெயிற்று ஐயள்-கூரிய பற்களையுடைய மெல்லியல் 2:7